Koviloor Digital Library

தொண்டைமண்டல வரலாற்றுக் கருத்தரங்கம்

மற்றும்

தமிழகத் தொல்லியல் கழக ஏழாம் ஆய்வரங்கம்

2, 3 - 6 - 1996

ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு



தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழகத் தொல்லியல் கழகம்

தமிழக நாணயவியல் கழகம்

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

7847

Koviloor Digital Library

Koviloor Digital Library

6-6

ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பு

வ.எண்.	தலைப்பு ஆசிரியர்	பக்கம்
1.	நாக உக்கிர தட்சிணாமூர்த்தி வடிவம் –முனைவர் த.சந்திரகுமார்.	1
2.	தக்கோலத்து அரிய கவைதி கோ.திருமூர்த்தி.	4
3.	சிறுமூர் கல்வெட்டு பி.ஜ.இளங்கோவன்	5
4.	வல்லம் சம்புவராயர் கல்வெட்டு க.ஈஸ்வரன்	7
5.	மணிமுத்தாறு படித்துறைக் கல்வெட்டு ச.செல்வராஜ்	9
6.	ஒரத்தி வரலாறு – ஒரு முன்னோட்டம் –டெ.க. தங்க. ஜீவாநடேசன்	11
7.	பரமக்குடி அருகே ஒரு பரப்பினை அளிக்கும் கல்வெட்டு –முனைவர் ஆர்.கே.அழகேசன்	15
8.	வரலாற்றுக் கதை சொல்லும் பெரியார் மாவட்டக் கல்வெட்டுகள் – புலவர் அ.பழனியப்பன்	17
9.	சிவபுரிப்பட்டியில் சிறப்புமிகு கல்வெட்டு –சீ.இலட்சுமணன்	21
10.	அத்தாணி ஓர் ஆய்வு –முனைவர் ஆர்.ரங்கராசன்	23
11.	விஜயநகரர் காலத்து கைக்கோளர்கள் –முனைவர் ப.சந்திரசேகரன்	29
12.	அரசுருடையான் செங்கல் வாயன் –முனைவர் நா.வைரவேல்	32
13.	அன்னார் கல்வெட்டுகளில் சில அரிய செய்திகள் –மு.ம.கோபாலன்	34
14.	கொல்லிமலை செப்பேடு –வெ.நா.ஈரைசாமி.	38

A. No. 7847
ND

Koviloor Digital Library

15. புத்தரும் செப்பேடு 38
-நாக.கணேசன்

16. இராமேசுவரம் அரசிலின்ன சாதனம் 45
-முனைவர் எம்.எஸ்.கமால்

17. பேரூர் ஆதீன தமிழ் சுவடிகள் 48
முனைவர் இ.சுந்தரமூர்த்தி

18. மறைந்த மைலாபுரிக் கோயில்களும் ஓலைச் சுவடிகளும்-முனைவர் கா.அரங்கசாமி 52

19. தமிழ் எண்கள் 57
-மா.வெண்ணிலா

20. காலிங்கர் - முத்த எத்திராசன் 61

21. தமிழ்ச் சுவடியில் மாந்திரிகமும் மந்திரமும் 65
-டி.பூமிநாகநாதன்

22. சிலப்பதிகாரப் பதிப்புகள் 71
-முனைவர் மகாலெட்சுமி

23. தஞ்சையில் தொண்டைமானார் வைத்த அகரம் 77

24. 4th Century B.C.Greek coin 81
- Professork.A.Thirugnasambandam

[த.ஓ]
V.3

Koviloor Digital Library

1. தொண்டை மண்டலத்து கோழிக்கற்கள்
   ஐராவதம் மகாதேவன்
2. பல்லவர் கால அறிய சிற்பங்கள் – ஞ. தாமோதரன்.
3. கணபதி வழிபாடு – ஒரு மறு ஆய்வு – முனைவர் மார்க்சியகாந்தி.
4. ஆலங்காயம் பாறை ஓவியங்கள் ஆர். வசந்தகல்யாணி.
5. பரிணாமம் – பழைய கற்கருவிகளின் தொழிற்கூடம் – ந. ஞானசிராமன்.
6. கச்சிராபாளையத்தில் கிடைத்த அச்சுறுத்திய நாணயங்கள் ஒரு
   தொழில் நுட்ப ஆய்வு – முனைவர் ஜெயராஜா.
7. அம்பாசமுத்திரத்தில் ஒரு புதிய கல்வெட்டு – ஜெ. கிறிஸ்டி வேதா.

ஞா.வீ.

Koviloor Digital Library

ஞானஉக்ர தட்சிணாமூர்த்தி வடிவம்

முனைவர் த.சந்திரகுமார்
இணைப் பேராசிரியர்
சிற்பக்கலை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

குருவடிவம் தாங்கி சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகியோருக்கு வேதாகம புராணங்களையும் உபநிடத உண்மைகளையும் உபதேசித்தவராகவும் சாந்தமிகக் கொண்டவராகவும் தட்சிணாமூர்த்தி கருதப்படுபவர். இவர் யோக வடிவம் தாங்கி ஞானத்தை வழங்குபவர். தென்முகக்கடவுள் என்று அழைக்கப்படுபவர். தட்சம் என்றால் குரு என்ற பொருளிலும் இவரை கொள்வர். இவரை ஞான, வியாக்யான, யோக, கான தட்சிணாமூர்த்தி என்ற நான்கு பெரும் வடிவங்களாகக் கொள்வர். மேலும் சக்தியுடன் கூடிய தாம்பத்ய-தட்சிணாமூர்த்தி எனவும் அர்த்தநாரீசுவர வீணாதர தட்சிணாமூர்த்தி எனவும், நந்தியின் மீதமர்ந்த ரிஷபாரூடதட்சிணாமூர்த்தி எனவும், சம்உறார அல்லது உக்ர அல்லது ஞானருத்ரா தட்சிணாமூர்த்தி போன்ற வடிவங்களாகவும் கொள்வர்.[1] இதில் அர்த்தநாரீசுவர வீணாதர தட்சிணாமூர்த்தி கர்நாடக மாநிலத்திலுள்ள பாதாமி குடைவரைக் கோயிலிலும், திருவாஞ்சியம் சுவாமி மிராகத்திலும் (சுதைச் சிற்பம்) (நாராயணசுவாமி 1991:147), தாம்பத்ய தட்சிணாமூர்த்தி சித்தூர் மாவட்டத்திலுள்ள (ஆ.பா) சூட்டப்பள்ளியிலும் (13-ஆம் நூற்றாண்டு) திருப்பனந்தாள் அருணஜடேசுவரர் கோயில் மேற்கு கோபுரத்திலும் (நாராயணசுவாமி 1991:146-7), தஞ்சாவூர் பாலதண்டாயுதபாணி கோயிலிலுமுள்ள (நாராயணசுவாமி 1991:70, சந்திரகுமார் 1994:107-11) சிற்பங்கள் விளக்குகிறது. ரிஷபாரூட தட்சிணாமூர்த்தி குவாலியர் அருங்காட்சியகத்திலும் (மத்திரப் பிரதேசம்) உள்ளது. ஆனால் சம்மார தட்சிணாமூர்த்தி வடிவம் எங்கும் காணப்படவில்லை என்பதனைக் கருத்திற்கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது.

சம்மார தட்சிணாமூர்த்தியின் வடிவத்தினை நாம் ஆய்வு செய்யும் போது புராணக் கதைகளை இங்கே நோக்கற்குரியது. பார்வதியின் தந்தையாகியதட்சன் நடத்திய யாகத்தில் தன் பருமனை அழைக்காமல் சிறுமைப்படுத்தியதினால் வீரபத்திரரை ஏவி யாகத்தை அழிக்கச் செய்கிறார். இதனைத் தொடர்ந்து சிவ-தாட்சாயிணி பிணக்கு ஏற்படுகிறது. சிவன் கடும் தவத்தை மேற்கொள்கிறார். தாட்சாயிணி இமயவனின் பெண்ணாகப் பிறந்து தபோ நிலையிலிருக்கும் சிவனுக்கும் பணிவிடை செய்கிறார். இதனிடையில் தாரகாசுரன் தேவர்களுக்குக் கடும் இன்னலை விளைவிக்கிறான். அவனை அழிக்க சிவனால் மட்டும் முடியும் காரியம் என்பதினால் அவரின் தவத்தைக் கலைத்து விடுவதினாலும் அவரால் பிறக்கும் மைந்தனால்தான் தாரகனை அழிக்க இயலும் என்று தேவர்கள் கருதியதினால் காமனை ஏவுகின்றனர். காமன் மலரம்பு தொடுக்கிறான். தவம் கலைந்ததினால் வெகுண்டெழுந்த சிவன் மன்மதனை எரித்துச் சாம்பலாக்குகிறார். சிவன் பார்வதிய மனந்து சுப்ரமணியக் கடவுள் தோன்றி தாரகனை அழிக்கிறார் என்று சிவபுராணம் ருத்ரசம்கிதை கூறுகிறது.

காமந்தக மூர்த்தியான சிவனை யோகதட்சிணாமூர்த்திக்குரிய சிற்ப அமைதியுடன் சித்திரிக்கப்பட வேண்டும் என்று உத்தரகாமிகாமம், சுப்ரபேதாகமம், பூர்வகாரணாகமம் போன்ற ஆகமங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன (ராவ் 1971:3:148). அவரின் எதிரில் மன்மதன் விழுவது போன்று காட்டப்பட வேண்டும் என்று கூறுகிறது.

Koviloor Digital Library

முனைவர் ந. சந்திரகுமார்

ஸ்ரீவாதேந்திர சரஸ்வதியின் பிரபஞ்சார சாரசங்கரகம் (17-ஆம் நூற்றாண்டு) (பதிப்பு சாஸ்திரி: 1963:714) என்ற நூல் சம்உறார தட்சிணாமூர்த்தி என்று குறிப்பிடுகிறது. சிறப்பு மிகக் கொண்டவராக சிவன் முதலில் வீரபத்திரரைத் தோற்றுவித்து தட்சனை அழிக்கவும், சிவ-சக்தி பிரக்கும் சிவன் கவிதையும் பிள்ளை பண்பதனை அழிக்க சம்உறாரம் செய்ததினால் சம்உறார தட்சிணாமூர்த்தி என்று அழைக்கப்படுகிறார். அதனால் தட்சிணாமூர்த்தி திரிசத நாமாவளியில் (வரி.127) பண்பநாசகராய என்று போற்றுகிறது. தன்னை சரணடைந்தவர்களுக்கு அகர்மத்தினால் ஏற்படும் இன்னலைப் போக்கவல்ல தட்சிணாமூர்த்தி சகஸ்ரநாம தோத்திரம் (வரி 62) என்று கூறுகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் அமைந்த அரியதோர் சிற்பமொன்று தேவிகாபுரத்திலுள்ள சிவன் கோயில் ஞானி உள்ள புடைப்புச்சிற்பம் நமக்கு உணர்த்துகிறது. கல்லால் மரத்தின் கீழ் பக்வாட்டில் அமர்ந்த நிலையில் யோகப்பட்டையுடன் வீராசனத்தில் பத்மபீடத்தில் வீற்றிருக்கிறார். ஆனால் யோக நிலைக்கேயுரிய அந்த நிலையை காட்டவில்லை; மாறாக கண்ணன் கால் பறக்கும் சிவத்துடனும் நெற்றிக்கண்ணைக் காட்டியும், நெற்றுப் பற்களுடன் சித்தரிக்கப் பட்டுள்ளார். இவரது நெற்றிக்கண் காமனை எரித்ததை உணர்த்துவதாகும். இவருக்கு இரு கரங்கள் மட்டுமே உள்ளன. வலது கரம் இருக்கையில் ஊன்றி திரிசூலத்தைக் கொண்டிருப்பது போலவும் இருக்கிறது.[2] முன் வலக்கரம் கடக முத்திரை(?)யுடன் இருக்கிறது.[3] முழுக்கைச் சட்டையணிந்து இருக்கிறார். சட்டையை இணைக்கவுள்ள முடிச்சும் சித்தரிக்கப்பட்டுள்ளது.[4] காதுகளில் பத்ர குண்டலம் அலங்கரிக்கிறது. அவரின் எதிரில் தலைக்குமேல் கைகூப்பி வணங்கி (ஊர்வ அஞ்சலியுடன்) நிற்கும் ஒருவர் சித்தரிக்கப்பட்டுள்ளார். தலையிலும் கழுத்திலும் உருத்திராட்சமாலையும் அலங்கரிக்கிறது. தட்சிணாமூர்த்திக்கு அளிக்கப்பட்ட முழுக்கை சட்டையுடனும், இடுப்பில் சிறு துணியணிந்தும் காணப் படுகிறார். இவரது சிற்ப அமைதி ஒரு சிவனடியார் தோற்றம் போன்று அமைந்திருப்பதை நோக்கலாம்.

மற்ற இடங்களில் நாம் பார்க்கக்கூடிய தட்சிணாமூர்த்தி படிவங்களுக்கும் சிற்பத்திற்கும் பல வேறுபாடுகளை நாம் அறியலாம். இச்சிற்பத்தில் முனிவர்கள் சூழ்ந்திருந்தும் காலில் முயலகனை மிதித்தபடி இருந்தும் வியாக்கியான முத்திரையுடனும் காணப்படவில்லை என்பதை நோக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு நாம் பார்க்கையில் சிறப்கொண்ட தட்சிணாமூர்த்தியாக இவர் சித்தரிக்கப்பட்டுள்ளார். இவரை சம்மார அல்லது உக்ர தட்சிணாமூர்த்தி அல்லது ஞானருத்ர தட்சிணாமூர்த்தி என்று அழைக்கலாம். யோக நிலையிலிருந்த சிவனின் தவத்தை கலைத்த பண்பதனை அழித்த சினத்துடன் இங்கே சித்தரிக்கப்பட்டிருக்கிறார். யோக தட்சிணாமூர்த்திக்குரிய அமைதியினையும் ருத்ரனாவேசத்தை இச்சிற்பத்தில் இணைக்கப்பட்டிருப்பது முக்கியமான ஒன்றாகும்.

அடிக்குறிப்புகள்

1. தட்சிணாமூர்த்தி (இரண்டு பகுதிகள்) (பதிப்பு நாராயணசாமி) என்கிறதொரு நூலை திருவாவடுதுறை ஆதீனம் திருவாடுதுறை (1991) வெளியிட்டுள்ளது. இதில் அறுபத்தைந்து தட்சிணாமூர்த்தி வடிவங்களை குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகள்

Koviloor Digital Library

நான்கு பெரும் பிரிவுகளில் பரிணாமங்களையாகும். இங்கே குறிப்பிடப்பட்ட மூன்று பிரிவுகள் இதனின்று வேறுபட்டதினால் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

2. திருவொற்றியூர் தட்சிணாமூர்த்தி படிவத்தில் பின் வலக்கரத்தில் சூலம் இருந்ததற்கான குறிகள் உள்ளன. சூலத்தின் மேல்பகுதி சிதைந்து அடிப் பாகம் மட்டுமே தற்போது உள்ளது (நாராயணசாமி 1991:16)

3. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள வீணாதார தட்சிணாமூர்த்தியின் முன் இரு கரங்களும் கடக முத்திரையுடன் இருப்பதைக் காணலாம். முன்புறமுள்ள வல இடக்கரங்கள் கடக முத்திரையுடன் இருக்க வேறுபெற்று காணப் – காமகம் கூறுகிறது. (நாராயணசுவாமி 1991:17-18)

4. சட்டையணிந்திருத்தலும் பெண் உருவங்களை சேலையுடனும் சித்தரிக்கப்படும் தன்மை தேர்ச் சிற்பங்களில் அதிகமாக இடம்பெறலாயிற்று.

துணை நூல்கள்

1. கீர்வாணேந்திர சரசுவதி, பிரபஞ்சசாரசார சங்கிரகம், பதிப்பு கே.எஸ்.சுப்ரமண்ய சாஸ்திரி, சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சாவூர் 1963.

2. சந்திரகுமார். த: 'Dakshinamurti: A Rare Fusion with Feminity' pp.107-11. Kala Journal of Indian Art History Congress, Allahabad, 1994.

3. சிவபுராணம், பகுதி 1 1986 (மொழியாக்கம்) வல்லுநர் குழு, மோதிலால் பனாரசிதாசு, தில்லி

4. நாராயணசுவாமி. எஸ். (பதிப்பு) தட்சிணாமூர்த்தி பகுதி . 2 திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1991.

5. ராவ், கோபிநாத், ஏ. (1914) எலிமெண்ட்ஸ் ஆப் இந்து ஐக்னோகிராபி, பகுதி 2, பகுதி 1 வாரணாசி.

Koviloor Digital Library

தக்கோலத்து ஆரிய கணபதி

கோ. திருமூர்த்தி,
இந்தியத் தொல்லியல் துறை
சென்னை-9

தக்கோலம் என்னும் ஊர் வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டம், அரக்கோணம் வட்டத்தில் அரக்கோணம்-பேரம்பாக்கம் சாலையில் 11வது கி.மீ. தொலைவில் உள்ளது. 'கலைத்தக்கோர் புகழ் தலைத்தக்கோலம்' என திருக்கோர் செப்பேடு போற்றும் சிறப்புடையது. சோழர்களின் அரசியல் ஆதிக்கத்தை சற்றே நிறுத்திய சோழ-ராஷ்டிரகூடப் போர் கி.பி.879-ல் இவ்வூரில்தான் நடைபெற்றது. இவ்வூரில் உள்ள ஜலநாதேஸ்வரர் என்கிற திருவுறல் மகாதேவர் கோயில், தொண்டை மண்டலத்து பாடல் பெற்ற 32 தலங்களுள் ஒன்றாகும். முதலாம் ஆதித்திய சோழன் காலத்திய கற்றளியான இச்சிவன் கோயில் 50க்கு மேற்பட்ட பல்லவர், சோழர், ராஷ்டிரகூடர், சம்புவராயர் விஜயநகர மன்னர்களது கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கோயிலில் உள்ள அரசமரத்தடியில் மேடை மீது நாக தெய்வங்களோடு வரிசையில் வைக்கப்பட்டுள்ள பல்லவர் காலத்திய மறக்கல்லாலான கணபதி சிற்பம் ஒன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது இக்கட்டுரை ஆசிரியரால் கண்டறியப்பட்டது. இச்சிற்பம் 60 × 40 செ.மீ.அளவுடையது. அமர்ந்த நிலையில் இடம்புரி கணபதி நான்கு கரங்களுடன் உள்ளார். கரந்த மகுட கழுத்தணிகள், கேயூரம், வளையல் மற்றும் யஞ்சோபவீதம் உதரபந்தம் ஆகியவற்றை அணிந்து அங்குசம், பாசம், மோதகம் ஏந்தியுள்ளார். பருத்த மற்றும் சரிந்த நிலையில் உள்ள வயிறு தொப்புள் ஆகியன அழகுற வடிக்கப்பட்டுள்ளன. சிறந்த வெளியில் உள்ளதால் வெயிலாலும், மழையாலும் இச்சிற்பம் சற்று சிதைவுற்றுள்ளது. மேலும் எள்ளெண் பூச்சு, கற்பூர புகை ஆகியவற்றினால் சிற்பம் மீது கருப்பு படலம் காணப்படுகிறது.

மறக்கல்லாலான இக்கணபதியே பல்லவர் காலத்திய மண்டபத்தின் தேவ கோட்டத்தினை அலங்கரித்திருக்க வேண்டும். மண்டபம் கற்றளியாக மாற்றப்பட்ட போது கணபதி உள்ளடங்கிய மறக்கல்லாலான மற்ற தேவகோட்டத்து சிற்பங்களும் அப்புறப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும் அப்புறப்படுத்தப்பட்ட மறக்கல் கணபதியின் உருவ அமைப்பை ஒத்தவாறே கருங்கல்லாலான கணபதியும் வடிக்கப்பட்டு தேவகோட்டத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பது நோக்கத்தக்கது.

மக்கள் பல்லவர்கள் காலத்தில் பட்டுமே கோயில்கள் மற்றும் சிற்பங்கள் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள பல்லவர் காலத்திய கோயில்களும் சிற்பங்களும் மறக்கல்லாலானவையே என்பது அறியத்தக்கது. எனவே இங்கு காணப்படும் மறக்கல்லாலான கணபதி சிற்பம் தக்கோலத்து மகாதேவர் கோயில் பல்லவர் காலத்தில் மண்டபமாக இருந்த உண்மையை எடுத்துரைப்பதோடல்லாமல் அம்மண்டபமே சோழர் காலத்தில் கற்றளியாக மாற்றப்பட்டுள்ளது என்ற கருத்தையும் தெளிவாக்குகிறது.

Koviloor Digital Library

சிறூர் கல்வெட்டு

பி.ஜ.ஞானகோவன்,
கல்வெட்டு பயிற்சி நிறுவன
மாணவர், சென்னை-113.

திருவண்ணாமலை கப்புவராயர் மாவட்டம், ஆரணி வட்டம், ஆரணி-வேளூர் சாலையில் ஆரணியிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் அமைந்த சிற்றூர் சிறூர் ஆகும். இவ்வூரில் சஞ்சீவிராயர் என்ற வீர ஆஞ்சநேயர் கோயில், தர்பராஜா கோயில், பஜனைக்கோயில் ஆகிய கோயில்கள் உள்ளன. வீர ஆஞ்சநேயர் கோயிலின் எதிரில் தீபத்தூண் ஒன்று நிறுத்தப்பட்டுள்ளது. அத்தூணின் கீழ்த்தளமாகப் பாவப்பட்ட ஒரு கல்லில் ஒரு கல்வெட்டு புதிதாக அறியப்பட்டுள்ளது. இக்கல்வெட்டை, கல்வெட்டு பயிற்சி நிறுவனத்தில் பயிலும் ஆர்வம் காரணமாக, ஒரு விடுமுறையில் சொந்த ஊர் சென்றிருந்த போது அறியும் வாய்ப்புக் கிடைத்தது. பிள்ளை எனுடன் பயிலும் மாணவ நண்பர்-களாகிய திரு ட்டி.ஜெயராஜ், திரு ட்டி.ஜீவாநடேசன், திரு ஜி.ஈஸ்வரன் ஆகியோரின் உதவியுடன் இக்கல்வெட்டைப் படியெடுத்து வந்து எங்கள் ஆசிரியப் பெருந்தகையோர் முன்பு படித்தோம். 27 வரிகள் கொண்டது கல்வெட்டு. இக்கல்வெட்டின் இடதுப்பகுதி மற்றும் வலப்பகுதி சிமெண்ட் பூச்சால் மறைக்கப் பட்டு விட்டது. இதனால் சில சொற்கள் மறைந்து விட்டன.

இக்கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:-

1. [illegible]
2. மண்டலேஸ்வரர் ஸ்ரீ வீரபிரதாப
3. வீர கிருஷ்ண ராயர் மஹாராயர் (பிருத்)
4. வி ராஜ்யம் பண்ணி அருளா நின்ற
5. ஸகாப்தம் [illegible] மேல் செல்
6. வா நின்ற தாரண வருஷத்து மகர மா
7. யற்றுப் பூரண பக்ஷத்து சப்தமியும்சு
8. க்கிற வாரமும் பெற்ற பூச நக்ஷத்திரத்து நாள்
9. ஸ்ரீ கிருஷ்ணராய மஹாராயர் காரியத்து
10. க்கு கடவாராந நாயக்கர் எக்கப்ப நாயக்கர்
11. ஞாரர் திருமலை நாயக்கரேன் செயங்
12. கொண்ட சோழமண்டலத்துப் பருவூர்
13. க் கோட்டத்து மெய்யூர் நாட்டுக்.....
14. ப்பற்று சிறுமெய்யூர் உடைய ஸ்ரீ....
15. க் வரமுடைய ந(ா)யனார் பெருமாள்
16. விக்க சிவராம் பெருமாள்
17. க்கப் பெருமாள் ஆக மூன்று பே
18. ஸ்ரீ பண்டாரத்துக்கும் தம்ப சாதரும்
19. ப்பிக்குடுத்தபடி தேவராயர் பண்
20. .....க்குச் செல்லும் கோயில்
21. ..... ரக் கிருஷ்ணராயரிட்டு
22. ..... கைக்கொண்ட சிவ
23. கைக்கப்பிள்ளை திருக்கை

..2

Kovilpoor Digital Library

பி.ஜ.ஐங்கோவன்

24. க..... கிருஷ்ணராய மஹாராயர் அம்

25. ..... தேவராயன் கையிலே ஸங்ராந்தி

26. காலத்திலே மஹாசனம் பண்ணி

27. ..... பாகத்திலே தண்டநிட்டு

இக்கல்வெட்டில் சகம் 1446-ம் தமிழ் வருடம் "தாரண"யும் குறிக்கப் பட்டுள்ளன. இவை கி.பி.1524க்கு நேராகவை. இதனில் குறிக்கப்படும் மன்னர் வீரகிருஷ்ணராய மஹாராயர் ஆவார். இவரை விஜயநகர மன்னர்களில் சிறப்புடைய மன்னராக கிருஷ்ண தேவராயராக எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக் காலம் கி.பி.1509-1529 ஆகும் அக்காலத்திற்குள்ளே இக்கல்வெட்டின் காலமும் அடங்குகிறது. இக்கல்வெட்டின் தொடக்கம் விஜய நகர ஆட்சிக் கால கல்வெட்டுகள் தொடங்கும் மரபிலேயே "ஸ்ரீபம்பமஹாபண்டலேஸ்வரர் என்று தொடங்கி சக வருடம் 1446 மகர மாயிற்று (தை மாதம்) பூர்வபட்சத்து (வளர்பிறை) பூச நட்சத்திரத்தில் தானம் வழங்கப்பட்டதாகச் சொல்கிறது.

கிருஷ்ண தேவராயரின் கீழிருந்த நாயக்கரும் (காரியத்துக்கு கடவராக நாயக்கர்) எக்கப்ப நாயக்கரின் குமாரருமான திருமலை நாயக்கர் சிறு-வெய்யூர் உடைய இறைவன் தொடர்பாக ஒரு தர்மசாதனம் செய்து கொடுத் துள்ளார். இந்த தர்மசாதனம் சின்னராமப் பெருமாள், பெத்தப்பெருமாள் மற்றும் (பெயர் கல்வெட்டில் அழிந்து போன) ஒருவர் ஆக மூவருக்கு இந்த திருமலை நாயக்கரின் ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் கோயிலில் கைக்கொடுக்கிற ஒருவர் பெயரும் இதனில் கொடுக்கப்பட்டுள்ளது. சங்கராந்தி காலத்தில் மஹாசனம் (மஹா சபையார்) இடத்தில் இந்த தானம் நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதாயும் அறிய முடிகிறது.

இக்கல்வெட்டில் செயங்கொண்ட சோழமண்டலத்து பருவூர் கோட்டத்து ....பட்டு சிறுவெய்யூர் இறைவன் குறிக்கப்படுகிறார். வெய்யூர் என்ற ஊர் இக்கல்வெட்டு உள்ள சிறுமுருக்கு தெற்கே 3 கி.மீ.தொலைவில் உள்ளது. சிறுவெய்யூர் இக்கல்வெட்டுள்ள சிறுமுராகவே இருக்கக்கூடும். இவ்வூரிலேயே தர்மராஜா கோயில் உள்ள 18-ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு "சிறுவயலூர் தர்மராஜா கோயில்" என்று சொல்வதால் சிறுவெய்யூர் 18ம் நூற்றாண்டில் சிறுவயலூராக மருவி தற்காலத்தில் சிறுமுராக மாறிவிட்டது என்பதை தெளிவாக அறிய முடிகிறது.

இக்கல்வெட்டில் வாசகம் முழுவதுமாக படிக்கப்படும்போது மேலும் சில செய்திகள் வெளிவரக்கூடும்.

சிறுகல்வெட்டாக இருந்த போதிலும் இக்கல்வெட்டு கிருஷ்ணதேவராயர் காலத்தில் எந்த நாயக்கர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது என்பதையும், இன்று காவக்கிடக்கா ஒரு சிவன் கோயில் இங்கிருந்ததையும் குறிப்பிட்டு இச்சிற்-றூரின் வரலாற்றை சுமார் 475 ஆண்டுகள் பின் நோக்கிப் பார்க்க ஏதுவாக இருக்கிறது என்பது சிறப்பாகும்.

Koviloor Digital Library

வல்லப் சம்புவராயர் கல்வெட்டு

க. ஈஸ்வரன்
கல்வெட்டு பயிற்சி மாணவர்
சென்னை-113.

தமிழகத்தில் வல்லம் என்ற பெயரில் செங்கற்பட்டிற்கு அருகில் மகேந்திரவல்லவனின் குடவரைக் கோயில்களுடன் வல்லம் என்றோர் ஊர் உள்ளது. தஞ்சை அருகில் கோட்டை அமைப்புடன் வல்லம் என்று மற்றோர் ஊர் உள்ளது. ஆனால் இக்கட்டுரையில் சொல்லப்படும் வல்லம் என்ற ஊர் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் உள்ள ஊராகும். செய்யார்-பெரணமல்லூர் சாலையில் பெரணமல்லூருக்கு 10 கி.மீ.முன்னதாக இவ்வூர் உள்ளது. இவ்வூரில் இந்திய தொல்பொருள் துறை கல்வெட்டுப் பிரிவு 1900ஆம் ஆண்டில் இரண்டு கல்வெட்டுகளை படியெடுத்து இருக்கிறது. தற்பொழுது காளிதரராஜபெருமாள் கோயிலில் படியெடுக்கப்படாத மேலும் ஒரு கல் வட்டு இக்கட்டுரை ஆசிரியரால் அறிந்து படிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் பின்புற சுவற்றில் உள்ள இக்கல்வெட்டு இராசநாராயண சம்புவராயர் காலத்தியது ஆகும்.

சகலலோக சக்கரவர்த்தி இராசநாராயண சம்புவராயன் என்று இக்கல்வெட்டில் குறிக்கப்படும் சம்புவராயர் கி.பி.1337 முதல் 1363 வரை ஆட்சி செய்தவர் ஆவார். இக்கல்வெட்டு அவரது 8-வது ஆண்டு என்பதால் கி.பி.1345ல் பொறிக்கப்பட்டதாகும். இவ்வாண்டு சித்திரை மாதம் (மேஷ ஞாயிறு) தேய் பிறையில் (அபரபட்சம்) 4ஆம் தேதி (சதுர்த்தி திதி) திருவோணம் நட்சத்திரமுடைய வெள்ளிக்கிழமை நாளில் காவிரிப்பூம்பட்டினத்து வாணன் பட்டன் என்ற பிராமணர்க்கு காணி ஜீவித நிறையில் வழங்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டு சொல்கிறது. இந்த நிறையில் திரு அகத்தீஸ்வரமுடைய நாயனார் கோயில் தேவதான நிலங்களில் மடை வாய்க்கால் ஒடியிருப்பு காரிய மானிக்க திருமால் கோயில் நிலங்களில் இருங்கண்டி நம்பியின் பட்டவிருத்தி நிலங்களில் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வரிகளின் பீதாவதாகும். வரிகளின் பெயர்கள் பின்வருமாறு:

1. கடமை 2. ஓயம் 3. கோமுற்றவர்பேறு 4. புதியது 5. நெல்லுயம் 6. கார்த்திகை கடமை 7. வாசல் விநியோகம் 8. சந்தி விக்கிரகம் பேறு 9. ஊர்கைக்கூலி ஆசு பொறுமக்கள் பேர் கடமை 10. நட்டார் பேராலி ஜீவாசி 11. மேற்கட்டி வரி 12. இறைவரி 13. நல்வெறு 14. நற்கிடா 15. ஓலைச்சம்பளம் 16. வசசல்பேறு

இவ்வூர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து வெண்குன்ற கோட்டத்து வல்லநாட்டு வல்லம் என்ற நாட்டு பிரிவுகளுடன் குறிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வூரை மையமாகக் கொண்டு வல்லநாடு என்ற உழுகுடி மக்களின் ஊர் வல்லநாடு என்ற பெயரில் இயங்கியமை தெரிகிறது. இக்கல்வெட்டில் காணி ஜீவிதம் பெற்றவராக குறிக்கப்படும் பிராமணர் சோழ மண்டலத்தில் பேருராக விளங்கிய காவேரி பூம்பட்டினத்தைச் சார்ந்தவர் என்று சொல்லப் பட்டுள்ளது. சம்புவராயர் காலத்தில் தமிழகத்தில் தென்பகுதியான காவேரி பூம்பட்டினத்தில் இருந்து வடபகுதியான தொண்டை நாட்டுக்கு சம்புவராயர்களால் பிராமணர்கள் அழைத்து வரப்பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

..2

Koviloor Digital Library

(8)

க. ஈஸ்வரன்

இக்கல்வெட்டு தற்பொழுது 12 வரிகளே படிக்கப்பட்டுள்ளது. மேலும் சில வரிகள் தெளிவாக படிக்க இயலவில்லை. எனினும் படித்தவரை கல்வெட்டின் மைய செய்தி கிடைத்துள்ளது. சம்புவராயர் கால வரலாற்றுக்கு மேலும் ஒரு புதிய செய்தியை இக்கல்வெட்டு தருகிறது என்று சொல்லலாம். இக்கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:

1. [illegible] சகலலோகசக்கரவர்த்தி இராசநாராயண சம்புவராயற்கு யாண்டு அவது
2. மேஉ[illegible]ாயிற்று அப்ரஉ[illegible]த்து சதுர்தியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற திருவோணத்து நாள் ஜ
3. யங் கொண்ட சோழமண்டலத்து வெண்ருற்றுக்கோட்டத்து வல்லநாட்டு வல்லம்
4. நல்லூராண திரு பல்லிநாதன் ஆந இராசநாராயணன் சம்புவராயர் சோழமண்டலத்துப் பெ
5. ருர் காவிரிப்பூம்பட்டணத்து (வ)ாபண பண்டிதன் அனங்கராயன் நந்திச்வரமுடையான்
6. வர்ருக் காவிச்சீவிதம் இறையிலி குடுத்தருளின உடையார் திரு(வ)ந்தீ) சீவரமுடைய நாயந
7. ர் தேவதானம் முதலடங்க இறையிலியும் திருமட வளாகமும் கரிய பாவிக்கும் பெருமான் திருவி
8. டையாட்டம் முதலடங்க இறையிலியும் பலதளி பூசை பாதியும் இருக்கவ்டி நம்பி பட்ட விருத்தியும்
9. கடமை ஆயம் கோமுற்றவர் பேரு புதிய ருள்ளிட்ட பல் நெல் லாயங்களும் ..... கார்த்திகை கடமை
10. பவம் வாசல் விதியோகம் சந்தி விக்கிரகம் ஊர்கவக்கர் ஆசு பொறமக்கள் பேர் கடமை இவர்கள் போர
11. ல் வாசல் விதியோகம் சந்து விக்கிரகம் ஊர் கவக்கர் கட்டார் பேரால் ஊசிவாசி நடை...ப
12. வம் முள்....இறைவரி மேற்கட்டிவரி நல்லெரு நார் கிடா ஓலைச்சம்படம் வாசல்பேரு....

Koviloor Digital Library

மணிமுத்தாறு படித்துறைக் கல்வெட்டு

ச. செல்வராஜ்,
தே. தி. தொல்லியல் அலுவலர்,
சென்னை

தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் விருத்தாசலம் ஊர் நடுவே ஓடும் புண்ணிய நதி மணிமுத்தாறாகும். இதன் தென்கரையில் விருத்தகிரீஸ்வரர் கோயில் என்னும் பழமலைநாதர் கோயில் உள்ளது. இறைவன் விழாக் காலங்களில் தீர்த்தமாடுதல் குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியாகும். இதன் பொருட்டு இம்மணிமுத்தாற்றங்கரையில் ஒரு படித்துறையும், மண்டபமும் கட்டப்பட்டு மண்டபத்தைக் கட்டிய அடியவர்களின் சிற்பங்கள் அமைந்த கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன.

கலிவருடம் 4815-சுக்வருடம் 1636 (கி.பி.1714) அன்று இப்படித்துறை கட்டப்பட்டுள்ளது. சென்னைப் பட்டணம் ஆயிரவர் நகரத்தாரில் பெரிய நதி நாகரீகி கோத்திரத்தைச் சேர்ந்த ராகவ செட்டியார் குமாரர் திருவிளப்ப செட்டியார் மகன் தியாகப்ப செட்டியாரின் மகன்களான தியாகப் வேங்கிட்டி செட்டியாரும் அவர் தம்பி காளத்தி செட்டியாரும் பொருளுதவி செய்துள்ளனர். அவர்கள் பொருளுதவியில் ஓலோகமாதேவிபுரத்தார் வகையைச் சேர்ந்த செட்டியப்பனாயியார் இப்படித்துறையைக் கட்டியுள்ளார். இந்த கல்வெட்டுச் சாசனத்தை ஆயிரவர் மடத்தைச் சேர்ந்த அருணாசல பண்டாரம் ஏற்படுத்தியதோடு எல்லா காரியங்களும் மேற்பார்த்துள்ளார்.

கல்வெட்டின் தொடக்கத்தில் கலியுகம் பிரம்மதேவனின் ஆயுளாக குறிப்பிட்டு அதில் 51-வது வருடத்தில் ஆறு மனு அரசர்கள் ஆட்சி முடிந்து ஏழாவது மனுவின் ஆட்சியில் கலி வருடம் தோன்றியது என்று புராணச் செய்தி சொல்லப்பட்டுள்ளது. விருத்தகிரீஸ்வரர்என்பது பழமலைநாதர் என்று தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. விருத்தம் என்ற முதுமைக்கு 'பழம்' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கதாகும். கி.பி.1714ல் சென்னை சென்னைப்பட்டணம் என்று அழைக்கப்பட்ட செய்தியும் இக்கல்வெட்டால் அறிய முடிகிறது.

கல்வெட்டு:

1. ஸ்ரீபிரம தேவன் வயசு நூறில்ப் பூறுவா
அற்சாம பறன்மத கற்பம் என்று சொல்லப்பட்ட
அன்பது வயசுச் சென்று உபரி
2. சுவேதவராக கற்பத்தில் அன்பத்தோராம் வயதில்
முதல் [illegible] முதல் மாதம் முதல்த்தேதி ரெண்டாம்
சாமம் மூன்றாம் முகூர்த்தத்தில் ஆறு மனு
3. ராச்சிய பாரம் பண்ணி ஏழாமனுவாகிய வைவசு
வதமனு ராச்சிய பாரம் பண்ணுகிற காலத்தில்
இருவத்தெட்டாம் சதுர்யுகத்தில்
4. வர்த்தமான கலியுகத்தில் சென்ற வருஷம் நாலா-
யிரத்து எண்ணூற்று பதினாறு சுவத்தி ஸ்ரீ சாலிய
வாகன சகாப்தம் [illegible] ஆயிரத்து
5. அறுநூற்று முப்பத்தாறு இதன் மேல் செல்லா
நின்ற செய [illegible] (வருடம்) அற்பிசி மாசம்
பழமலை நாதர் பெரிய நாயகி அம்மை

..2

Koviloor Digital Library

6. திருபெயிருலே பவிழ்த்தா நதிப் படித்தறை
கட்டி நிறவேற்றினபேர் செல்லபட்டனம்
ஆயிரவர்

7. நகரத்தாரில் பெரிய நதி மகாரூஷி கோத்திரம்
ராகுவ செட்டியார் குமாரர் திருவிளப்ப செட்டி

8. யார் அவருடைய குமாரர்த் தியாகப்ப செட்டியார்
அவருடைய குமாரர் தியாகப் வேங்கிட்டி செட்டி

9. யார் அவர் தப்பி காளத்திசெட்டியார்த் திரவியம்
ஒக்க கட்டிவிச்சு ஒலகமாதேவி புரத்தார் வகையில்
செட்டியப்ப

10. ஞானியார் இந்த சிலாசாதனம் பூலோகத்திலே
சந்திராதித்தவர் உளவரைக்கும் பேர்நிற்கத்தக்கதாக
எழுதின

11. சிலாசாதனம் ஆயிரவர்பபம் அருவாசலம்
பண்டாரம் சகல காரியமும் பார்த்தவர்.

Koviloor Digital Library

ஓரத்தி (உரத்தி) வரலாறு ஒரு முன்னோட்டம்

பொ. சங்க. ஜீவா நடேசன்,
கல்வெட்டுப் பயிற்சி. மாணவர்,
சென்னை-113.

தமிழ் நாட்டின் எரிமாவட்டமென அழைக்கப்படும் பெரிய மாவட்டமான செங்கல்பட்டு எல்லையூர் மாவட்டத்தில் மதராந்தகம் வட்டத்திற்குட்பட்ட இயற்கைச் சூழலில் ஒருங்கே அமையப்பெற்ற கிராமம்தான் ஓரத்தி. இந்த ஓரத்தி கிராமம் சென்னையிலிருந்து விழுப்புரம் செல்லும் நெடுஞ்சாலை அமையப்பெற்ற மொழுப்பேட்டிலிருந்து (பெருப்பேர்கண்டிகை) 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வூரானது சங்க காலத்திலிருந்தே சிறப்புமிக்க ஊராக இருந்திருக்க வேண்டும் என்று அங்கு கிடைக்கப் பெற்ற கல்வெட்டுக்கள், சமணர்படுக்கை, நடுகல் வழிபாடு, கோயில்கள் போன்றவற்றின் மூலம் அறிய முடிகிறது. மற்றும் பாறையில் பாடல் கல்வெட்டும் தனிக்கற்களில் சிற்பங்களும், இருமொழிக் கல்வெட்டுக்களும் இங்குள்ளன.

வளங்கொழிக்கும் பூமி அதிகமிருப்பதால் விவசாயம்தான் இவ்வூர் மக்களின் முதலெழுப்பாகத் திகழ்கிறது. இதனால் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்களுக்கும் வாயிபெருக்கு கொண்ட நாற்புறமும் செல்ல போக்குவரத்து வசதிகளும் உள்ளன. இவ்வூரைச் சுற்றியுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்:- மேற்கே வந்தவாசி, வடக்கே அச்சிறுபாக்கம், மதராந்தகம்; தெற்கே செஞ்சி, திண்டிவனம் ஆகியவைகளும்.

இவ்வூரில் கிடைக்கும் சான்றுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கால கட்டத்தைச் சேர்ந்தவையாகும். அவற்றை (1) சங்ககாலம் (2) பல்லவர் காலம் (3) இராஷ்ட கூடர் காலம் (4) சோழர் காலம் (5) நாடவர் காலம் (6) விஜயநகரர் காலம் என்று பிரிக்கலாம்.

1. சங்க காலம்: சங்க காலத்தியதாகச் சமணர் வாழ்ந்த படுக்கைகளைச் சொல்லலாம். ஓரத்தி மலையில் மேற்பக்கமுள்ள ஒரு பெரிய பாறையின் கீழாக மூன்று படுக்கைகள் அமைந்துள்ளன. தலை வைப்பதற்கேற்ப தலையணை அமைப்பும் வெட்டப்பட்டிருக்கிறது. நன்கு தேயும் இங்கு கல்வெட்டுக்கள் ஏதும் காணப்படவில்லை. படுக்கையில் அமர்ந்து பார்ப்போமானால் கிழக்கு, வடக்கு, தெற்கு முக்கு திசைகளிலும் பத்து கிலோமீட்டர் தொலைவிற்கு எந்த நடமாட்டத்தையும் அறிய முடியும். ஓரத்தியைச் சுற்றியுள்ள பல கிராமங்களையும் பார்க்கும் வகையில் இந்த சமணர்ப் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

2. பல்லவர் காலம்: ஓரத்தியின் பர்வதாம்பிகை உடனாய பரசுராமீஸ்வரர் கோயில் முன்பாக ஒரு கற்பலகையில் பல்லவர் காலத் தமிழ் எழுத்துக்களில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. இது இக்கல்வெட்டு இரண்டாக உடைக்கப் பட்டுத் தரையில் கிடக்கிறது. கோயிலைச் சேர்ந்ததல்ல. ஏரியைச் சேர்ந்தது. ஏரியில் இதில் உள்ள செய்தி ஏரிக்குத்தூம்பு (மடை) அமைத்த தாகும். அதில் உள்ள கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:

1. ஸ்ரீ நந்திப் போத்தரைய
2. ர்க்கு யாண்டு பதினாள்கா
3. வது ஈஸ்ர்க் கோட்டத்து
4. டுக்கல் நாட்டு ஆற்றார்
5. இருந்த வாழுப் கொற்றங்
6. ரந்தாபன் நக்கன் செய்
7. விந்த ரூம்பு.....

..2

Koviloor Digital Library

நந்திப் போத்தரையன் (797-846 கி.பி.) நந்திவர்மனின் மகனாவான். நந்திபுரீக்கள் என்ற இராஷ்டிர கூடன் பெயரால் மனவுறவு காரணமாகப் பெயர் வைக்கப்பட்டவன் கி.பி.796லிருந்து 846 வரை ஆண்டவன். திருவெள்ளறையில் உள்ள ஸ்வஸ்திக் கிணறு இவன் காலத்தியது. இவனது 14வது ஆண்டில் (கி.பி.810-ல்) ஈரார்க் கோட்டத்து நெடுங்கல் நாட்டு ஆற்றூரில் வாழும் கொற்றன்...தாமன் நக்கன் என்பவன் ஏரியில் நீர் செல்லும் தூம்பு (மடை) அமைப்பு அமைத்துக் கொடுத்துள்ளான். ஏரியில் உள்ள மற்றொரு நடுக்கல்லில் எழுத்துக்கள் அழிந்து விட்டன. உருவ அமைப்பைக் கொண்டு அதனையும் பல்லவர் காலம் எனலாம்.

3. இராஷ்டகூடர் காலம்: ஒரத்தியில் பர்வதாப்பிகை உடனாய பரசுராமீஸ்வரர் கோயிலின் முன்பாக நடப்பட்ட நிலையில் ஒரு பெரிய பலகை கல்லில் அரிய சிற்பங்களுடன் கூடிய கன்னட மற்றும் தமிழ் மொழிக் கல்வெட்டுகள் உள்ளன. இதனில் சிறிய நாகரத்துடன் கூடிய கோயில் சிறு சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. அக்கோயிலின் உட்பகுதியில் சிவலிங்கம் காட்டப்பட்டுள்ளது. கோயிலின் எதிரில் வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடித்து அடியார் ஒருவர் அமர்ந்துள்ளார். அவரது இடக்கரத்தில் வாள் இருக்கிறது. வலக்கரம் அவரது அரிந்த தலையின் முடியைப் பிடித்துத் தூக்கும் நிலையில் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இதன் மேல்பகுதியில் சிவலிங்கமும் அதை வணங்கும் இவ்வடியாரின் உருவமும் காணப் படுகின்றன. அதற்கும் மேல்பகுதியில் பெண்கள் சாமரம் வீசி அடியாரை மேல் உலகிற்கு சிவலோகம் அல்லது சுவர்க்கம் அழைத்துச் செல்வது போல் சிற்பம் உள்ளது. இச்சிற்பத்தின் இடைப்பகுதியில் 7 வரிகள் கொண்ட கன்னடகல்வெட்டுள்ளது. அடியாருக்கு கீழே 6 வரிகள் கொண்ட தமிழ்க் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு கல்லின் பின்புறமும் தொடர்கிறது. இக்கல்வெட்டு வாசகம் இன்னும் முழுதாகப் படிக்கப்படவில்லை. படித்த அளவில்:-

"ஸ்ரீ கன்னர தேவற்க்கு யாண்டு ....
காயங்கஜந்..... அதி..... உரத்தி
மகாதேவர்க்கு....."

என்ற சொற்கள் தெரிகின்றன. இக்கல்வெட்டு மூன்றாம் கிருஷ்ணன் என்ற இராஷ்டிரகூட மன்னனுடையதாகும். இவன் பல கல்வெட்டுக்களில் "கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவன்" எனப்படுவான். முதலாம் பராந்தக சோழனின் மகன் இராஜதித்தனைவென்று தொண்டை மண்டலத்தைச் சிறிது காலம் ஆண்டவன். ஸ்ரீ கன்னர தேவர்க்கு யாண்டு என்னத் தொடங்கி காயங்கஜந்த் பெயரை குறிப்பிட்டு உரத்தி மகாதேவர்க்கு ஏதோ செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. சிற்பத்தைப் பார்க்கிறபோது வெள் சிரப்பலி (நங்கண்டம்) கொடுத்துள்ளான் என்பது தெளிவு. ஆனால் எதற்காகக் கொடுத்தான் என்பது கல்வெட்டை முழுமுப் படிக்கும்போது தெளிவாகும்.

பொதுவாக ஏற்கை, கொற்றவை, பிடாரி ஆகியோருக்குச் சிரப்பலி கொடுப்பது மரபாக இருக்க அதற்கும் மாறாக ஒரத்தியில் சிவபெருமானுக்கு சிரப்பலி கொடுக்கும் சிற்பம் கிடைத்திருப்பது ஒரு புதிய செய்தி ஆகும். இக்கல்வெட்டில் உரத்தி என்று பெயர் கூறப்பட்டுள்ளது. எனவே பத்தாம் நூற்றாண்டில் இவ்வூரின் பெயர் உரத்தி என்பது தெளிவு.

Koviloor Digital Library

4. சோழர் காலம்: ஊரின் நடுவில் பிரசன்ன வரதராஜப் பெருமாள் கோயில் உள்ளது. கோயிலின் முன்பகுதியில் ஒரு சிம்மத்தூண் உள்ளது. சிம்மத்திற்கு மேலாக தூண் எட்டுப்பட்டைகளாக உள்ளது. இந்த 8 பட்டைகளில் மூன்றில் கல்வெட்டு காணப்படுகிறது. இக்கல்வெட்டெழுத்துக்கள் ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதப்பட்டுள்ளன. ஒரு பட்டை முடிந்ததும் மீண்டும் அதன் இடப்புறம் உள்ள பட்டையில் கல்வெட்டெழுத்துக்கள் தொடர்கிறது. மூன்று பட்டைகள் மட்டுமே வெளியே தெரிவதால் அடுத்த பட்டைகளில் உள்ள கல்வெட்டின் தொடர்சியை அறிய முடியவில்லை. கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு பத்தொந்பதா
2. வ ா படுவூர் பரமீ ஸ்வரமுடையாற்கு ஆற்பாக்கி
3. ழாந். அம்மையப்ப .நாத பாவராயன்.....

ஸ்ரீராஜராஜ சோழனின் பத்தொன்பதாவது ஆட்சியாண்டில் ஆற்பாக்கிவழாந் அம்மையப்பனான பாவராயன் என்பவன் படுவூரில் உள்ள பரமேஸ்வரர் ஆலயத்திற்கு ஏதோ ஒரு தானம் அளித்துள்ளான். ஒரத்திக்கு மேற்கே 5 கி.மீ. தொலைவில் படுவூர் என்ற ஊர் உள்ளதால் அங்குள்ள பரமேஸ்வர ஆலயத்திற்கு தானமாகப்பட்ட இந்த சிம்மத்தூண் ஒரத்தி வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வைத்துக் கட்டப்பட்டு விட்டது என்பது தெளிவாகும். வரதராஜப் பெருமாள் கோயில் 16-17 ஆம் நூற்றாண்டு நாயக்கர் காலத்தியது. எனவே அக்கால கட்டத்தில் இத்தூண் படுவூரிலிருந்து ஒரத்திக்குக் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்.

5. காடவர் காலம்: ஒரத்தி பெரிய ஏரியின் நடுவில் ஒரு பாறை சரிந்த கட்டையான வடிவில் உள்ளது. அதற்கு வெள்ளைக்கல் என்று பெயரிட்டு அழைக்கின்றனர். இக்கற்பாறையில் 19 வரிகள் கொண்ட பாடல் கல்வெட்டு உள்ளது. இந்தப் பாடல் கல்வெட்டில் மூன்று பாடல்களைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு பாடல் இறுதியிலும் குறியிட்டுக் காட்டியுள்ளனர். இவ்வூர் மக்கள் வானம் மழை பெய்யவில்லையெனில், இக்கல்வெட்டிற்கு பொங்கலிட்டு வழிபடுகின்றனர். பொங்கல் சாதத்தை கல்வெட்டின் நடுப்பகுதியில் வைத்து கைப்படாமல் ஊர்த் தோட்டியை (வெட்டியான்) வாயால் சாப்பிடக் கூறுவார்களாம். அப்படி வழிபட்டால் நல்ல மழை பொழியும் என்று நம்புகின்றனர். இக்கல்வெட்டின் தொடக்கத்தில், இந்தப் பாடல்கள், "பல்லவன்டாரான வீரர் வீரன் காடவராயர் கவி நன்றாக" என்று சொல்லப்பட்டுள்ளது. இந்தக் காடவன் வெண் குடையின்கீழ் வீற்றிருந்த தொண்டையர்குல வேந்தன் என்றும், வண்டுகள் செங்கழுநீர் மலர்களில் தேனுண்டு சிலம்பிற்(மலை)போய் உறங்கும் அளவு நீர்வளமிக்க நாட்டைச் சேந்தவன் என்றும், திருமுனைப்பாடி நாட்டவன் என்றும் செங்கோற்காடவன் என்றும், தண்டார் மோகன் என்றும் சொல்லப்பட்டுள்ளான்.

சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு பிற்கால பல்லவ மன்னர்களான காடவர்கள் ஆட்சி செய்துள்ளனர். அவர்களில் ஏழிசைமோகன் என்று ஒரு மன்னன் உண்டு. அவனே இங்கு தண்டார்மோகன் என்று குறிக்கப்படுகிறான். எனவே இந்தப்பாடல் கல்வெட்டு அவன் காலத்தியது என்று சொல்லலாம். இவன் இந்த ஏரிப் பாசனத்தில் கோயிலுக்கு ஏதோ நிலங்கள் பரிசாக கொடுத்திருக்க வேண்டும். கல்வெட்டு இன்னும் தெளிவாகப் படிக்காததால் விபரம் முழுவதுமறிய இயலவில்லை. கல்வெட்டின் இறுதியில் இக்கல்வெட்டை அழிப்பவன் தன் வம்சத்தில் பிறவாதவன் என்றும் தன் தந்தைக்குப் பிறவாதவன் என்றும் கடுமையான ஒம்படைக் கிளவிச் சொற்றொடர் உள்ளது.

..4

Koviloor Digital Library

6. விஜயநகரர் காலம்: ஒரத்தியில் உள்ள சிவன் கோயிலுக்கு பர்வதாம்பிகை உடனாய பரசுராமீஸ்வரர் கோயில் எனப் பெயரிடப்பட்டு சிறிய கோயில் அதிட்டான அமைப்பு கல்லாலும், விமான அமைப்பு செங்கல்லாலும் அமைக்கப் பட்டுள்ளது. கருவறையில் சிவலிங்கம் மட்டும் உள்ளது. அதிட்டானத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் சக வருடக் குறிப்புள்ளது. இது விஜயநகரர் காலத்தியதாகும். கோயில் திருப்பணி காரணமாக சுண்ணாம்பு மற்றும் சிமெண்ட் பூசப்பட்டதால் எழுத்துக்கள் மறைக்கப்பட்ட நிலையில் உள்ளன.

ஊரின் பெயர் உரத்தி என்பதும் இறைவன் பெயர் பரசுராமீஸ்வரர் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன. "முத்திநாயக்கன் புண்ணியமாக" என்ற சொற்களும் காணப்படுகின்றன. முன்சொன்ன கன்னரத்தேவன் கல்வெட்டிலும் இக்கல்வெட்டிலும் உரத்தி என்ற பெயர் வருவதால் இவ்வூர் கி.பி.16-ஆம் நூற்றாண்டு வரை உரத்தி என்றே அழைக்கப்பட்டிருக்கிறது என்பதும், காலப் போக்கில் இன்று ஒரத்தி என்று அழைக்கப்படுகிறது என்பதும் தெளிவாகிறது.

இதுவரை பார்த்த செய்திகளிலிருந்து இன்று ஒரத்தி என்று அழைக்கப் படுகின்ற அன்றைய உரத்தி சமூக அமைப்பில் கொல்லாமை வழிநின்ற ஒரு சமணத்தலமாக விளங்கி, பின் பூசலில் வீழ்ந்த வீரர்களுக்கு நடுகல் வைத்து வழிபடும் சமூகமாக மாறிச் சிவனுக்குக் கோயிலெடுத்து அச்சிவபெருமானுக்கு சிரப்பலி கொடுக்கின்ற சமூகமாக வளர்ந்திருக்கிறது. மேலும் விஜயநகரர் காலத்தில் திருமால் கோயிலுக்கு இடம் கொடுத்திருக்கிறது. ஏரியில் இடை அமைத்து பாசன வசதிகள் செய்த புரவலர்களை உடைய சமூகமாகவும் விளங்கியிருக்கிறது. அரசியலமைப்பில் தந்திவர்ம பல்லவனது ஆட்சியிலும் முற்கால மற்றும் பிற்காலச் சோழர் ஆட்சியிலும் இடம் பெற்றதோடு இடையில் வந்த இராட்டிரகூட மன்னர்களது அரசியலிலும் இடம் பெற்றிருக்கிறது. பின்னாளில் காடவர்கள் விஜயநகர மன்னர் மற்றும் நாயக்கர் ஆட்சியிலும் குறிப்பிடத்தக்க வழிபாட்டிடமாக அமைந்திருக்கிறது, என்று தெரிகிறது. சுருக்கமாகச் சொன்னால் தொடர்ந்த, சமுதாய மாற்றமுள்ள, இடைவெளி-யில்லாத வரலாற்றை பெற்ற ஊர் ஒரத்தியாகும்.

....

Koviloor Digital Library

பரமக்குடி அருகே ஒரு பழைய அரிய கல்வெட்டு

முனைவர் ஆர். கே. அழகேசன்
அமெரிக்கன் கல்லூரி,
மதுரை

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள கிராமம் வேந்தோனி. இவ்வூர் மாரியம்மன் கோயிலருகே 700 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு கல்வெட்டு முன்னாள் மாணவர் திரு செந்தில்குமார் தந்த தகவலின் பேரில் தொல்பொருள் ஆய்வுத் துறைக் கல்வெட்டாய்வாளர் திரு வெ. வேதாசலத்துடன் சென்று இக்கட்டுரை ஆசிரியரால் ஆய்வு செய்யப்பட்டது. கல்வெட்டின் அருகே சென்றபோது "வெட்டுமுகத்தை உற்றுப் பார்க்காதே! பிறகு பார்த்தால் உன் தலையெடுத்து ... பெயர்ந்தான்..." என்கிற வழக்கமான கிராமிய அச்சுறுத்தல் எழுந்தது பலவிடத்தே. 1½ அடியும் 1¼ அடி அகலமும் கொண்ட கற்பலகையில், 14 மற்றும் 12 வரிகளில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. இவற்றின் நடுவே ஒரு வெள்ளொழுக்குடன் சிற்பமாக உள்ளது.

முதல் கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாற
2 பன்மராக ஸ்ரிபு4வ
3 ஏசுக்ர வத்திகள் எப்
4 பட்டலமும் பெரும்
5 ருளியஸ்ரீ ஒல்சே0 கர்தெ3
6 வர்க்கு யாண்டு 28வது வட
7 தலை செ(ப்)*பிநாட்டு அ கர்ப்
8 ஸ்பதிரங்கச் சர்வே
9 திங்கலத்தி ஊ
10 .ரும் ரு எரும் கா
11 எய கன்டன் கோ
12 ட்டை ஊரார் நே
13 ஈக்கி கொள்க சு0ப4
14 (மஸ்ர)*

இரண்டாவது கல்வெட்டு

1 பதிரங்
2 கச்சரிர்க்
3 வநமங்
4 கலத்ர ஊ
5 ரும்ரும்
6 ஒட்டைய
7 ன் கோட்டை
8 ட ஊரார்
9 நோக்கி
10 கொள்
11 க சு0ப4
12 மஸ்ர

..2

Koviloor Digital Library

கல்வெட்டுக்களின் எழுத்தமைதி கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. எப்பகிடலரும் கொண்டருளிய ஸுகேசர பாண்டியனின் 28-வது ஆண்டில் (கி.பி. 1296) கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கல்வெட்டு முதல் கல்வெட்டின் தொடர்ச்சியாகவே இருக்க வேண்டும் அல்லது சில ஆண்டுகளுக்குப் பிறகு சேர்க்கப்பட்டதாகவும் இருக்கலாம். கல்வெட்டுகளின் மையச் செய்தி ஸ்ரீமதிரங்க சதுர்வேதி மங்கலம் என்ற பிராமணர் ஊரையும் (அகரம்) அதன் ஞாத்தையும் காளையகண்டன் கோட்டை ஊராரும் ஞ்டையன்கோட்டை ஊராரும் ஏண்டையன்கோட்டை ஊராரும் நோக்கிக் கொள்ள வேண்டும் என்பதாகும். நோக்கிக் கொள்தல் என்பது பாதுகாப்புத் தருதல் என்ற பொருளில் கையாளப் பட்டுள்ளது எனலாம். 12-14ஆம் நூற்றாண்டுகளில் பாண்டிய நாட்டில் 'ஆசிரியம்' என்ற குறிப்பிடும் கல்வெட்டுகள் பல பாதுகாப்புத் தருதல் தொடர்பாகக் கிடைத்துள்ளன. அவ்வகையில் இக்கல்வெட்டும் ஒன்று எனலாம். வலியுடைய மறவர்கள் ஆசியம் (பாடிக்காவல்) பெற்றுக் கொண்டு பாதுகாப்பு ஊழியம் செய்தனர்.

மதிரங்கன் என்பவர் பெயரால் ஸ்ரீமதி ரங்க சதுர்வேதிமங்கலம் என்ற பிராமணர் ஊர் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பது ஊர்ப்பெயரால் அறிய முடிகிறது. இராமநாதபுரம் கடற்கரைப் பகுதியில் ஸுகேசரபாண்டியனின் அதிகாரியாக மாவலச் சக்கரவர்த்தி என்ற விஜயவன் மதிரங்கன், பருங்கூர், திருப்புல்லாணி, புதுக்கோட்டை கல்வெட்டுகளில் இவனைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

பரமக்குடி அருகே காளையடிக்கோட்டை காமன்கோட்டை, சிறகிக் கோட்டை, காளியகோட்டை எல்லாம் கோட்டைப்பெயருடைய ஊர்கள் உள்ளன. கல்வெட்டில் குறிக்கப்படும் காளையகண்டன் கோட்டை செம்பிநாட்டு மறவர்கள் இப்பகுதியில் வசித்திருந்தனர். ஆனால் பிராமணர் குடியிருப்புகள் இல்லை.

மத இறைவேதங்கள் பெருகி வரும் இந்நாளில் மனிதநேயத்துடன்.... மெலியாரை வலியார் அடிக்காமல் பாதுகாக்க வேண்டும் என்னும் 'பழைய ஏற்பாடு' இச்சாசனச் செய்தி.

Koviloor Digital Library

வரலாற்றுக் கதை சொல்லும் பெரியார் மாவட்ட கல்வெட்டுக்கள்

நடுகற்கள்

புலவர் அ. பழனியப்பன், எம். ஏ., பி. எட்.,
அரசு ஆக்கள் மெயிலைப்பள்ளி,
பவானி, பெரியார் மாவட்டம்.

நம் நாட்டின் பழைய வரலாறையும் மக்களின் பண்பாட்டையும் அறிவதற்கு நடுகற்களும் கல்வெட்டுகளும் பெருந்துணை புரிகின்றன. "திருமணத்தின்போது நாட்டுக்கல் வைக்கும்" என்ற சடங்கினைத் தமிழகத்தில் செய்வதுண்டு. அதன் பின்னரே ஏனைய சடங்குகள் செய்யப் படுகின்றன. நடுகல் வைக்கமே நாட்டுக்கல் வைக்கலாயிற்று என்பார் சிலர். எந்த நல்ல செயல் செய்தாலும் விநாயகப் பெருமானை வணங்கி பின்னரே செயலைத் தொடங்குவது வழக்கம். விநாயகர் கோயில் இல்லாத இடங்களில் திருமணம் நடந்தால், கல்லை நட்டு அதனை விநாயகராக எண்ணி வழிபட்டபின்னரே ஏனைய திருமணச் சடங்குகள் செய்யப்படுகின்றன. அவ்வாறு ஏற்பட்டதே நாட்டுக்கல் வழக்கம் என்பாரும் உளர்.

"என் தலைவனை எதிர்த்தவர்கள் அனைவரும் அவனை எதிர்க்க இயலாமல் வீர மரணம் எய்தி நடுகல்லாய் நின்று விட்டனர். பகைவர்களே நீங்கள் அவனை எதிர்த்து நில்லாதீர்" என விளக்கும் பொருள் பொதிந்த

"எஞ்ஞான்று நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்னின்று கல்நின்றவர்"

என்னும் குறளில் நடுகல்லைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

சத்திய மங்கலத்திற்கு அருகில் உள்ள மலைப்பகுதியில் காடகநல்லி, கடம்பூர், அத்தியூர், கல்கடம்பூர் ஆகிய சிற்றூர்கள் உள்ளன. இங்குப்பெரும்பாலும் மலைவாழ் மக்களைக் காணமுடிகிறது. ஆங்காங்கே நடுகற்கள் உள்ளன. காடகநல்லி என்னும் சிற்றூரில் மாரப்பன் என்பவரது காட்டில் மூன்று நடுகற்கள் உள்ளன. இரண்டு வீரர்கள் எதிரெதிராக நின்று போர் செய்கின்றனர். அவர்களில் ஒருவனுக்கு மட்டும் இரண்டு மனைவியர் மக்குடங்களை ஏந்தி நிற்கின்றனர். அருகில் ஒரு குழந்தையின் உருவமும் செதுக்கப்பட்டுள்ளது. அவ்வூரையொட்டி நீரோடை ஒன்று உள்ளது. அதன் கரையில் நடுகல் ஒன்று உள்ளது. ஒரு வீரன் தன் இடக்கையைப் புலியின் வாயில் கொடுத்துக்கொண்டே வலக்கையில் உள்ள வாளால் புலியைக் குத்திக் கொல்லும் காட்சி செதுக்கப் பட்டுள்ளது. இவ்வூரில் சிவன்னா என்பவரது காட்டில் ஆலமரத்தின் கீழ் ஒரு நடுகல் உள்ளது. ஒரு பெண் மல்லாந்து முன்புறமாகக் கிடந்து இருக்கிறாள். அவளுடைய கைகள் இரண்டும் நிலத்தை நோக்கித் தொங்கிக் கொண்டு இருக்கின்றன. அவளுக்குப் பின்புறத்தில் ஆசனத்தில் அமர்ந்த வண்ணம் ஒரு ஆடவனும் அவளுக்கு முன்புறத்தில் நின்றவண்ணம் ஒரு ஆடவனும் உள்ளனர். பின்புறம் உள்ளவன், அப்பெண்ணின் நீண்டு வளர்ந்துள்ள கூந்தலை ஒரு கையில் இழுத்துப் பிடித்துக் கொண்டு மற்றொரு கையில் உள்ள தலை வாளினால் அவள் கழுத்தின் பின்புறம் குத்துகிறான். அதே சமயத்தில் முன்புறம் உள்ளவனும் அவளது

Koviloor Digital Library

புலவர் .அ.பழனியப்பன், எம்.ஏ.பி.எட்.,

கழுத்தைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள கயிற்றின் நுனியை முன்புறமாக இழுத்துப்பிடித்துக் கொண்டு வாளால் அவள் கழுத்தின் பின்புறம் குத்துகிறான். இந்தக் கொடுமையான நிகழ்ச்சி நடுகல்லில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. எதற்காக இந்த நரபலி கொடுக்கப்பட்டது என வினவியபோது அங்கு இருவேறுவிதமான கதைகள் இந்நிகழ்ச்சி பற்றி வழங்கப்படுகின்றன. பெண் ஒருத்தி அந்த இடத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணிடம் ஒருவன் தகாத முறையில் நடந்து கொண்டான். அதனால் அவள் ஓடிப்போய் இறந்துவிட்டாள் என்றும், தகாத முறையில் நடந்து கொண்ட அப்பெண்ணுக்கு ஊரார் தண்டனை கொடுத்தனர் என்றும் கதைகள் வழங்கப்படுகின்றன. ஊரார் கொடுத்த தண்டனையே சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது என்று அங்குள்ளவர் கூறுகின்றனர். கருநாடக மாநிலத்தில் வாழும் ஒரு இனத்தவர் ஆண்டுக்கு ஒரு முறை அங்கு வந்து அந்த நடுகல்லுக்கு வழிபாடு செய்துவிட்டுச் செல்கின்றனர். அவர்கள் அனைவரும் காடகநல்லியிலிருந்து குடியெயர்ந்து கருநாடகத்திற்குச் சென்றவர்கள் என்று கூறப்படுகிறது.

நடுகல்லை மலைவாழ் மக்கள் ஈருலு (வீரக்கல்லு) என்றும் சாசனக்கல் என்றும் வழங்குகின்றனர். சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் காணப்படும் குத்துக்கல் புதைகுழிகள் போன்று காடக நல்லிக்கு அருகில் புதைகுழி உள்ளது. செங்கற்பட்டு, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் காணப்படும் கல்வட்டப் புதைகுழிகளைப்போல அங்கு ஈற்றுக் கலக்காக உள்ளன. அடர்ந்த காட்டுப் பகுதியில் கஞ்சப்பள்ளம் என்னும் ஓடைக்கு அருகில் இரண்டு நடுகற்களும் கடம்பூரில் ஒரு நடுகல்லும் கல்கடம்பூர் தொடக்கப்பள்ளிக்கு அண்மையில் ஒரு நடுகல்லும் உள்ளன. இவை தவிர அத்தியூர் வங்கமரமுதலியார் காடு, மாதையன் கோயில் புதுக்காடு, சடையப்பன் காடு ஆகியவற்றில் நடுகற்கள் உள்ளன. அவற்றில் எழுத்துக்கள் இல்லை. புலியுடன் போரிட்டு வீரமரணம் அடைந்ததை விளக்கும் வகையில் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

மலைப்பகுதியில் கல்கடம்பூருக்கு அடுத்த மல்லியம்மன் கர்க்கம் என்னும் பகுதி உள்ளது. கல்கடம்பூரிலிருந்து ஏறத்தாழ ஏழு கிலோ மீட்டர் மலை மீது ஏறிச் சென்றால் மல்லியம்மன் கர்க்கம் அடையலாம். அங்கு ஒரு கல்வெட்டு உள்ளது. பெயரார் மாவட்டத்தில் இவரும் சிறப்புவாய்ந்த கல்வெட்டாகும். வீரன் ஒருவன் நிற்கிறான் அவன் எதிரில் குதிரைமீது அமர்ந்த வண்ணம் இருக்கிறான் மற்றொருவன். இருவரும் போர் புரிகின்றனர். வீரர்களின் இருபுறமும் ஓடை பிடித்தும் கவரி வீசியும் இருவர் ஏவல் செய்கின்றனர். எனவே போர்புரியும் இருவரும் அரச குலத்தைச் சார்ந்தவர்கள் என அறிய முடிகிறது. குதிரையின் காலடியில் ஒரு வீரன் மாண்டு கிடக்கிறான். இவ்வீரனை வான தேவதைகள் அடிப்பாடு வரவேற்கச் செல்லும் காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேல் ஒருவர் அமர்ந்து கும்பிடும் நிலையிலும் மற்றொருவர் நின்று வணங்கும் நிலையிலும், சூரியன், சிவலிங்கம், நந்தி, ஒரு பெண் இறைக்கருவிய ஊதல், பாம்பு, சந்திரன் ஆகியவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இதில் கொண்டுள்ள அரிய நாயன்கள், சொண்டைப்ப நாயன்கள் இருவரும் போட்டதில் சொண்டைப்பன் கொல்லப்பட்டான் எனத் தெரிகிறது. இக்கல்வெட்டு 16-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

Koviloor Digital Library

புலவர். அ. பழனியப்பன், எம்.ஏ., பி.எட்.,

பெரியார் மாவட்டத்தில் பவானிக்கு அண்மையிலுள்ள பர்கூர் மலைப் பகுதியில் அமைந்துள்ளவை. ஈரெட்டி மலை, தேவர்மலை, இக்குமண்டி எளச்சி பாளையம் முதலியன. பர்கூர் மலையில் தாமரைக் கரைக்கு அருகில் உள்ளது. ஈரெட்டி மலை. இங்குள்ள கல்வெட்டினைக் கண்டுபிடித்துத் தொல்பொருள் துறைக்குத் தெரிவித்தேன். இயக்குநர் திரு. நடன. காசிநாதன் அவர்கள் அதனை நன்கு ஆய்ந்து "துறகயுள்ளாருகல்" எனப் படித்துள்ளார்கள். மேலும், தமிழ்-நாட்டில் இதுவரை கிடைத்துள்ள நினைவுக் கல்வெட்டுகளிலே இது மிகப் பழமை வாய்ந்ததாகும்.

ஈரெட்டி மலைப்பகுதியைக் கடந்து தேவர் மலைக்குச் செல்லால் அங்கு வாழும் மக்கள், வழிபடும் பசவேசுவரர் கோயில் உள்ளது. அக்கோயில் சுற்றுவழியில் வடக்குப் புறத்தில் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. வட்டெழுத்து-களால் பொறிக்கப்பட்ட அக்கல்வெட்டு முழுமையாகக் கிடைக்கவில்லை. ஏழு வரிகள் மட்டுமே உள்ளன. அதன் தொடக்கப் பகுதி சிதைந்துவிட்டது.

தேவர் மலைக்கு அருகில் உள்ளது எளச்சிபாளையம் என்னும் சிற்றூர். இங்கு ஒரு கல்வெட்டு உள்ளது. அதில் சங்கு, சக்கரம், வாள் முதலியன பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்துக்கள் அனைத்தும் வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் சிதைந்து விட்டன. எளச்சிபாளையத்திலிருந்து ஒரு மலையைக் கடந்து செல்லால் அதற்கு அடுத்த மலையின் தொடக்கத்திலேயே இக்குமண்டிப் பகுதி அமைந்துள்ளது. இக்கு என்னும் தமிழ்ச் சொல் கரும்பு, கள் ஆகியவற்றைக் குறிக்கும். கள் நிறைந்துள்ள பகுதிக்கு அதாவது தேன் நிறைந்துள்ள பகுதிக்கு இக்கு மண்டி எனப் பெயரிட்டிருக்கிறார்கள் எனத் தோன்றுகிறது. பெரியார் மாவட்டத்திலுள்ள கல்வெட்டுகளில் இது ஒரு புதுமையான கல்வெட்டாகும். உரலின் மீது வட்டமாக ஏறத்தாழ மூன்று வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இதில், ஆண்டு முதலியன தமிழ் எழுத்து-களில் பொறிக்கப்பட்டுள்ளன. இது குமார கம்பனின் காலத்தைச் சார்ந்-ததாக இருக்கும் எனக் கருதுகிறேன். மனித நடமாட்டமே இல்லாத அடர்ந்த காட்டுப் பகுதியில் இது அமைந்துள்ளது. யானைகளும் கரடிகளும் இப்பகுதியில் வாழ்கின்றன.

தாமரைக் கரையிலிருந்து 15 கிலோ மீட்டர் தூர எல்லைக்குள் ஒரு குகையில் எழுத்துக்கள் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. மலைவாழ் மக்கள் செல்வதை வைத்து, அந்தக் குகையின் கூரை சுமார் 12 மீட்டர் உயரத்தில் இருப்பதாகத் தெரிகிறது. அக்கூரையின் கீழ்ப் புறத்தில் எழுத்துகள் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அது குகை ஓவியமாகவும் இருக்கலாம். இதுவரை உயர்ந்த மலைப் பகுதிகளிலும் அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும் இருக்கும் வரலாற்றுச் சின்னங்களைப் பற்றித் தெரிந்தோம். இனி தரைப்பகுதியில் உள்ள சில கல்வெட்டுகளைக் காண்போம்.

Koviloor Digital Library

புலவர். அ. பழனியப்பன், எம்.ஏ., பி.எட்.,

பவானி வட்டத்தில் உள்ளது வெள்ளி திருப்பூர். இங்குப் பளிங்கீசுவரர் கோயில் உளளது. பெருமாள் கோயிலும் பிரம்மன் கோயிலும் உள்ளன. பிரம்மன் கோயில் முன்புறம் 10 ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டில் பையூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. திருப்பையூர் என்பதே திருப்பூர் என மாறிவிட்டது போலும். பெரிய நாச்சியாருக்குத் திருவமுது செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட கொடைச் செய்தி இக்கல்வெட்டில் உள்ளது. இதுவும் தொல்பொருள் துறைக்குக் கிடைக்கப் பெறாத புதிய கல்வெட்டாகும்.

பவானிக்கு அருகில் உள்ள மிகச் சிறிய கிராமம் பட்டலூர். ஒரு காலத்தில் பட்டு நெசவு இவ்வூரில் சிறந்து இருந்ததாகவும், பிறகு அத்-தொழில் செய்தவர்கள் வேறு இடங்களுக்குக் குடியேறிவிட்டார்கள் என்றும் அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். பட்டலூரில் ஈசுவரன் கோயில் ஒன்று உள்ளது. இறைவன் பெயர் வாசீசுவரமுடையார். இறைவி சௌந்தர நாயகி. கொங்கு நாட்டை ஆண்ட கொங்குச் சோழரில் வீரராஜேந்திரன் என்னும் அரசன் கி.பி. 11 -ம் நூற்றாண்டில் ஆட்சி செய்து வந்தான். அவ்வரசன் காலத்துக் கல்வெட்டுகள் பட்டலூரில் நான்கு உள்ளன.

மேலே கூறப்பட்ட நடுகற்கள் மற்றும் கல்வெட்டுகளிலிருந்தும் அரிய செய்திகள் தெரிய வருகின்றன. இக்கல்வெட்டுகளும், நடுகற்களும், ஈமச்சின்னங்களும் உள்ள கொங்கு நாட்டுப் பகுதி, மேலும் நன்கு ஆய்வு செய்யப்பட வேண்டிய பகுதியாகும்.

.. .. ..

Koviloor Digital Library

சிவபுரிப் பட்டியில் சிறப்புமிகு கல்வெட்டு

சி. இவட்சுமணன்,
உலகத் தமிழ்க்கல்வி இயக்கம்,
தமிழகம்–627 806

சிவபுரிப்பட்டி எனும் சிற்றூர் பசும்பொன் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திண்டுக்கல் காரைக்குடி பெருவழியில் சிங்கம்புணரிக்குக் கிழக்கே 2 கி.மீ. தூரத்திலுள்ளது. இவ்வூரிலே பாலாற்றின் வடகரையில் அ/மி நாகேச்சுரர் ஆலயம் அமைந்துள்ளது. இக்கோவிலில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுகளில் 59 கல்வெட்டுகள் 1928–29ஆம் ஆண்டு அறிக்கையில் வெளியாகியுள்ளன. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 14ல் இரண்டு கல்வெட்டுகள் வெளியிடப்பெற்றுள்ளன. மதுரையாவாழ் சிங்கம்புணரி டாக்டர் சி. ஜெயபாரதி அனைத்துக் கல்வெட்டுகளையும் பார்த்து எழுதியுள்ளார். அவருடன் சேர்ந்து நானும் சிலவற்றை எழுதியுள்ளேன். முதலாம் குலோத்துங்கன் கால முதல் சேரபதிகள் கால கட்டத்தைச் சார்ந்தவை, இவை. இக்கல் வட்டுகளில் வரலாற்றுச் சிறப்புமிக்கவையாக மூன்றைக் குறிக்கலாம். அவை முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1112) விக்ரமசோழன் (கி.பி.1121) காலத்தவையாகும்.

இக்காலப்பகுதியில் சோழர்களும் பாண்டியர்களும் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் இப்பகுதிய ஏவராபதி வேளாள்(1) நீலதராசன் ஆகிய அரசியல் அதிகாரிகளின் பரம்பரையினர் சூழ்நிலைக்கேற்ப பாண்டியர் சோழர்களின் கீழ் பணியாற்றியுள்ளனர். இவர்கள் சோழர்களின் அரசியல் தலைவர்களுடனும் தங்களுக்குள்ளும் ஒப்பந்தங்களும் செய்து கொண்டுள்ளனர்.

கி.பி.1110ல் முதலாம் குலோத்துங்கன் சோழன் காலத்தில் சுந்தரத் தோளான் கண்டனான இராசேந்திர சோழஏவராபதி வேளானுக்கும், கண்டன் மங்லாந் தேவனான ஏவராபதி வேளானுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.(2) மற்றொன்று விக்ரம சோழன் காலத்தில் (கி.பி.1121) இராசேந்திரசோழன் தோளனான நீலதராசன், கண்டன் சுந்தரத் தோளனான ஏவராபதி வேளானுக்கும் இடையில் ஏற்பட்டது.(3) கி.பி.1112ல் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் ஐந்நூற்றுவன் உய்யவந்தானான காங்கேயன், பன்னாளப் பிறந்தானான நீலதராசன், சுந்தரத் தோளான் கண்டனான ஏவராபதி வேளான், மங்லாந் தேவன் ஏவராபதி வேளான் ஆகிய நால்வரும் செய்து கொண்ட ஒப்பந்தம்.

---

1. ஏவராபதிவேளான்: டாக்டர் ஜெயபாரதி மதுரைப்பல்கலைக்கழக வரலாற்றுக் கருத்தரங்கு கட்டுரை
2. இக்கல்வெட்டு டாக்டர் பாரதியால் பார்த்தெழுதப் பெற்றுள்ளது
3. ARE.55/28,29

..2

Koviloor Digital Library

இவ்வுடன் படிக்கை பற்றிய கல்வெட்டு முதலாம் பிரகாரத்தில் தட்சிணாமூர்த்திக்கு மேற்புறம் குறிக்கப் பெற்றுள்ளது.(4)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனசக்ரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க
2. சோழ தேவற்குயாண்டு பாற்பத்தொன்றாவது ஐந்நூற்ற
3. வன் உய்ய வந்தாஞ் காங்கேயனும், ஸ்ரீ மன்னனைப் பிறந்தா
4. னான நிகரராயனும், ஸ்ரீ சுந்தரத் தோளன் கண்டன்றன
5. ராபதி வேளானும், கண்டன் பங்கனாத் தேவனான ஏவராபதிவே
6. ளானும் சொன்னான் வொமான் வெட்டிவைத்தியானது ஒருபா
7. கங்கொளுவோம் உயர் பொருள் குதலை மானம் எப்பேற்பட்டு
8. ரும் பிழைபொ—ரும் ஏன்னான் வோயினும் ஒருவோர்
9. ஒருவோர் பிழைக்கில் நின்ற முருவாழுங் கூடி பிழைத்தவ--
10. செய்யக்கடவோமாகவும் இப்படி தப்புவார்கள் கள்ளுக்
11. குடிக்கு—தாயுத்தின்ற கழுதைக்கும் பிறந்த நாய்க்கும் பிறந்
12. த பிழைத்தவன்.....ரும் இப்படி--
13. வைபவிந்த கல்வெட்டினும் இந்நாயனார் ரட்சை

இக்கல்வெட்டு குறிப்பிடும் ஏவராபதி வேளார்கள் இருவரும் முதலாம் குலோத்துங்கன் விக்ரமசோழன் காலத்தவர்கள்

ஸ்ரீ மன்னனைப் பிறந்தானான நிகரராசன் இப்பகுதியையாண்ட நிகரராசன் என்ற அரசியல் அதிகாரியின் குடும்பத்தைச் சார்ந்தவனாவான் எனக் கொள்ளலாம்.

---

4. எண்ணாண் பார்த்தெழுதப் பெற்றது.

Koviloor Digital Library

அத்தானி - ஓர் ஆய்வு

டாக்டர் .ஆர் . ரங்கராஜ் ,
தமிழ் துறை ,
சிக்கய்ய நாயக்கர் கல்லூரி ,
ஈரோடு - 638 004.

பாண்டி, கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் அத்தானி பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. ஆனால் அத்தானி என்பது எதைக்குறிக்கிறது என்பதை அக்கல்வெட்டுகள் மூலமாக திட்டவட்டமாக அறிந்துகொள்ள இயலவில்லை. கிடைத்துள்ள தகவல்களைக் கொண்டு அதன் பொருளை ஆராய முற்படுகிறது இக்கட்டுரை.

பாண்டி நாட்டுக் கல்வெட்டுகள் :-

பள்ளிமடம் (1) எதிர்க்கோட்டை (2) ஆகிய ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் சடையமாறன் என்ற பாண்டிய மன்னனின் காலத்தைச் சேர்ந்தவை. பள்ளிமடம் சுந்தரபாண்டிய ஈஸ்வரமுடையார் கோயில் மாறஞ்சடையன் சோழன் தலை கொண்ட வீரபாண்டியன் காலத்தில் கட்டப்பட்டது. ஆகையால் அக்-கோயிலுள்ள அத்தானி பற்றிக் கூறும் சடையமாறன் கல்வெட்டு, வீரபாண்டி-யனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த மன்னனின் கல்வெட்டாகும். எனவே அத்தானி பற்றிக் கூறும் பள்ளி மடம் சடையமாறன் கல்வெட்டு கி.பி.10-ம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்ததாகும். எதிர்க்கோட்டையிலுள்ள கல்வெட்டும் சடைய-மாறன் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்ததுதான். சடையமாறன் என்ற பெயரில் பாண்டிய மன்னர்கள் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லவன், ராஜசிம்ம பாண்டியன் ஆகியோர் காலக் கல்வெட்டுகள் கிடைப்பதால் எதிர்க் கோட்டையிலுள்ள சடையமாறன் யார் என்பதை அக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டே தீர்மானிக்க முடியும், என்றாலும் அக்கல்வெட்டு வட்டெழுத்து கல்வெட்டு என்பதால் அது கி.பி.7, 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் துணியலாம்.

வடுகப்பட்டியில் சமீபத்தில் கண்டுபிடித்த சமணக் கல்வெட்டிலும் அத்தானி குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு அது கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கூறலாம். (3) அத்தானி பற்றிக் கிடைத்த கல்வெட்டுகளில் இம்மூன்று மே காலத்தால் முந்தியவை. இதற்குப் பின்னர் திருநெல்வேலி மாவட்டம் அத்தாள நல்லூரில் முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டொன்று அத்தானி நல்லூர் என்று அவ்வூரைக் குறிப்பிடு-கிறது. (4) முதலாம் குலோத்துங்க சோழனின் சமகால பாண்டிய மன்ன-னாகிய ஜடாவர்மன் குலசேகரபாண்டியனின் தென்கரைக் கல்வெட்டொன்றும் அத்தானி பற்றிக் கூறுகின்றது. (5) அத்தாள நல்லூரிலுள்ள பிற்காலப் பாண்டியப் பேரரசைச் சேர்ந்த மன்னர்களின் கல்வெட்டுகளும் அவ்வூரை அத்தானி நல்லூர் (6) என்றழைக்கின்றன. இனி அத்தானி பற்றிக்கூறும் அனைத்து கல்வெட்டுச் செய்திகளையும் காண்போம்.

கல்வெட்டுச் செய்திகள் :

(1) பாற்சுனைக்குடிபடாரர் என்னும் இறைவனைக் குறிப்பிடும் எதிர்க்கோட்டைக் கல்வெட்டில் அக்கோவிலில் கூவிச் சேவகனாகப் பணிபுரிந்த

Koviloor Digital Library

மாறம்பட்டன் என்பவன் இறந்து விட்டபோது வெண்பைக் குடி நாட்டைச்சேர்ந்த அத்தாவிக்கரை மாகாவிக்குடி சேவகன் பொன் தானமளித்திருக்கிறான். இக்கல்வெட்டில் அத்தாவிக்கரை என்பது ஒரு இடத்தின் பெயராகக் கூறப்பட்டிருக்கிறது.

(2) பள்ளிமடம் கல்வெட்டில், கலிசல் மங்கலத்தைச் சேர்ந்த தச்சன் ஒருவன், இருபத்தைந்து ஆடுகளை, சுந்தர பாண்டிய ஈஸ்வரமுடையார் கோயிலுக்கு அளித்திருக்கிறான். அவ்வாறு அவன் கொடையளிக்கும்போது,

'அத்தாவிகளோடு திருந்தி வைச்ச ஆடு'

என்று அத்தாவிகளோடு அவ்வறத்தைச் செய்ததாகக் கூறுகிறது கல்வெட்டு. அந்த ஆடுகளைப் பராமரிக்கும் பொறுப்பை, இருவர் பெற்றுக்கொண்டனர். இதைக்குறிப்பிடும் கல்வெட்டு,

'இவ்விருவரும் ஒருவர்க்கு ஒருவர் புனை அத்தாவிகள் வச்சது' - எனக் கூறி முடிகிறது. எனவே இக்கல்வெட்டில் அத்தாவிகள் என்பது ஒரு குழுவைக் குறிக்கிறது.

(3) வடுகப்பட்டியில் கிடைத்த கல்வெட்டு ஒரு சமணக்கல்வெட்டு என்று பார்த்தோம். பாகனூர்க் கூற்றத்தில் மானசித்த நல்லூர் ஆகிய மாலைக் குளம் என்ற ஊரிலுள்ள 'தானசாலையும் குளமும் அத்தாவிகள் பேராயினமையில்' என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. அத்துடன் இவ்வூருக்கும் இவ்வறத்துக்கும் வரும் தீமையை நசுக்கிக் கூலிச் சேவகர்கள் காத்திட வேண்டும் என்றும் கூறுகிறது. ஆகவே தானசாலையும் குளமும் அத்தாவிகளால் சமணக் கோயிலுக்கு தானமளிக்கப் பட்டிருத்தல் வேண்டும். அதனால் கூலிச் சேவகர்கள் அந்த ஊரையும் அறத்தையும் காத்திடல் வேண்டும் என்று கூறுகிறது.

(4) மேற்கூறிய வடுகப்பட்டி கல்வெட்டு, எதிர்க்கோட்டைக் கல்வெட்டோடு ஒப்பு நோக்கத் தக்கது. எதிர்க்கோட்டைக் கல்வெட்டிலும் அத்தாவிக் கரை என்ற இடத்தைச் சேர்ந்த மாகாவிக்குடி சேவகன் குறிப்பிடப் படுகிறார். அவன் மற்றோர் கூலிச் சேவகன் இறந்தமைக்காக அவன் பெயரில் தானமளித்துள்ளான்.

<u>அத்தாவிகள் கூலிச்சேவகர் என்ற வீரர்களா?</u>

மேற்கண்ட செய்திகள் மூலமாக அத்தாவிகள், கூலிச்சேவகர் என்ற வீரர்களைக் கொண்ட குழுவினர் என்பது பெறப்படுகின்றது. மேலும் எதிர்க்கோட்டை பாற்சுனைக்குடி படாரர் என்ற இறைவனுக்கு கூலிச் சேவகராகப் பணிபுரிந்தது போலவே, வடுகப்பட்டி வர்த்தமானர் கோயில் தானசாலை, குளம் இவற்றையும் கூலிச் சேவகர்கள் காவலாக இருந்து காத்தனர் என்பதால் சமணக்கோயில்களுக்குக் காவல் வீரர்கள் இருந்தனர் என்பதும் அவர்கள் அத்தாவி என்ற படைவீரர்கள் என்பதும் பெறப்படுவதால் எதிர்க்கோட்டை பாற்சுனைக்குடி படாரர் சமணக்கோயில் தீர்த்தங்கரராகவே இருத்தல் வேண்டும். வடுகப்பட்டிக் கல்வெட்டில்,

Koviloor Digital Library

25

டாக்டர் .ஆர் . ரங்கராஜ்.

கோவிலூர் ஆண்டவர் A. No. 7947 ND கோவிலூர்

'ஆச்ச வீர அத்தாணிகள'

என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 'அத்தாணிகள்' என்பது வீரர் குழுவினரே என்பது உறுதியாகத் தெரிய வருகிறது. இவர்கள் ஆச்சவீரர்கள் என்றும் கூலிச் சேவகர் என்றும் அழைக்கப்பட்டிருந்தனர்.

முதலாம் குலோத்துங்க சோழனின் அத்தானநல்லூர்க் கல்வெட்டு :-

ராஜராஜ பாண்டி நாட்டு, உத்தமசோழ வளநாட்டு, முளிநாட்டுப் பிரமதேயம் ராஜராஜசதுர்வேதி மங்கலத்தின் கீழ்ப்பிடாகை அத்தாணி நல்லூர். இவ்வூரின் சில நிலங்களைப் பிரித்து ராஜநாராயண-நல்லூர் என்ற பெயரில் இறையிலி தேவதானமாக மொய்மாம்பூம்பொழில் ஆழ்வார் கோயிலுக்கு வழங்கப்பட்ட செய்தியையே குலோத்துங்கன் கல்வெட்டுக் கூறுகிறது. (7) சதுர்வேதி மங்கலத்தின் பிடாகை, அத்தாணிகள் பேரால் அமைந்திருந்ததால், இப்பிடாகை அத்தாணிகள் ஆகிய படைவீரர்கள் தங்கியிருந்த படைத்தளமாகவே இருந்திருக்கிறது. இவ்வூரிலுள்ள கல்வெட்டுகள் இவ்வூரில் பெரும்படையொன்று பத்து பிரிவுகளுடன் இருந்ததைக் குறிப்பிடுகின்றன. (8)

இந்த படைகளின் தலைவன் ஜகதப்பக் கண்டன் என்பவனை வீர பாண்டியன் கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது. இத்தலைவன் பெயரில் சிவன் கோயிலில் விநாயகப் பிள்ளையார் எடுக்கப்பட்ட செய்தி கூறப்பட்டிருக்கிறது. இத்தலைவனுக்கு ஜீவிதமாக அருகிலுள்ள தம்பன் தட்டை என்ற ஊரில் நிலம் கொடுக்கப்பட்டிருந்தது என்பதை அவ்வூரிலுள்ள கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது. (9)

அத்தாள நல்லூரில் படைத்தலைவன் பற்றிக்குறிப்பிடும் சிவன் கோவிலின் பெயரும் நம்மை வியக்க வைக்கிறது. கோவிலின் பெயர் மூன்றுகை ஈஸ்வரமுடையார் கோயில் என்பது. மூன்று கை மகாசேனை என்ற படைப்பிரிவு பற்றி பல கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இப்படைகள் கோவில்களின் கருவூலத்தைப் பாதுகாத்திருந்தன.

திருநாமநல்லூரும் அத்தாணி நல்லூரும் :

சோழ மன்னன் முதலாம் பராந்தக சோழனின் மகன், இளவரசன் இராஜாதித்தன் பெரும்படையுடன் தங்கியிருந்த படை வீட்டில் இராஜாதித்தேஸ்வரம் என்ற கோயில் கட்டி அதற்கு இளவரசன் இராஜாதித்-தனும், படைத்தலைவர்களும், படை வீரர்களும் பல்வேறு தானமளித்து சிறப்பித்தது போலவே, நெல்லை மாவட்டத்து அத்தாள நல்லூரிலும் பெரும்-படை ஒன்று தங்கியிருந்தது. அப்படை வீட்டில் படையின் பெயரிலேயே மூன்றுகை ஈஸ்வரமுடையார் என்ற பெயரில் கோயில் கட்டி அதற்கு தானமளித்து வழிபட்டனர் என்பது தெரிகிறது. நெல்லை மாவட்டம் பத்தமடையிலுள்ள ஆயிரத்தெண்ம விண்ணகர், மூன்று கையர் என்ற படையினரின் பாதுகாப்பில் இருந்ததை அவ்வூர் கல்வெட்டுக் கூறுகிறது. (10)

Koviloor Digital Library

டாக்டர்.ஆர்.ரங்கராஜ்.

அத்தாணி பற்றிய தெற்கரைக் கல்வெட்டு:

மதுரை மாவட்டம் தென்கரையிலுள்ள மூலநாதசுவாமி கோயிலில் சடையவர்மன் ஸ்ரீ வல்லப பாண்டியனின் கல் வெட்டு ஒன்று அத்தாணி பற்றிய மிகச் சிறந்த செய்தியைக் கூறுகிறது என்பதை முன்னர்க் கூறினோம். இம்மன்னன் முதலாம் குலோத்துங்க சோழனின் சம காலத்தைச் சேர்ந்தவன். கி.பி.1101 ல் முடி சூடியவன்.

இம்மன்னனின் 21 -ஆம் ஆண்டு முதல், அதாவது கி.பி. 1122 -ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதாவது அதுவரையிலும் ஐய்யப்பொழில், அத்தாணி, சித்ரமேழி எனக் கூறப்பட்ட குழுவினர் அன்று முதல் முறையே வலங்கை, இடங்கை, சிறுதனம் என்று அழைக்கப்படவேண்டும் என்பதே அத்தீர்மானமாகும்.

அத்தாணிகள் வணிகக் குழுவினரா?

மேற்கூறிய மூன்று குழுக்களில் ஐய்யம்பொழில் - என்பவர்கள் ஐயப்பொழில் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்ற வணிகக் குழுவினரின், கர்நாடக மாநிலத்திலுள்ள ஊர்ப் பெயராகும். எனவே இந்த ஐயப்பொழில் எனக் கல்வெட்டில் குறிப்பிடப்படுபவர்கள் அவர்களேயாவர். சித்ரமேழி - என்பது சித்ரமேழி பெரிய நாட்டார் என்ற வணிகக் குழுவினரைக் குறிக்கும் பெயராகும். இக்குழுவினர் மேழியைக் கொடியாக உடையவர்கள். தங்களுக்-கென தனமெய்கீர்த்தியையும் கொண்டு, சுயேச்சையாக கி.பி.11-ம் நூற்றாண்டில் பல கல்வெட்டுகள் பொறித்திருக்கின்றனர். எனவே இவ்விரு வணிகக் குழுக்களுடன் கூறப்பட்டிருக்கும். அத்தாணியும் வணிகக் குழுவே என்பது பெறப்படுகிறது. அதுமட்டுமல்ல வடுகப்பட்டிக் கல்வெட்டிலும் அத்தாணியுடன் பெருநிரவி, திசையாயிரத்து ஐந்நூற்றுவர் அறுகை வணிகர் என்னும் வணிகக் குழுவினர் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

கி.பி.12 -ம் நூற்றாண்டில் இவர்கள், வலங்கை, இடங்கை, சிறுதனம் என்றழைக்கப்பட்டதால் இவர்கள் வீரர்கள் என்பதுவும் உறுதியாகத் தெரிகிறது. அத்தாணிகள் இடங்கையினர் என்றும் தெரிகிறது.

அத்தாணிகள் வணிகப்படையினராக இருந்த காரணத்தினால் தான் வணிகர்களில் ஒரு பிரிவினர் ஆதரித்த சமணக் கோயிலுக்கு தானமளித்தும் காவலாகவும் விளங்கினர். சமணக்கோயில்களில் படைவீரர்கள் தங்கியிருந்து பராமரித்தனர் என்பதற்கு உதாரணமாக கழுமலை சமணக்கோயிலையும் கூறலாம். அங்குள்ள மாறஞ்சடையன் என்ற பாண்டிய மன்னனின் கல்வெட்டு,

'திருமலை வீரரும் பராந்தக வீரரும் ரணசடி' (11)

என்று கூறுகின்றது. ஏற்கனவே வடுகப்பட்டி கோயிலை, ஆச்சவீர அத்தாணிகள் பாதுகாத்ததையும், எதிர்க்கோட்டை பாற்சுனைக்குடி படாரரை கஞ்ச சேவகர் என்ற அத்தாணிகள் பாதுகாத்ததையும் கூறினோம். வடுகப்பட்டி

Koviloor Digital Library

என்ற சமணத்தலமான சித்தநல்லூர் என்றழைக்கப்பட்டதுபோல, கருமலையும் குருகானை நல்லூர் என்றழைக்கப்பட்டது. கருமலைச் சமண கோயில் மாணவர்களுக்கு சித்தாந்தம் வகுக்கப்பட்டது. அவர்களுக்கும் உணவும் வழங்கப்பட்டது வடுகப்பட்டிக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் தானசாலையும் இத்தகைய சாலையாகவே இருந்திருத்தல் வேண்டும். சாலை என்பது மாணவர்களுக்கு உணவும் உறைவிடத்துடன் கல்வியும் வழங்கும் இடம் என்பது வரலாற்றறிஞர்கள் அறிந்த உண்மையாகும். ஜீனகல்வெட்டில் குறிப்பிடப்பட்ட அத்தாணிகள் முவர், ஒருவர் குறிப்பிடப்படுகின்றார். இவர் சமண சித்தாந்தத்தில் வல்ல ஆசிரியராகவே இருத்தல் வேண்டும்.

<u>விஜயமங்கலத்தில் அத்தாணிவரம்:</u>

விஜயமங்கலம் சோமேஸ்வரர் கோயிலில் உள்ள சுந்தரபாண்டியனின் கல்வெட்டொன்று அத்தாணி ஈவிரமுடையாரைக் குறிப்பிடுகின்றது. (12) ஆதியூர் சிவன் கோயில் மகா மண்டபத்தில் நிலைப்படியிலுள்ள விக்கிரம சோழனின் கல்வெட்டும் விஜயமங்கலத்து அத்தாணிவரமுடையாரைக் குறிப்பிடுகின்றது. (13) அத்தாணிகள் பெயரில் சிவன் கோயில் அமைந்த இவ்வூர் ஒரு சிறந்த சமணத் தலமாக விளங்கியிருக்கிறது. முதலாம் குலோத்துங்க சோழனின் சகவருடம் 1085-ஐச் சேர்ந்த கல்வெட்டொன்று விஜயமங்கலத்திலிருந்த வீர சங்காத-பெரும்பள்ளிக்கு நிலதானம் அளித்ததைத் தெரிவிக்கிறது. (14) கங்கமன்னர்கள் இரண்டாம் மாறசிம்மனுக்கும், இரண்டாம் ராசமல்லனுக்கும் மந்திரியாய் பதவி வகித்த சாமுண்டராயனின் தங்கை, புலவப்பா என்ற சமண முனிவருக்கு நிசீதிகை அமைத்துக் கொடுத்த செய்தியும் ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது. (15) இக்-கல்வெட்டுக் குறிப்பிடும் சாமுண்டராயன்தான், கர்நாடக மாநிலம் சரவண-பெளகோலாவில் சமண தீர்த்தங்கரர் பாகுபலிக்கு மிகப் பெரிய உருவம் அமைத்தவன்.

சமண சமயத்தைப் பற்றிக் கூறும் ஒவ்வொரு கல்வெட்டுகளும் விஜயமங்கலத்திலுள்ள சமணக் கோயிலாகிய சந்திரநாதர் கோயிலில் உள்ளன. இக்கோயிலின் மண்டபத்தின் உள்புறத்தில் மேலே சமண முனிவர்கள் கூடி விவாதிக்-கும் காட்சி இடம் பெற்றுள்ளது சிற்பமாக சமணக் கோயில் உள்ள ஊராகிய விஜய மங்கலத்தில் அத்தாணி பற்றிய காணப்படுவது போல சித்திரமேழியினர் வாழ்ந்தனர் என்பதும் கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகிறது. இவ்வூரிலுள்ள காய மாணிக்கப் பெருமாள் கோயிலை, கல்வெட்டுகள் சித்திரமேழி விண்ணகர் என்றே குறிப்பிடுகின்றன. (16) எனவே, சமணத் தலத்தில் சமண சமய வீரர்களாக வாழ்ந்த அத்தாணிகளும், சித்திரமேழியாகிய சிறுதனம் என்ம் படையினரும் பின்னர் ஆரியர், சீக்க மாற்றங்களுக்கேற்ப தாங்களும் சைவ வைணவ சமயங்களைப் பின்பற்றலாயினர்.

சமண கோயிலுக்கு காவலாக இருந்த அத்தாணிகள், வீர-ராஜேந்திரன் காலத்தில் (கி.பி.1207-08) விஜயமங்கலத்தில் திருமேற்-கோயில் சித்திரமேழி விண்ணகராழ்வார் கோயிலுக்கு மாகாப்பளித்தனர்.

Koviloor Digital Library

பாதுகாப்பளித்த வீரர்கள் இக்கல்வெட்டில் இடங்கையினர் என்று கூறப்பட்டிருக்கின்றனர். (17) தென்கரைக் கல்வெட்டில் அத்தாளிகள் இடங்கையினர் என அழைக்கப்படல் வேண்டும் என ஆணையிடப்பட்டன இங்கு நினைவு கூறத்தக்கன. எனவே சமணத் தலமாகிய விஜயமங்கலத்தில் அத்தாளிகள் சித்திரமேழிகள் போன்றவர்கள் வாழ்ந்தனர் என்பன இந்த ஆய்வுக்கு மேலும் உரம் சேர்ப்பதாக உள்ளன.

முடிவாக:

அத்தாளி என்பவர்கள் வணிகக் குழுவினர் மற்றும் வீரர்கள். அவர்கள் சமணக் கோயில்களில் காவல் வீரர்களாகப் பணி புரிந்தனர். அவர்களுக்கு ஆசிச வீரர்கள் என்றும் கூனிச்சேவகர் என்றும் பெயர் இருந்தன. கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் சைவ, வைணவ சமயங்களைத் தழுவி அக்கோயில்களில் பாதுகாப்பு வீரர்களாகச் செயல்பட்டனர். கி.பி. 1126-ல் இடங்கை என்ற பெயருடன் விளங்கினர். அத்தாளி என்ற அந்த வீரர்கள் தங்கள் பெயரிலேயே அத்தாளீஸ்வரம் என்ற சிவன் கோயில் கட்டியிருந்தனர். அவர்கள் தங்கியிருந்த இடம் இல்லன படை வீடும் அவர்கள் பெயரிலேயே அமைந்திருந்தன.

Koviloor Digital Library

விஜய நகர காலத்து கைக்கோளர்கள்

முனைவர் பு. சந்திரசேகரன்,
முதுநிலைப் பேராசிரியர்,
இராஜாக்கள் கல்லூரி,
இராஜபாளையம்

முன்னுரை:

விஜய நகர காலத்து தமிழ் சமூகம் படைத்தவைவர்கள் ஆதிக்கம் நிறைந்த நிலமான்ய சமூகமா, அல்லது வணிகர்கள் மேலாதிக்கம் நிறைந்த பொருள் உற்பத்தி சமூகமா[1] என்ற கேள்விகள் வரலாற்றில் இன்னும் தீர்க்கப்படாமலிருந்தாலும், விஜயநகர காலத்தில், பிற்கால சோழர்கள், பாண்டியர்கள் காலத்தில் காணப்படாத பல்வகையான தொழிற் பிரிவு மக்கள் காணப்பட்டார்கள் என்பதை மறுக்க முடியாது. அங்ஙனம் பலவகையான சாதி, தொழிற் பிரிவினைச் சார்ந்தவர்கள் அடிப்படையில் மூன்று பிரிவினராகக் கருதப்பட்டனர். 1. குடிகள் 2. காசாய வர்கம் 3. பட்டடைக் குடிகள்[2] குடிகள் என்பவர்கள் ஓரளவிற்கு முதலீடு செய்து தொழில் நடத்துபவர்களாவர். காசாய வர்கம் என்பவர்கள் காசு ஒன்றைத் தவிர காணியங்கள் மூலமாக வருமானமில்லாதவர்கள் ஆவர். பட்டடை என்பவர்கள் நூல்கள் தயாரிப்பில் ஈடுபட்டவர்களாவர். இங்ஙனம் விஜய நகர காலத்தும் பலவித சாதி, தொழிற் பிரிவு மக்கள் மூன்று பெரும் பிரிவுகளாகக் காணப்பட்டனர். இவைகளில் கைக்கோளர்கள் என்ற ஒரு தொழிற்பிரிவு சமூகத்தினைப் பற்றி இக்கட்டுரை விளக்குகின்றது. இதற்குரிய ஆதாரங்களாக எம்.எரோஷியா, ஒய்.சுப்பாராயலு மற்றும் பி.சமூகம் தயாரித்த கல்வெட்டுக்களில் வருவாய்ச் சொற்களை புள்ளியல் ரீதியாக ஆராய்ந்து தமிழ்நாட்டில் விஜயநகர ஆட்சியினை வெளிக் கொணரும் விதமாக வெளியிடப்பட்ட கல்வெட்டுத் தொகுதிகளின் பகுதி இரண்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.[3]

கைக்கோளர்கள்:

(1) பிரிவு: கைக்கோளர்கள் என்பவர்கள் பல குடிமக்களில் ஒரு பிரிவினர் ஆவர். இவர்கள் வியாபார வர்கத்தைச் சார்ந்த ஒரு பிரிவினரே என்று வட ஆற்காடு மாவட்டம் வடமதேவி மங்கலம் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. ஏனெனில் கைக்கோளர்கள், பற்றைய வணிகம் செய்யக் கூடியவர்களான வாணியர், செட்டிகள், செக்கு வணிகர் போன்ற பிரிவு மக்களுடனேயே குடியேறுவதாக கல்வெட்டு குறிப்பிடுகின்றது. தென்னாற்காடு மாவட்டம் திருக்கோயிலூர் 1442-ம் ஆண்டு கல்வெட்டு குறிப்பிடும் மொழுர கைக்கோளர்களில் மூன்று பிரிவுகள் உள்ளதாக குறிப்பிடுகின்றது.[4] 1. குடி 2.பரதேசி அதாவது பிற தேசங்களிலிருந்து வந்து போகிறவர்கள் 3. பல பட்டடை குடி நூல் நூற்பது, துணி அடிப்பது போன்ற உதிரி தொழில் புரிபவர்கள்.

(2) வாழும் இடங்கள்:

திருமடை விநாகத்தில் இவர்கள் குடியேறினார்களென்று தென்னாற்காடு மாவட்டம் பரக்கோவில் ஊரில் 1368-ம் ஆண்டு வெளியான கல்வெட்டு குறிப்பிடுகின்றது.[5] கோயிலைச் சார்ந்த திருநாமத்துக்காணி ஊர்களில் குடியேறி வசித்தார்கள். இவர்கள் புதியதாகக் குடியேறியதால் இவர்கள் வாழும் தெருக்கள் புதிய தெருக்கள் என்றழைக்கப்பட்டது. கோயிலைத் தொடர்ந்த

Koviloor Digital Library

ஆய் தவிர மற்றைய ஊர்களிலும் அவர்கள் வசித்து வந்தனர். பெருநகர் கைக்கோளர்கள்(6) என்ற வரிகள் பெருநகர் என்ற நகரத்திற்கு முழு உரிமை படைத்தவர்கள் கைக்கோளர்கள் என்று சுட்டிக் காட்டுகின்றன. தென்னாற்காடு மாவட்டம் திருக்கோயிலூர் 1442-ஆம் ஆண்டு கல்வெட்டானது குறிப்பிடும் பொழுது கைக்கோளர்கள் ஆடையோடு ஆய் பேட்டை என்றழைக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றது.

தொழில்:

கைக்கோளர்கள் மற்றைய வியாபார பிரிவினராக வாணியர்கள், செட்டிகள், செக்கு வணிகர்கள் போன்றவர்களைப் போலவே அவர்களும் ஒரு வியாபாரம் செய்யக் கூடிய பிரிவினர் ஆவர். அவர்கள் நறி எட்டு நெய்யும் தொழிலைச் செய்து வந்தனர். தாங்களே நறி எட்டு புடவை நெய்து தாங்களாகவே பட்டணத்துக்குக் கொண்டு சென்று விற்றார்கள். மேலும் பட்டணத்திலிருந்து தங்களுக்குத் தேவையான சரக்குகளையும் கொண்டு வந்தார்கள் என்றும் செங்கல்பட்டு திருக்கழுக்குன்றம் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.(8) மேலும் அக்கல்வெட்டானது பலபற்றில் கொண்ட நெல்லுக்கும்; எனக் குறிப்பிடுகின்றது. இதன்மூலம் கைக்கோளர்கள் பல கிராமங்களுக்கும் சென்று புடவைகளை விற்பனை செய்து நெல் பெற்றனர் என்றும் தெரிகின்றது.

வரி விதிப்பு:

கைக்கோளர்கள் பட்டணத்துக்குச் சென்று விற்பனை செய்வதற்கும், கிராமங்களில் போய் விற்பனை செய்வதற்கும் வரி, கட்டுக் குத்தகையாக வருடத்திற்கு நிச்சயிக்கப்பட்டு அளிக்கப்பட்டு வந்ததாக திருக்கழுக்குன்றம் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.(9) ஒரு தமிழ் வருடம் ஆடி மாதம் முதல் ஆவணி மாதம் வரை நிச்சயிக்கப்பட்டது. இவைகள் வேளாண்மை பொருட்களின் மீது வசூலிக்கப்படுபவைகள் போல, சித்திரை மாதமோ, ஐப்பசி மாதமோ அல்லது கார்த்திகை மாதமோ போலல்லாது குறிப்பிடத்தக்கதாகும். கைக்கோளர்களில் நறி எட்டு நெய்யும் ஒவ்வொருவரும் நறிக் கடமை செலுத்தினர். அவர்கள் கட்டி வசிக்கும் வீடுக்கு வாசல் பணம் வசூலிக்கப் பட்டது. ஒவ்வொரு வாசலுக்கும் வாசல் பணம் கைக்கிடப்பட்டது.(10)

கைக்கோளர்களின் வெளியேறுதல்:

கைக்கோளர்கள் தாங்கள் வாழும் இடங்களில் கட்ட வேண்டிய வரியோ, காணிக்கையோ அதிகமாகச் சென்றால் அந்த இடங்களை விட்டு உடனே வெளியேறி விடுகின்றனர். 1417-ல் வெளியிடப்பட்டுள்ள செங்கல்பட்டு மாவட்டம் புலிப்பாக்கம் கல்வெட்டு கைக்கோளர்களுக்கும், கோயில் தானத்தாருக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி குறிப்பிடுகின்றது. இதில் கைக்கோளர்கள், கோயில் பற்று அற்ற மாரியாதை வாசல் பணம் கழிக்க வேண்டுமென்று ஊரிலிருந்து வெளியேறி சந்திர கிரிச் சாலையில் போய் தங்கியிருந்தனர். எனவே கோயில் தானத்தார்கள் அவிமேல், கோயில் பற்று அற்ற மாரியாதை வாசல் பணம் கழித்து பெற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டார்கள். 1448-ல் வெளியான செங்கல்பட்டு திருப்புலி வனம் கல்வெட்டொன்று(12) கைக்கோளர்கள் இதைச் செலுத்த முடியாமல் பல ஊர்களுக்கு சிதறி ஓடினார்களென்றும், அதன் பயனாக கைக்கோளர்களின் நறிக் கடமையும்,

Koviloor Digital Library

(31)

~~முனைவர்~~ பு.சந்திரசேகரன்

வாசல் பணம் 5 பணம் ஆக நிச்சயித்த நிலத்தைத் தவிர வேறு பணம் வசூலிக்கக் கொள்வதில்லை யென்றும் தீர்மானிக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன. செங்கல்பட்டு பெருநகரில் 1448ல் வெளியான கல்வெட்டொன்று பெருநகர் கைக்கோளர்கள் ஒரு ஆற்றாமையில் ஒரு பெயர்ந்து சென்று விட்டனர் என்றும் அதன் பின்னர் வரி விதிப்பு குறைக்கப்பட்டது என்றும் குறிப்பிடுகின்றது.

சாதி அமைப்பு:

கைக்கோளர்கள் வலங்கை பிரிவினைச் சார்ந்தவர்கள். அவர்கள் சங்கு, தீபம், ஆனை, சாமரம் முதலியவைகள் கொண்டிருந்தனர்.(14) இவர்கள் சாதி அமைப்பில், பிராமணர், வேளாளர், செட்டியார் போன்ற சாதிகளுக்கு பின்னுக்கு வசித்தனர். இவர்களுக்கும் பின்பும், இடையர், கள்ளர், சாத்தார்கள் போன்ற சாதிப் பிரிவுகளிருந்தன. இவர்களில் அம்பலவர் என்ற தலைவ பதவியிருந்தது. இவர் காங்கேயராயர் என்ற பட்டப் பெயரும் கொண்டிருந்தார். இவர் ஊராரிடமிருந்து நிலம் பெற்று காவியாளராகவும் விளங்கினார். இவர் பெற்ற நிலங்களும் நாட்டவரால் முழு இறையிலியும் அளிக்கப்பட்டதென்று செங்கல்பட்டு திருவண்ணக் கோயில் கல்வெட்டு(16) குறிப்பிடுகின்றது.

முடிவுரை:

மேற்கூறப்பட்ட கல்வெட்டுக்கள் விஜயநகர காலத்து கைக்கோளர்கள், வணிகச் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றவர்களாக விளங்கினர் என்றும், அவர்களைத் தங்க வைப்பதற்கென பல வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டன- வென்றும் அறிந்து கொள்ள முடிகின்றது. அவர்கள் கோயிலைச் சார்ந்தும், நகரங்களிலும், பேட்டைகளிலும் வசித்தனர் என்றும், அவர்களில் சிலர் நில உடமையாளிராத மானியர் என்றும் அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. கரோசியா போன்றவர்கள் நிலமான்ய அமைப்பிற்கும், டேவிட் லட்டன் போன்றோர்கள் பொருள் உற்பத்தி சமூகத்திற்கும் அதிக முக்யத்துவம் அளிக்கின்றார்கள்.
2. தொ.அ.1916. 250
3. கா.கரோஷியா, ஒ.சுப்பாராயலு, பி.சண்முகம் Vijayanagara Ruler in Tamil country as revealed through a statistical study of Revenue terms in inscriptions Part two (Appendix III) Institute for the study of languages and culture of Asia and Africa, 1989)
4. தொ.அ. 1925.429
5. தொ.அ. 1929,34
6. தொ.அ. 1925.370
7. தொ.அ. 1925.429
8. தொ.அ. 1933.170
9. மேலது
10. தொ,அ. 1940-111
11. தொ.அ. 1920-294
12. தொ.அ. 1923-201
13. தொ.அ. 1923.300
14. தெ.க.தொ. 8 எண் 155
15. தெ.க.தொ. 8 எண் 400
16. தொ.அ. 1911.362

Koviloor Digital Library

(52)

அரசூருடையாள் செங்கவிராயன்

டாக்டர் நா.வரவேல்,
அரசு கலைக்கல்லூரி,
மேலூர்.

வாழ்க்கையில் பல சாதனைகளைப் புரிந்த சில முக்கிய மனிதர்கள் வரலாற்றறிஞர்களின் பார்வையிலிருந்து விடுபட்டுப் போகின்றனர். மன்னர்களின் சிறப்புகளுக்கு அவர்களிடம் உயர் அதிகாரிகளாகப் பணியாற்றிய இத்தகைய பெரிய மனிதர்களின் சாதனைகளும் ஒரு காரணமாகும். அத்தகைய பெரிய மனிதருள் ஒருவரே அரசூருடையாள் செங்கவிராயன் பெருமாள் பிள்ளையான சோழக் கோனார் என்பவர். இவர் நல்லவர், வல்லவர், நான்கு தலைமுறை மன்னர்களிடம் பணியாற்றியவர். சிறந்த நிர்வாகத் திறமுடைய சிற்றரசர். தம் குடிமக்களிடத்தில் கனிவாகப் பேசக் கூடியவர் என்பதை சிதம்பரம் நடராசர் கோயிலும், சிதம்பரத்தைச் சுற்றியுள்ள இடங்களிலும் காணப்படுகின்ற 20க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

அரசூருடையாள் செங்கவிராயன் சோழக் கோனார் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி.பி.1178-1218) மூன்றாம் இராசராசசோழன் (கி.பி.1216-1256) காடவமன்னர்கள் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் (கி.பி.1231-1243) இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் (கி.பி. 1243-1279) ஆகியோரிடத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார். பெருமாள்[1] என்ற இயற் பெயர் பெற்ற இவர் கோன்[2] கோனார்[3] என்ற சமுதாயச் சிறப்புப் பெயர்களையும் (Titles) சோழ[4] முதலி[5] பிள்ளை[6] போன்ற அரசுப் பணி சம்பந்தமுடைய சிறப்புப் பெயர்களையும் செங்கவிராயன்[7] என்ற சிறப்புப் பெயரையும் பெற்றிருந்தார். 'கோன்', 'கோனார்' என்ற சிறப்புப் பெயர்களால் இவர் ஆயர் அல்லது மன்றாடி அல்லது கோபாலர் சமுதாயத்தை சேர்ந்தவராக இருக்கலாம் எனத் தெரிகிறது. மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் கீழ் அரசு அதிகாரியாகப் பணிபுரிந்தமையால் 'சோழ' என்ற சிறப்புப் பெயரையும் தன் சமுதாயப் பெயரோடு சேர்த்து அழைக்கப்பட்டார் எனத் தெரிகிறது. அரசூருடையாள் என்ற சிறப்புப் பெயரால் அரசூர்[8] என்ற பகுதியை ஆண்டு வந்த சிற்றரசர் என்பதையும் அறிய முடிகிறது.

மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பின் சோழப் பேரரசு வீழ்ச்சியுற ஆரம்பித்தது. சேந்தமங்கலத்தை ஆண்ட காடவமன்னன் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் சோழநாட்டைத் தாக்கி சோழ நாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்றியதோடு மூன்றாம் இராசராசனையும் சிறைப்படுத்தினான். போசலர்களின் தலையீட்டால் இராசராசன் விடுவிக்கப்பட்டான். இந்நிகழ்ச்சிக்குப்பின் சோழக் கோனார். ஆட்சியுரிமை அரசூர் கோப்பெருஞ்சிங்கனின் ஆட்சியின் கீழ் வந்ததாகச் செப்புக்கொள் தன் பற்றுறுதியை (Loyalty) காடவ மன்னனிடம் காட்டத் தொடங்கினார். முதலாம் கோப்பெருஞ்சிங்கனிடத்திலும் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனிடத்திலும் அகம்படிக்கண முதலிகளில் தலைமை முதலியாகப் பணியாற்றினார் எனத் தெரிகிறது. (SII.XII.118)

காடவ மன்னர்களிடம் பிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த இவர் சிதம்பரம் நடராசர் கோயில் முழு நிர்வாகத்தையும் கவனித்து வந்தார்.[9] கோயில் நிர்வாக சம்பந்தப்பட்ட பல ஆவணங்கள் (சோழர்கோன் ஓலை) அரசர் சார்பில் இவர் விடுத்தனர் என்பதற்கு இக்கோயிற் சுவர்களில் காணப்படுகின்ற பல

..2

Koviloor Digital Library

கல்வெட்டுகள் சான்றாக உள்ளன. சிற்றிட அரிவை என்ற தேவரடியார் ஒருவர் நடராசர் கோயிலுக்கு திருநந்தவனம் அமைத்துக் கொடுத்ததைக் கல்வெட்டில் பொறிக்கும்படி சோழக்கோனார் ஆணையிட்டதாக கி.பி.1250ம் ஆண்டு கல்வெட்டு கூறுகிறது. கோப்பெருஞ்சிங்கனின் உடல்நலத்திற்காக 27 ½மா நிலம் தானமாக வழங்கப்பட்டதை கல்வெட்டில் குறித்த பொறிக்கும்படி சோழக் கோன் ஆணையிட்டதாக கி.பி.1252ம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று கூறுகின்றது.

அரசூருடையான் சோழக் கோனார் வரி வசூலிக்கும் அதிகாரத்தையும் வரிவிலக்கு அளிக்கும் அதிகாரத்தையும் பெற்றிருந்தார் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. கி.பி.1259ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு அமுதன்சாயல் தாமோதரப்பட்டன் என்பவன் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் ஆட்சியின்போதே வரியாக்கி வைத்திருந்தான். அவ்வரியை செலுத்தும்படி சோழக்கோன் ஆணையிட்டதாகவும் அவன் வரியைச் செலுத்தாமலேயே இறந்து விட்டதாகவும், எனவே இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் வரியாக்கி 8000 காசு நிலுவையாக இருந்து எனவும் இவ்வரியைக் கட்ட சோழக்கோன் தாமோதரப்பட்டன் மனைவிக்கும் மகனுக்கும் ஆணையிட்டதாகவும், அவர்கள் தங்கள் இயலாமையைக் கூற, அவர்கள் சம்மதத்துடனும், தாமோதரப்பட்டன் சகோதரன் சடையான்டான் திருவீரட்டானமுடையான்பட்டன் சம்மதத்துடனும் அவர்களுக்குரிய 8½ மா அளவுடைய அருங்காடன் என்ற நிலத்தை வரி பாக்கிக்காக பிள்ளைசோழக்கோனார் ஆணைப்படி எடுக்கப்பட்டு கோயிலுக்கு வழங்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடுகின்றது.[10] இச்செய்தியிலிருந்து சோழக் கோனார் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் பணியாற்றியது மட்டுமின்றி தொடர்ந்து இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்திலும் செல்வாக்குடன் திகழ்ந்தார் எனத் தெரிகிறது. கி.பி.1262ம் ஆண்டு கல்வெட்டு ஒன்று கோயில் நந்தவனத்தைக் கவனிக்கும் நான்கு பணியாளர்களின் பராமரிப்புக்காக வழங்கப்பட்ட நிலத்திற்கு வரிவிலக்கு அளிக்கும்படி சோழக்கோனார் ஆணையிட்டதாகக் கூறுகிறது.[11]

கி.பி.1262ம் ஆண்டிற்கும்பிறகு சோழக்கோனார் பற்றிக் குறிப்புகள் கல்வெட்டுக்களில் காணப்படவில்லை. ஒருவேளை வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றிருக்கலாம் அல்லது இறந்து போயிருக்கலாம். இக்கருத்துக்கு ஆதரவாக கி.பி.1279ம் ஆண்டு கல்வெட்டு சோழக்கோனார் பணிய வேளாடுடையான் என்பவன் பெற்கொண்டதாகவும் அவனுடைய ஆணைகளை சிதம்பர நடராசர் கோயில் அதிகாரிகள் நிறைவேற்றியதாகவும் கூறுகின்றது.[12]

ஏறத்தாழ 50 ஆண்டுகாலம் அரசின் உயர் அதிகாரியாகப் பணியாற்றிய அரசூ அரசூருடையான் செங்கணியான் பெருமாள் பிள்ளை என சோழக்கோனார் ஆயர் சமுதாயத்தில் தோன்றி அரசின் உயர் பதவியான தலைமை முதல் பட்டத்தைப்பெற்று தன் இறுதிக் காலம்வரை செல்வாக்குடன் திகழ்ந்தார் என்பதை அறிய முடிகிறது.

---

1. SII. XII. 167 2. Ibid, 123 3. Opcit 4.Ibid

5. Ibid 6. Ibid 7. SII.XII. 118

8. இவரும் இவ்வூர் அதே பெயருடன் விளங்குகிறது. திருக்கோயிலூர் வட்டம் தெ.ஆ.மாவட்டம். (குடிமக்களிடம் கலந்தாலோசித்தால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

9. நடராசர் கோயில் வரவு செலவு கணக்குகளையும் இவர் நிர்வகித்ததால் இவருக்கு 'பிள்ளை' என்ற சிறப்புப் பெயரும் ஏற்பட்டதாக இருக்கலாம்.

10. SII.XII.193 11. SII.[illegible] XII.216 12. SII.XII.245

Koviloor Digital Library

அல்லூர் கல்வெட்டுகளில் சில அரிய செய்திகள்

மு.ப.கோபாலன்,
உறையூர், திருச்சி-3.

பொன்னி நதியாயும் சோழ வளநாட்டில் விளங்கிய நல்லூர்களில் அல்லூரும் ஒன்றாகும். அல்லூர், திருச்சி-கரூர்ப் பெருவழிப் பாதையில் திருச்சியிலிருந்து ஒன்பது கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள அழகான, அமைதி-யிக்க, பசுமையான கிராமமாகும். காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள இச்சிற்றூரில்தான் இன்று பசுபதி ஈசுவரர்கோயில் என்றும் அன்று நக்கன்கோயில் என்றும் அழைக்கப்பட்ட பழமையான சிவன் கோயில் அமைந்துள்ளது.

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் முதலாம் பராந்தகனின் 17ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டே காலத்தாற் முற்பட்டது என்பதால் இக்கோயில் முதலாம் பராந்தகன் காலத்தில் எடுக்கப்பட்டிருக்கலாம் என்பதை அறிய முடிகிறது. இதனை திரு எஸ்.ஆர்.பாலசுப்ரமணியன்[1] மற்றும் டாக்டர் ஐரா.கலைக்கோவன்[2] ஆகியோர் கற்றுக்கள் உறுதிப்படுத்துகின்றன. இக்கோயில் எடுக்கப்பட்ட காலம் கி.பி. 920ம் ஆண்டாக இருக்கலாம் என்று Douglas Barrett கூறுகிறார்.[3] (முதற்பராந்தகன் காலம் கி.பி.907-955)

இக்கோயிலில் முதலாம் பராந்தகனின் காலத்தைச் சேர்ந்த ஆறு கல்வெட்டுகளும், கண்டராதித்த சோழருடைய காலத்திய 2 கல்வெட்டுகளும் அரிஞ்சய சோழர் காலத்திய 3 கல்வெட்டுகளும், சுந்தரசோழருடைய காலத்தில் வெட்டப்பட்ட 2 கல்வெட்டுகளும் பிற்காலப் பாண்டிய மன்னன் ஒருவரான கோமாறபன்மரான திருபுவனச் சக்கரவர்த்திகள் குலசேகர தேவர் காலத்திய கல்வெட்டு ஒன்றும், இதுவரை மன்னர் பெயரோ ஆட்சியாண்டோ காணப்படாமை-யோடு செய்திகளும் முழுமையாகக் கிடைக்காத கல்வெட்டு ஒன்றும் ஆக மொத்தம் 15 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் காட்டும் சில அரிய செய்திகளை இங்கு காண்போம்.

1. காவிரியின் கரை உடைப்பெடுத்த செய்தி

முதலாம் பராந்தகனின் 37-ம் ஆட்சியாண்டு கல்வெட்டில்[4] "அல்லூர் ஊரின் வடகிழக்கில் நிலம் காவிரி பெருகி முன்ன உடைத்து மணலிட்டு புக்செய்யாக கிடக்க ஆறேழாண்டை கால் பயிர் ஏறுதே பாழ்கிடக்க" என்ற வரிகள் காணப்படுகின்றன. இவ்வரிகள் உணர்த்தும் செய்தி ஒரு வரலாற்றுச் செய்தியாகும். இவ்வரிகளைக் கொண்டு அல்லூரை ஒட்டிய காவிரி நதியின் தென்கரை பெருவெள்ளத்தின் காரணமாக உடைப்பெடுத்து ஊருக்கு வடகிழக்கே அதாவது காவிரியின் தென்கரையை ஒட்டியிருந்த நஞ்சை நிலப்பகுதிகளெல்லாம் மணலடைக்கப்பட்டு, பயிரிட முடியாத புஞ்சை நிலமாக மாறி பயிர் செய்ய இயலாத பாழ் நிலமாக மாறிவிட்ட கொடுமையான செய்தியை அறிந்து கொள்ள முடிகிறது.

இவ்வெள்ளம் எப்போது ஏற்பட்டது என்பதைச் சற்று ஆராய்வோம். மேற்கொள்ள கல்வெட்டில் காணப்பெறும் "ஆறேழாண்டை கால் பயிர் ஏறுதே பாழ் கிடக்க" என்ற வரிகளைக் கொண்டு, கல்வெட்டில் காலமாகிய முதற் பராந்தகனின் ஆட்சியாண்டாகிய 37-ம் (கி.பி.944) ஆண்டுக்கு முன் சுமார் ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இவ்வெள்ளம் ஏற்பட்டது என்று கருதுவது தவறாகும்.

Koviloor Digital Library

எனவே முதல் பராந்தகனின் ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டில்[5] "எந்நாள் விளைந்தறியாப் புக்கைத் திடலை" என்ற வரிப் வரிகளாலும் ஒரே மன்னனின் 17ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில்"[6] "எங்களூர் சிறுக்கனூர்ச்சேரி பற்று விளைந்தறியாத களர் கறையாள் கொள்ளி நிலத்தை" என்ற வரிகளாலும் நீர்நிலங்கள் நீண்ட காலமாக விளைச்சல் இல்லாமல் புன்செய் நிலமாக இருந்தமைக்குக் காரணம் காவிரியின் வெள்ளப் பெருக்கால் இந்நிலங்களெல்லாம் மணல் அடிக்கப்பட்டு மேடிட்டுப் போனமையே என்பது புலனாகும். இந்த நீண்டகால இடைவெளியை வைத்துப் பார்க்கும்போது காவிரியின் தென்கரை, வெள்ளத்தின் காரணமாக உடைப்பெடுத்தது ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்கு முன்பு என்பது இருக்க முடியாது என்பதை நிச்சயமாக உணரலாம். எனவே மேற்படி கல்வெட்டு குறிக்கும் ஆறெழாண்டை என்பது (6 x 7) அதாவது நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு என்பதைக் குறிப்பதாகும், என்றே கொள்ள வேண்டியது முறையாகும். அப்படிப் பார்க்கும்போது இவ்வெள்ளம் கி.பி.90ல் அதாவது ஆதித்த சோழனின் ஆட்சிக் காலத்தின் இறுதிக் காலத்தில் ஏற்பட்டது என்று கொள்வதே சாலப் பொருத்தமாகும். மேலும் இன்று இருக்கும் அல்லூர், காவிரித் தென்கரையை ஒட்டி அமைந்துள்ள திருச்சி-கரூர் பெருவழிப்பாதையை ஒட்டியே அமைந்துள்ளது. ஆனால் காவிரி உடைப்பெடுத்த காலத்தில், அல்லூர் தற்போது அமைந்துள்ள பசுபதீசுவரர்கோயிலைச் சுற்றியே அமைந்திருந்தல் வேண்டுமென்பதும் புலனாகிறது. அதாவது தற்போதுள்ள திருச்சி-கரூர் பெருவழிப்பாதைக்குத் தெற்கிழக்கே சுமார் 2 கிலோமீட்டர் தள்ளி அமைந்திருந்தது எனலாம். இதையே "அல்லூர் வடகிழக்கின் நிலம் காவிரி பெருகி ஓலை உடைத்து மண்விட்டு புன்செய்யாகக் கிடக்க" என்ற கல்வெட்டு வரிகள் உறுதி செய்கின்றன.

2. பிறந்தநாள் விழா வழிபாட்டிற்கு ஏற்பாடு

தலைப்பை ஒட்டிய செய்தி சுந்தர சோழனின் 1.7ம் ஆட்சியாண்டு கல்வெட்டில்[7] காணப்படுகிற ஒரு அரிய செய்தியாகும். அதாவது செங்குன்ட ஊடையான் மகியன் சிறுபிராயன் என்பான் ஒருவன் அல்லூர்க் கோயில் பட்டுடையார்களிடம் 3 பொன்(கழஞ்சு) கொடுத்து அதன்மூலம் வரும் வட்டியாகிய 3 கலம் நெல் கொண்டு தவறு பிறந்த நாளாகிய ஐப்பசித் திங்கள் திருவோண நட்சத்திர நாளன்று ஒவ்வொரு ஆண்டும் அல்லூர் நக்கன் கோயில் பரமேசுவரருக்கு திருஅமுது நெய் அமுது படைக்கச் செய் செய்தியை இக்கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. அவரவர் பிறந்த நாளன்று இறைவனுக்கு சிறப்பு வழிபாடு செய்தல் என்பது இன்று நேற்றைய வழக்கமல்ல. அது ஒரு ஆயிரங்காலத்து மரபு என்பதை இக்கல்வெட்டால் அறிய முடிகிறது.

3. அல்லூர் நக்கன் கோயில் பட்டுடையார்:

அல்லூர் நக்கன் கோயில் கல்வெட்டுகள் சிலவற்றில் அதாவது கண்டராதித்த சோழர், அரிஞ்சய சோழர் மற்றும் சுந்தர சோழர் காலத்துக் கல்வெட்டுகளில் கோயில் பட்டுடையார்கள் என்பவர்கள் குறிக்கப்படுகிறார்கள். திரு தொபெரோ கரசிமா அவர்கள் இவர்களைக் கோயிலில் ஊராதனை செய்பவராகவோ அல்லது ஊழியர்களாகவோ இருக்கலாம் என்று கூறுகிறார்.[8] ஆனால் அப்படிக் கொள்ள வாய்ப்பில்லை. காரணம் அல்லூர் நக்கன் கோயிலில் ஊராதனை செய்வதற்கென்றே ஒரு யோகியார் இருந்தமை தெரிகிறது.[9]

..3

Koviloor Digital Library

அவர்கள் கோயில் ஊழியராகவுப் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் அவர்கள் இந்நாளைய அறங்காவலர் நிலையில் இருந்து செயல்பட்டார்கள் என்று கருத இடமுள்ளது. ஏனெனில் கோயிலுக்கு விடப்பட்ட நிலக் காடைகள் மற்றும் பொன் முதலியவைகள் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டு, கொடைகளை நிறை-வேற்றும் பொறுப்பினை ஒப்படைத்திருக்கிறார்கள். கண்டராதித்தன், அரிஞ்சயன் காலத்துக் கல்வெட்டுகளில் கோயில் பட்டுடையார்களாக கௌசிகன் அரங்கன் ஆனைக் காவன்; அரங்கன் திருபேற்றி; சிவகோசர் ஊரன் அரிஞ்சிங்க; கழுவன் விடயன் கற்கடை என்ற நால்வர் குறிக்கப் பெறுகின்றனர். ஆனால் அடுத்து வந்த சுந்தரசோழன் காலத்துக் கல்வெட்டுகளில் சிவகோசரி ஊரன் அரிஞ்சிகையும், கழுவிகன் விடயன் கற்கடை ஆகிய இருவர் மட்டுமே கோயிற் பட்டுடையார்களாகக் காணப்படுகின்றனர். மற்ற கௌசிகன் அரங்கன் ஆனைக்காவலும், அறங்கன் திருபேற்றியும் காணப்படவில்லை. காரணம் அவர்கள் இருவரும் கோயில் அறங்காவலர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கலாம் அல்லது இறந்து பட்டிருக்கலாம்.

4. கங்கமாதேவியார் தீப்பாய்கின்றார்:

அக்காலத்தே உடன்கட்டை ஏறுதல் நடைமுறையில் இருந்தது என்பதை அவ்வூர் நக்கன்கோயில் கல்வெட்டொன்று நமக்குத் தெரிவிக்கின்றது.[10] பத்தினிப் பெண்ணான கங்கமாதேவியார் தன் உற்ற கணவரான வீரசோழ இளங்கோ வேள் இறந்து பட்டபோது தானும் உடன் தீப்பாய்ந்து உயிர் துறக்கும். நெஞ்சை உருக்கும் சோக வரலாற்றை அக்கல்வெட்டு நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. தன் தலைவன் இறந்த ஆற்றாமையால் தீப்பாய முனைந்த அப்பெருமகள் அதற்குமுன் ஒரு அருஞ்செயலைச் செய்கிறாள். அதாவது தன்னிடமிருந்த பெரும் கழஞ்சு பொன்னை நக்கன் கோயிலுக்கு நன்கொடையாக அக்கோயில் பட்டுடையார்களிடம் கொடுத்து விட்டு உயிர் துறக்கின்றார். அப்பொன்னைக் கொண்டு கோயில் நிலமான சிறுகளத்தேரிப் புஞ்சைத் திடலை சீர்திருத்தம் செய்து நஞ்சையாக்கி அதனி வருமானத்தைக் கொண்டு ஒரு நொந்தா விளக்கெரிக்க ஏற்பாடு செய்தார்கள் என்று கல்வெட்டு மேலும் கூறுகிறது.

5. அவ்வூர் ஒரு பாடல் பெற்ற தலம்:

தலைப்பைக் கண்டும் மலைப்பாய் இருக்கிறதல்லவா. இத்தலத்தைப் பாடிய சமயக் குரவர் யார் என்ற கேள்வி எழுகிறதா? மன்னிக்கவும். அப்படி எந்த சமயக்குரவராலும் இத்தலம் பாடப்படவில்லை. ஆனால் இக்கோயிலில் உள்ள இரண்டு கல்வெட்டுகளில் பாடல் வடிவில் சில அழகான வரிகள் அமைந்துள்ளன.

1. "இவ்வாண்டு பரகேசரிக்குப் பதினேழில்
ஈண்டு புகழ் அவ்வூரார் ஈசனுக்கு
வேண்டிய வாரிநிலமா வயக்கிக் கொள்ளச்
சிறுகளத்தேரி நிலந் செய்தார்
திரவிடு".[11]

2. "பரகேசரிக்குப் பதினெட்டாம் ஆண்டில்
உரைசேர் பெருப்புகழவ்வூரார்
அரைசாரும் அவ்வூராற்கம்பலச் செய்யின் கீழ் வயக்கல்
எல்லாரும் ஈந்தாரிசைந்து"[12]

Koviloor Digital Library

6. திருப்பதிகப் பாட பெண்கள் மூவர்

இராசராசன் காலத்தில்தான் நம்பியாண்டார் நம்பி அவர்கள் தேவாரப் போடு திருமுறைகள் முதல் ஏழும் தொகுக்கப் பெற்ற கோயில்களில் ஓதுவார்களைக் கொண்டு திருமுறைத் திருப்பதிகங்கள் இசைக்கப்பட்டன என்பது ஒரு வரலாறு. ஆனால் அல்லூர் நக்கன் கோயில் காணப்படும் அறிஞ்சயன் காலக் கல்வெட்டு[1] ஒன்றில் மூலம் அறிஞ்சயன் காலத்திலேயே இக்கோயிலில் திருப்பதியம் இசைக்கப்பட்ட வரலாறு புலனாகிறது. மேலும் இத்திருப்பதிகம் பாடியவர் மூவர் என்றும் அம்மூவரும் பெண்களே என்பதறிய வியப்பாக உள்ளது. இப்பதிகம் ஓதும் மூன்று பேர் ஓதுவார்களுக்கும் வீரசோழ இளங்கோ வேளாயின ஒற்றி மகராந்தகன் என்பார் நிலக்கொடை மூலம் நெல் கிடைக்க வழி செய்துள்ளமை அறிய முடிகிறது. பெண்களும் ஆண்களைப் போல் திருப்பதியம் பாடும் ஓதுவார்களாக இருந்தனர் என்பது இக்கல்வெட்டு நமக்கு உணர்த்துகிறது. மேலும் இதற்கு முன்பாகவே முதற் பராந்தகனின் 41-ம் ஆட்சியாண்டு கல்வெட்டு மூலம் திருச்சி மாவட்டம் குமார வயலூர் என்றும் கலத்தில் மூன்று பெண்கள் திருப்பதியம் பாடியமையோடு அவர்களே இறைவனுக்கு நெவி வீசும் பெண்களாக அமர்த்தப்பட்டிருந்தனர் என்ற வரலாறும் காண முடிகிறது. மேலும் இம்மூன்று பெண்களுமே மேற்படி கோயிலுக்கு அடிமைகளாக கொடுக்கப்பட்டனர் என்பதும் தெரிகிறது.

அல்லூர் நக்கன் கோயில் கல்வெட்டுகள் அனைத்தும் ஆவிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பழம் வரலாற்றை தன்னுள்ளே கொண்டிருக்கும் கல்லெழுத்துப் புதையல்களாகும். எல்லா செய்திகளையும் விரிக்கப்புகின் கட்டுரை நீளும் என்கின்ற காரணத்தினால் இத்துடன் இவை நிறைவு செய்கிறேன்

துணை நூல்களும், கல்வெட்டுகளும்:

1. Early Chola Temple-ThiruS.R.Balasubramanian, 1971 Page 14, 222 (AD 907 -985)
2. காட்டுக்கள் ஒரு கலைக்கோயில் - திரு இரா.கலைக்கோவன்-பக்கம்.7
3. Early Chola Architecture & Sculpture, 866-1014 A.D by Douglas Barret Page 73.
4. S.I.I.Vol.VIII INS No.689 ARE 375/1903
5. " " 699
6. " " 695
7. " " 691
8. Noboru Karashima - " Allur & Isanamangalam " page 158
9. S.I.I. Vol.III INS No. 699
10. " " 690 ARE 376/1903
11. " " 695 ARE 381/1903
12. " " 696 ARE 382/1903
13. " " 687 ARE 373 A/1903
14. Inscription No. 149/1936-37 and Early Chola Arts Part I by S.R.Balasubramanian Page 132.

Koviloor Digital Library

கொல்லிமலைச் செப்பேடு

வெ.இரா.நாகசாமி,
தமிழாசிரியர்,
நாமக்கிப்பேட்டை.

சேலம் மாவட்டம் கொல்லிமலை, சித்தூர்நாட்டு முள்ளுர் ஊர்த்தலைவர் வெளிமைய கவுண்டர் மகன் வெங்கடாசலம் என்பவரிடம் இச்செப்பேடு உள்ளது. இவர் தற்போது சேலம் மத்திய தந்தி அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார். தங்கள் குடும்பத்தின் சொத்தாக இதைக் கருதுகிறார். இரண்டு ஏடுகளாக மொத்தம் நான்கு பக்கங்கள் உள்ளன. ஒவ்வொரு ஏட்டின் மேல் இடது முலையில் சிறியதுளை உள்ளது. செப்பேட்டைக் கோர்த்து வைக்க வாகாக இத்துளைகள் உள்ளன. செப்பேட்டுச் செய்திகள் முழுமை பெறவில்லை. அதனால் இவ்விரண்டேடுகளைத் தவிர மீதம் ஒன்றோ இரண்டோ ஏடுகள் இருத்தல் வேண்டும். இச்செப்பேடு கி.பி.11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பொன்மாடத்தாண்ட மணிமுடி மகாராஜர் ஆட்சியின் ஏழாம் ஆண்டில் எழுதப்பட்டது.

செப்பேட்டு வாசகம்

முதல் ஏடு - முதல் பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீ பொன்மாடத்தாண்டமனி முடிமாஉறாராஜர் ஆட்
2. சிக்குச் செல்லா நின்ற யாண்டு ஏழாவது கொல்லிம
3. லைமேல் குச்சக நாட்டுக் கருங்கத்து நகரத்துக்
4. குப் புலவெல்லை தெரிந்த பரிசாவது திருவற
5. ப்பள்ளி தேவர் நிலத்தோடு கருங்கயத்தார் நில
6. த் தொடெல்லையாவது கட்டியந் சாத்தந் ஆறெய்
7. பிடித்துக் குவளைக் கழுந்திக்கேய் வந்து நட்ட
8. புதலெய் புதாலாக மீகரைக் கருங்கயத்து நகரத்தாரதுகு
9. வளை கழுந்திந்தலைக் கழுந்தியூற்றுக்கேய் சென்று

முதல் ஏடு - இரண்டாம் பக்கம்

10. கிழக்கு நோக்கி ஒற்றியொடு கல்லுக்கேய் சென்று கிழ
11. க்கு நோக்கி சென்று திடு திடுக்கை அறைக்கேய் சென்று கிழ(க்)கு
12. நோக்கி சென்று வடவூர் ஏரியேய் சென்று பூதப் பருதையக்
13. கேய் சென்று சேற்றாம்பலொடுடறைக்கேய் சென்று கல்
14. லுரலுக்கேய் சென்று ஆற்றுக் கேய் செந்றற்றது. தேவர் நிலத்தி
15. ன் எல்லை கருங்கயத்து நகரத்துக்கு வலப்பெருகோடு எல்
16. லையாவது வடக்கு நோக்கி செந்று ஆறாறெய் வுற்றது கருங்
17. கயத்து நகரத்தார்க்கும் பெருங்கறைக்குமே யல்லை
18. யாவது வடக்கு நோக்கி ஆறாறெய் செந்றறருவிக்கே அற்ற
19. து பெருங்கறைய் கோட்டை எல்லை கருங்கயத்து

இரண்டாம் ஏடு - முதல் பக்கம்

20. நகரத்தாரொடு அருவியூரொடு மெல்லையாவது அருவி பு
21. னத்துறையிந்நிற்றேறிக் களாரந் பள்ளி குந்று
22. க்கேய் வந்து இந்திரபாடெல்லாம் நகரத்தாரது அந்தி
23. டாடு அருவியூரது கடுகுகால் குந்றுக்கேய் வந்து ஆற்று
24. க்கேய் வந்து ஆற்றி நின்று மயிலாடிப் பருதைக்கேய் வ
25. ந்து கற்கடைக்கேய் வந்து கற்கடை மேலை ஒற்றி
26. கல்லுக்கேய் வந்து ஊமையந் வாரை தலை செட்டுக்

..2

Koviloor Digital Library

27. கேய் வந்ற நுளர்க்கற்றைக் கறாய்க்கேய் வந்ற கட - று
28. கேய் வந்ற வெள்ளைக்கல்லுக்கேய் வந்ற நெட்டறை ஆடி
29. க்கேய் வந்ற விழுத்தியனூற்றுக்கேய் வந்ற பெரிய
30. வரைறக்கேய் வந்ற எருவப்புலலொடறைக்கேய்

ஞரண்டாப் ஏடு - ஞரண்டாப் பக்கப்

31. வந்ற வடக்கு நோக்கி கீழருக் கறைக்கேய் வந்ற ந-
32. ள நலப்பருதைக்கேய் செந்ற தியாவளையார் எல்லை
33. க்கேய் சென்றறற. அருவியூரார் எல்லை கருங்கயத்ற நக
34. ரத்தாரொடு தியாவளையாரொடெல்லையாவற பால்லுள்
35. டந் பருதைக்கேய் செந்ற பூண்டியற கல்லுக்கேய்
36. சென்ற கல்லருட்டி ஆறெசெந்ற பெகறங்ககேய்
37. செந்ற ஆறாறாறெய் செந்ற இழிந்ற்ப் பள்ளத்ற்க்
38. கேய் செந்ற்றற தியாவளையார் கோட்டை எல்லையய்
39. பூண்டியர்கொ-டு கருங்கயத்ற நகரத்தாரொடெல்
40. லையாவற ஆற்ற நிற்றுத் தெற்க்கு நோக்கி

செப்பேட்டில் காணப்படும் இடப்பெயர், ஆட்பெயர்களுக்கு விளக்கச் செய்திகள்

கொல்லிமலை குச்சகநாட்டுக் கருங்கயம் என்ற ஊரின் எல்லையும், திருவறப்பள்ளி தேவர் நிலத்ற எல்லையும் இதில் குறிப்பிடப்பட்டு அறுதிசெய்யப் படுகின்றன. நிலத்தின் எல்லை, அருவி, பாறை, ஆறு, குன்று, ஏரி, கழனி, - பருதை, கிராய் முதலியவற்றைக் கொண்டு விளக்கப்படுகிறற. மலைப்பகுதியில் ஒவ்விடங்களே இருத்தல் முடியும். பருதை, கிராய், என்பன மலைப்பகுதியில் உள்ள சமவெளியையும், பயிர் செய்யப்படும் நிலத்தையும் குறிப்பன. கட்டியன் சாத்தன் என்ற பெயரும் உள்ளற. பெருங்கிராய்க் கோட்டை, தியாவளையார்க் கோட்டை என்ற கோட்டைகளும் இதனில் காணப்படுவற குறிப்பிடத்தக்கற.

கருங்கயம்

கொல்லிமலையில் உள்ள இக்கருங்கயம் குச்சக நாட்டைச் சேர்ந்தற என்பற செப்பேடு தெரிவிக்கும் செய்தி. ஆனால் தற்போற குச்சகநாடு என்ற பிரிவு வழக்கில் இல்லை. கொல்லிமலையில் உள்ள பதினாக்கு நாடுகளில் அரியூர் நாட்டைச் சேர்ந்த பேல் கலிங்கம் என்ற ஊரே இங்குக் குறிப்பிடப்படும் கருங்கயம் ஆகும். கருங்கயம் அறப்பள்ளி ஈஸ்வரர் கோயிலிலிந்று வடமேற்கில் மூன்று கல் தொலைவில் உள்ளற. "பேல் கலிங்கம் கருங்கயத்ற நகரத்ற" என்னும் தொடரால், கருங்கயம் என்ற பழம் பெயர் கொண்ட பேல்கலிங்கம் அக்காலத்தில் வணிகர்களின் இருப்பிடமாக இருந்துள்ளற எனலாம்.

பேலும் "கருங்கயத்ற நகரத்ற்ப் பல குடிகளாய்க் கடவ பொன்" என்றும் அறப்பள்ளி ஈச்வரர் கோயில் கல்வெட்டும் இக்கலிங்கத்தில், வணிகர்களே யன்றிப் பல்வேறு குடிகளும் இருந்துள்ளனர் என்பதைத் தெரிவிக்கின்றற.

'வெருளார் அறப்பள்ளிச் செட்டி' என்றும், 'கொல்லிமலை நாட்டு ஐந்நூற்றுவர் ரக்ஷை' என்றும் அறப்பள்ளி ஈச்வரர் கோயில் கல்வெட்டுகள் குறிப்பிடுவதால், கொல்லிமலையில் வணிகர் குழுக்கள் இருந்தன உறுதி செய்யப் படுகின்றன.

Koviloor Digital Library

பொன்மாடத்தான்ட மனிமுடி மகாராஜர்:

வரலாற்றில் புதியதாக இத்தலைவன் பெயர் காணப்படுகிறது. ஆட்சியாண்டு கொடுத்துச் செப்பேடு வெளியிடும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்றவனாக இருந்-துள்ளான். அறப்பள்ளி ஈச்வரர் கோயில் கல்வெட்டில் 'பொன்னேரி வர்மன்' என்ற பெயர் வருகிறது. அப்பொன்னேரிவர்மனும் இப்பொன்மாடத்தான்ட மனிமுடி மகாராஜரும் ஒருவராக இருத்தல் வேண்டும். மற்றபடி இப்பெயரில் மலையிலும் கீழேயும் தொடர்புடைய செய்திகள் கிடைக்கவில்லை. கொல்லிமலையில் தெற்கில் எருமைப்பட்டியை ஒட்டிப் பொன்னேரி என்ற சிற்றூர் உள்ளது. ஒருவேளை இவ்வூர் இத்தலைவன் பெயரில் ஏற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

சோழமுடையான் கோவில்:

மேல்கலிங்கத்தில் சோழமுடையான் கோவில் என்ற சிவன் கோயில் உள்ளது. இது சேலமுடையான் என்றும் வழங்கப்படுகிறது. பழமையான இக்கோயில் அண்மைக் காலத்திருப்பணியினால் முற்றிலும் மாறுபட்ட, சாதாரணக் கட்டடமாக உள்ளது. இக் கற்களில் சுண்ணாம்புப் பூச்சுக்குள் சில கல்வெட்டுத் தொடர்கள் தொடர்பின்றி உள்ளன. "நாவிப்பதக்கு", "கருங்கயத்து நகரத்து", என்ற தொடர்கள் காணப் படுகின்றன. இவை கி.பி.11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

இக்கோயில் சோழ அரசன் ஒருவனாலோ, அல்லது அவன் பெயரிலோ கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.. அண்மையில் உள்ள அறப்பள்ளி ஈச்வரர் கோயிலில் உத்தமசோழன் தொடங்கிப்பல சோழ அரசர்களின் கல்வெட்டுகள் உள்ளன. செப்பியன் மாதேவியார் நூறு கழஞ்சு பொன்னைக் கொல்லிமலையில் உள்ள பன்னிரண்டு ஊரவரிடம் கொடுத்து, அதன் வட்டியைக் கொண்டு ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நாளன்று வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்ததைப் பற்றி உத்தமசோழன் கல்வெட்டுக் கூறுகிறது. அப்பன்னிரண்டு ஊர்களில் கருங்கயமும் ஒன்று. சோழ-ஜடையான் கோவிலின் அருகில் கல்செக்கு ஒன்றுள்ளது. அதில்,

"ஸ்வஸ்திஸ்ரீ இச்செக்கு உள்ளூர் மகதேவர்க்கு
குடுத்தேந் அறப்பள்ளி சாத்தநாற்"

என்ற கல்வெட்டுள்ளது. அறப்பள்ளி என்ற இறைவன் பெயருடன் தம் குலப் பெயரையும் குறித்துள்ளான். செப்பேட்டிலும் 'கட்டியன் சகாத்தன்' என்ற பெயர் வந்துள்ளது. வாசலூர்ப்பட்டியில் செக்கியில் உள்ள மற்றொரு கல்வெட்டில், "பன்றி சாத்தன்" என்ற பெயர் உள்ளது. இன்றும் மலைவாழ் மக்களிடையே வழங்கும் குலப்பிரிவுகளில் 'சாத்தன்' என்பதும் ஒன்றாகும்.

சமண தீர்த்தங்கரர் மற்றும் கொல்லிப்பாவை

சோழமுடையான் கோவிலின் சற்று மேற்கில் சமண தீர்த்தங்கரர் சிலை உள்ளது. 'சமணாண்டிப்பாட்டன்' என்ற தற்போது மக்கள் வழங்குகின்றனர். கோவில் இருந்து அழிந்த போன சுவடுகள் ஆங்குள்ளன. சமண தீர்த்தங்கரர் சிலையிருந்து சற்று வடக்கே சோலையில் அழகிய நிர்க்கையில் சிலை உள்ளது. ஏறக்குறைய நான்கடி உயரமுள்ள இச்சிலை அழகிய வேலைப்பாடு கொண்டது. இச்சிலையைத் தற்கால மக்கள் கொல்லிப்பாவை என்று கூறுகின்றனர். கொல்லிப் பாவைக்கும் இந்நிர்க்கை சிலைக்கும் தொடர்பில்லை. இந்நிர்க்கை சிலைக்கும் போகும் வழியில் ஐயனாரின் சிற்பம் உள்ளது. இதுவும் புதரடைந்து கிடக்கின்றது.

Koviloor Digital Library

மேற்கண்ட செய்திகளைக் கொண்டு பார்க்குமிடத்துக் கருங்கயம் என்ற ஊர் வணிக இருப்பிடமாகவும், பல்வகைச் சமயங்களின் நிலைக்களனாகவும் சிறப்புப் பெற்றிருந்ததை அறிகின்றோம். இச்செப்பேடு பற்றியும் அதன் தொடர்புடைய ஊர்களைப் பற்றியும் நேரில் கண்டு இங்கு விளக்கப்பட்டுள்ளது. அறிஞருலகம் இம்மலைப்பகுதியைப் பற்றி மேலும் ஆய்வு செய்து புதிய உண்மைகளை வெளிப் படுத்த இச்செப்பேட்டுச் செய்திகள் உதவும் எனலாம்.

....

Koviloor Digital Library

புத்தகளம் செப்பேடு

நாக.கணேசன், எம்.ஏ., பி.எட்.,
காப்பாட்சியர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
இராமநாதபுரம்.

அமைப்பும், செய்தியும்:-

கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டில் இராமநாதபுரம் பகுதியை ஆண்ட சேதுபதி மன்னர்கள் சிவாலயங்களுக்கும், வைணவத் தலங்களுக்கும், இசுலாமிய பள்ளி வாசல்களுக்கும், கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும், சமணப்பள்ளி களுக்கும் வழங்கிய கொடை விவரங்களைச் செப்புப் பட்டயங்களில் வெட்டுவித்து கொடுத்த கொடைகள் நிலைக்கச் செய்தனர். தமிழக மன்னர்களில் அதிக அளவில் செப்பேடுகளை வழங்கிய பெருமை இச்சேதுபதி மன்னர்களையே சாரும். இச்சேதுபதி மன்னர்களின் 107 செப்புப் பட்டயங்கள் பேராசிரியர் திரு.செ.இராசு அவர்களால் தொகுக்கப்பட்டுள்ளன. தற்போது கிடைத்துள்ள புத்தகளம் பற்றிய இச்செப்பேடு அந்த 107 ல் சேராத புதிய செப்பேடாகும்.

இது இராமநாதபுரம் கருப்பையா பிள்ளையிடம் உள்ளது. 19 செ.மீ 13 செ.மீ. அளவுடையது. இச்செப்பேடு 4 செ.மீ. நீளமுள்ள துளையுடன் கூடிய இதழமைப்பைக் கொண்டுள்ளது. 250 கிராம் எடை கொண்ட இச்செப்பேட்டின் முதல் பக்கத்தில் 27 வரிகளும் மறுபக்கத்தில் 28 வரிகளும் கிரந்த எழுத்துக்கள் கலந்த தமிழ் வரிவடிவில் எழுதப்பட்டுள்ளது. முதல் பக்கத்தில் நடுப்பகுதியில் அரசர் பெயர் பெரிதாக தெலுங்கில் எழுதப் பட்டுள்ளது.

கி.பி. 1728 -ல் சேதுநாட்டையாண்ட முத்து விசய ரகுநாத சேதுபதியின் பிரதானி (அமைச்சர்) இராமலிங்கம்பிள்ளை. இவர் திருப்புல்லாணியிலும் குளவயலிலும் ஏற்படுத்திய மடப்புறங்களுக்கு புத்தகளம் என்ற ஊர், முத்து விசய ரகுநாத சேதுபதியின் தம்பி முத்துரகுநாத சேதுபதி யால் கொடையாக வழங்கப்பட்டுள்ளது. தமையன் தரணியான தம்பி தானம் வழங்கியுள்ளதை இச்செப்பேடு காட்டுகிறது. இதனைப்போன்று முத்துவிசய ரகுநாத சேதுபதியினுடைய பட்டக்காணிக்கையாக திருப்புல்லாணி தெய்வச் சிலை பெருமாருக்கு கொத்தங்குடி என்ற ஊரினை இம்முத்துரகுநாத சேதுபதி கொடையாக வழங்கியுள்ளதை செப்பேடுகள் மூலம் அறிய முடிகிறது.

சர்வ மானியமாக வழங்கப்பட்ட புத்தகளத்திற்கு நான்கு எல்லைகள் வரையறுத்துக் கூறும் பொழுது இசுலாமியர், தேவன், வண்ணான், குப்பன் போன்றோரின் நிலங்கள் எல்லைகளாகக் காட்டப் பட்டுள்ளன. இது அன்றைய சமுதாயத்தில் பல இனத்தவரும் நிலவுடைமை-யாளராக வாழ்ந்ததையும் கூடி வாழ்ந்ததையும் காட்டுகிறது. செப்பேட்டில் இறுதியில் தர்மத்தைக் காக்க வலியுறுத்தும் சமஸ்கிருத நீதி சுலோகம் பொறிக்கப் பட்டுள்ளது. இச்செப்பேட்டினை திருப்புல்லாணியிலிருந்த முனைப்பண்டாரம் என்பவர் எழுதியுள்ளார்.

..2.

Koviloor Digital Library

நாக.கணேசன், எம்.ஏ., பி.எட்.,

செப்பேட்டு வாசகம்: முதல்பக்கம்:

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் அரியராயிர தள வி
2. பாடன் பாசைக்குத் தப்புவராயிர கண்டன் கண்டநாடு கொ
3. ண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டி மண்டலத் தாபனாசாரிய
4. ன் சோளமண்டலப் பிரதிஷ்டாபனாசாரியன் தொண்டமண்டல சன்
5. டப் பிறசண்டன் ஈழமுங் கொங்குமியாட் பாண பட்டணமுமளி
6. த்தருக் கெஜவேட்டை கண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுவரன்
7. ராசகுலதிலகன் நட்டாரில் நட்டன் நட்டார் கொட்டமடக்கி வீர வெ
8. ண்பாமாலை இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம் பலைமன்னர் சிங்கம் ஆ
9. ற்றில்ப்பாச்சி கடலில்ப்பாச்சி மதப்புலி தாலிக்குவேலி தொண்டிய
10. ந்தரை காவலன் அரசராவணராமன் அடியார் வேளைக்காரன் பாத
11. ன விபாடன் உரிகொல சுரதானன் அந்தம்பிறகண்டன் சாடிக்காரர்
12. கண்டன் சாமிந்தரோகியள் மிண்டன் பறக்குவார் கண்டன் செ
13. ம்பி வளநாடன் சேமத்தலை விளங்குமிரு தாளிகான் செங்காவி
14. க்குடையான் அறமத்தவசம் கெருடத்தவசம் சிங்கத்தவசம் மீ
15. ன த்தவசமுடையவன் திவதநுதல் மடமாதர் மடவெருதவரு சு
16. முகன் வீரரி (ல்)வீரன் வலியச்சருவி மதுரை மாணங்காத்தான்
17. குடைக்குக்கர்ணன் விலுக்குவிசையன் அறிவுக்கு அகஸ்தி
18. யர் நிதிக்கு குபேரன் சத்யஉறாச்சந்திரன் பரிக்கு நகுலன் பர
19. த நாடகப்பிறவீரன் தேவைநகராதிபன் சேதுமூல ரகூகா
20. ரந்தரன் ராமநாதசுவாமி காரிய ரந்தரன் சிவபூசாரந்தர
21. ன் சொன்னமொளி மாறாத சுமுகன் சங்கீத சாயித்திய விநோ
22. தன் சமரகோலாகலன் அசுபதி கெசபதி நரபதி சேதுபதியாகிய
23. ரகுநாதர்க் கூற்றத்தருக் காத்த ராக குலோத்துங்க சோளநல்லூ
24. ர் கீர்பால் விரையாத கண்டமிலிருக்கும் ராசமாலியராச ஸ்ரீ
25. இரண்ய கெள்பயாசி முத்துரகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்
26. கள் ஸ்வஸ்திஸ்ரீ காலிவாஉறந சஉறாப்தம் 1650 இதன்மே
27. ல்ச் செல்லாநின்ற சவுமிய நாம ஸம்வச்சரத்தில் தெகூஷாயந

..3.

Koviloor Digital Library

நாக.கணேசன், எம்.ஏ., பி.எட்.,

இரண்டாம் பக்கம்:

28. த்தில் பிரட்டாசி மீம் 20 உ சுக்கிலபக்ஷத்தில் ஆதித்ய வாரமும் விஜ
29. ய திசமியும் திருவோண நக்ஷத்திரமும் ப்ரதி நாம யோகமும் க்ர
30. சிவா கரணமும் கூடிந சுபதினத்தில் பிறதாவி ராமலிங்கம் பி
31. ள்ளை திருப்புல்லாணியிலும் குளவயலிலும் உண்டுபண்
32. ணி நடத்தி வருகிற மடப்புறத் தர்மத்துக்கு சலுவமானியமாக நா
33. ம் கட்டளையிட்ட கிறாமம் புத்தகுளம் புத்தகுளத்துக்கு நா
34. க் கெல்கையாவது குறிஞ்சாநோடை வடகரை கடைக்
35. கொம்பு உள்வாய்க்கு மேற்கு ராமவன்னித்தேவர் தன்னு
36. ணி புரவுதற்மச்செய்க்கு கிழக்கு புத்தகுளத்துக் கண்மாய்
37. கரைக்கு தெற்கு புத்தகுளம் கரும்பனா ஓடைக்கு வடக்கு, புஞ்சை
38. வைகை பண்ணைக்காரன் வலங்காமுடி கு (ப்) ப்ள் தோட்டத்துக்கு
39. தெற்கு புஞ்சை பனைங்கால்புரவு தற்மமுக்கந்தர் தோட்டத்துக்கு
40. மேற்கு குறிஞ்சாநோடை வடகடைக் கொம்புக்கு வடக்கு குளவ
41. யல்ப்புரவு வண்ணாஞ்செய்க்குக் கிழக்கு இப்பெருநாக்கெல்
42. கைக்குள்பட்ட புத்தகுளம் தஞ்சை பிஞ்சை மாவடை மாவடை
43. கீள் நோக்கிய கிறு மேல்நோக்கிய மரம் திட்டுத்திடல் நிதி
44. நிகேதப ஜெவதரு பாஉதான ஆகாமிய அஃடபோகமும் சந்திரா
45. தித்தவரை சந்ததிப்பிறவேசம் ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவா
46. ராகவும் இந்த தற்மத்துக்கு வாக்குசுதாயம் பண்ணினபே
47. ர் கோடி சிவலிங்கப் பிறதிஃடையும் பிரஃறம பிரதிஃடையும் பண்ணி
48. ன பலனையடைவராகவும் விகர்தம் நினைத்த பேர் கெங்கைகரையி
49. லும் சேதுக்கரையிலும் பிரஃறமஉறள்ளி ஹிஉறஸ்தி கோஉறஸ்தி பண்
50. ணின பாபத்தை அடைய கடவராகவும் உ // ம்வதத்தாம்பி ஞாம்
51. புண்யம் பரதத்தாது பாலநம் பரதத்தாப உறரரேன ஸ்வதத்தம் நி
52. ஃதவலம் பவேதி // காந பாலன யேர்ஜ்யே நாதாகூக யோது பா
53. லநம் காநா ஸ்வர்கம் வாப்நோதி பாலநாத சாபதம் பதம் // இந்தப்
54. படிக்கு தாம்பிர ஸாதனம் யெருதிகேக் திருப்புல்லாணியூரிலி
55. ருக்கு (ம்) முத்துப்பட்டாரம் உ பளியாக் ஞானை

Koviloor Digital Library

இராமேசுவரம் அறுதி விலைச் சாதனம்

– எஸ்.எம்.கமால்

கடந்த காலக் கண்ணாடியாக அமைந்த பயனாட்டுபவை நமக்குக் கிடைத்துள்ள கல்வெட்டுக்களும் செப்புத் தட்டயங்களுமாகும். காலம் கடந்து நின்று பயன்பட வேண்டுமென்பதற்காகவே அவைகள் "கல்லிலும் செப்பிலும்" வெட்டுவிக்கப்பட்டன. வரலாற்று வடிவங்களான இவைகளின் மூலப்பதிவுகள் முதலில் பனை ஓலைச்சுவடிகளில் எழுத்தாணி கொண்டு வரையப்பெற்றன. சங்க கால இலக்கியங்களில் இருந்து கி.பி.19ஆவது நூற்றாண்டு வரையிலான தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் இந்தப் பனை ஓலைச்சுவடிகளில் தான் எழுதப்பெற்றன, என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் ஆதிக்கம் வலுப்பெற்று, அவர்களது நிர்வாகப் பணிகளுக்கு மேனாட்டுத் தயாரிப்பான காகிதம் பரவலாகப் பயன்படுத்தப்படும் வரை, பனை ஓலை ஏடுகளின் பாவனை பரவியிருந்தது என்று கொள்ளலாம்.

சேது நாட்டைப் பொறுத்தவரையில் (இன்றைய இராமநாதபுரம் மாவட்டப்பகுதி) இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள், கோயில் திருப்பணி, நீர்ப்பாசனப் பணி ஆகியவைகளை கல்வெட்டுக்களிலும், அறக்கொடைகள், நிலத்தங்கள், இசைவுமுறி, பிடிபாடு தீர்ப்புரை ஆகியவைகளை செப்புப் பட்டயங்களிலும் பொறித்துள்ளனர். ஆனால் தொடக்கத்தில் இவைகளுக்கும் பனை ஓலைமுறிகள் பயன்பட்டன என்பதை இராமநாதபுரம் அரண்மனையில் உள்ள சாலிவாகன சகாப்தம் 1248 (கி.பி 1325)–ல் பனை ஓலையிலான தான சாசனப்பட்டயம் ஒன்று தெரிவிக்கின்றது. இந்த ஓலைப்பட்டயம் உத்தரகோசமங்கையைச் சேர்ந்த பெருமாள் குருக்கள் என்பவர் அழகிய விநாயகருக்கு பூசனைகள் செய்து வருவதற்காக மருதங்குளம் என்ற கிராமத்தை இராமநாதபுரம் அதிபதி விஜயரகுநாத சேதுபதி வழங்கிய தானத்தைக் குறிப்பதாகும்.[1]

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியகுடி அலுவலகப் பதிவேடுகள், இராமநாதபுரம் சமஸ்தான சர்வமான்யப் பதிவேடு ஆகியவைகளைப் பரிசீலித்ததில் கி.பி. 1669–க்கும் கி.பி 1792–க்கும் இடைப்பட்ட காலத்தில் பலவிதக் கொடைகளை சேதுபதி மன்னர்கள் பனை ஓலை சாசனங்களாக வெளியிட்டு இருப்பதைக் காண முடிகிறது.[2] இத்தகைய சேதுநாட்டு பனை ஓலை ஆவணங்களில் இரண்டு "மறவர் சீமை இரு ஓலைச்சாசனங்கள்" என்ற தலைப்பில் கல்வெட்டு இதழில் வெளியிடப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.[3] மரபு வழியிலான இந்த சேதுபதி மன்னர்களது ஆட்சியை ஆர்ச்சியில் அகற்றி விட்டு சேதுநாட்டில் தங்களின் நிர்வாகத்தை மேற்கொண்ட பிறகும் கிரையம், ஒத்தி, அடமானம், விடுதலை போன்ற மக்களது பரிவர்த்தனை ஆவணங்களுக்கு ஓலைகள் தொடர்ச்சி பயன்பட்டு வந்துள்ளன. அண்மையில் மேற்கொண்ட என் ஆய்வில் பொழுது கிடைத்த பனை ஓலை ஆவணங்களில் ஒன்றினைப் பற்றிய செய்திகளை இங்கு தொகுத்துக் கூற முற்பட்டுள்ளேன்.

கி.பி.1818 செப்டம்பர் மாதம் 8ந்தேதி இராமேசுவரம் லெவ்வை மரைக்காயரும் பாப்பர் முத்துச்சாமியாபிள்ளையும் அறுதி விலைச்சாதனம் ஒன்றை எழுதிக் கொண்டனர். இதன் படி முத்துச் சாமியா பிள்ளைக்குச் சொந்தமான இராமேசுவரம் பண்டகசாலையை லெவ்வை மரைக்காயருக்கு நூறு பூவிராகனுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விற்பனைக்கு சாட்சிகளாக ஓலையை எழுதியவரும் இன்னும் எட்டுப் பேர்களும் அதில் சாட்சிக் கையெழுத்து இட்டு இருக்கின்றனர். கிரையம் முற்றும் பெறுகிறது.

..2

Koviloor Digital Library

இந்தப் பரிவர்த்தனை தமிழகத்தில் நடக்கின்ற இயல்பான நிகழ்ச்சி தான். ஆனால் இந்தப் பரிவர்த்தனை ஆவணம் வரையப் பெற்றுள்ள பாங்கு அதில் பயன் படுத்தப்பட்டுள்ள சொற்கள் சொற்றொடர்கள் ஆகியவை பழந்தமிழகத்தில் பேற் கொள்ளப்பட்ட பதிவுகளை நினைவூட்டுவதாக உள்ளது.

இப்பொழுது இந்த அறுதி விலைச் சாசனத்தின் வாசகத்தைப் பார்ப்போம். இந்தச் சாசனத்தைப் பெற்ற லெவ்வை மரக்காயரது இருப்பிடமான கீழக்கரை நகரைக் குறிப்பிடும் பொழுது அந்த நகரின் தொன்மையையும் இணைத்துச் சொல்லப் பட்டுள்ளது, கி.பி.12ஆம் நூற்றாண்டு முடிய சோழ பாண்டிய மண்டலமாக சேர நாடு உள்ளிட்ட பாண்டிய நாடு சோழர்களது ஆட்சியில் அமைவது இருந்த பொழுது சேர நாட்டின் கிழக்குப் பகுதி (இன்றைய இராமநாதபுரம் மாவட்டம்) செம்பி நாடு என வழங்கப்பட்டது. சேர மன்னர்களது செப்பேடுகளில் இந்தப் பகுதி கீழ் செம்பி நாடு எனவும், வட தலைச்செம்பி நாடு என இரு பிரிவுகளாக வழங்கப்பட்டு வந்துள்ளன. ஆதலால் "செம்பி நாட்டு அளந்தொகை மங்கலம், நினைத்தது முடித்தான் பட்டினமாகிய கீழக்கரையில் இருக்கும்....." என்று இந்த சாசனம் தொடங்குகிறது. கீழக்கரைக்கு அளந்தொகை மங்கலம், நினைத்தது முடித்தான்பட்டினம் என்ற பெயராக இருந்ததை அவ்வூரில் உள்ள சொக்கநாதர் கோவில் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.[4]

மேலும், இந்த ஓலைச் சாசனத்தின் நான்காவது ஐந்தாவது வரிகளில், இந்த கிரயம் எப்படி நிகழ்ந்தது என்பதை அழகுபட விவரிக்கப்பட்டுள்ளது.

".....ராபீசுரம் கலப்பட்ட சாலையைக் கொள்வருளதோ, கொள்வாருளரோ என நான்முற்கூறு, நாங்கள் பிற்கூறி கொள்வோம் என்று எப்பில் இசைந்து, நப்பில் பொருந்தி, நான்வர் கூடி, மூவர் உசாவி, இருவர் கொய்துபிடித்து ஒருவர் விலை நீச் செயிந்து....." என்ற வாசகம், பன்னிரண்டு. பதின்மூன்றாம் நூற்றாண்டில் திருக்கோயில்களில் நாவந்தார், சபையார் முன்னர் நடைபெற்ற சுண்டேசுவரர் விலைப்பிரமாணமாக தீர்ந்த 'ஏல நடவடிக்கைகளை நினைவுபடுத்துவதாக உள்ளது. மற்றும்,

....." இறைவன்னாது வேறு விலைமாசி, அல்லது பொருள் மாசி அல்லது பொருள் சிவனாவது யிதன்றி, ஒருக்கால் இருக்காயாவது, ஓலைக்குத்தம், எழுத்துக்குத்தம், சொல்குத்தம், பொருள் குத்தம், வரிப்பிணை, வரிமாறாட்டம், முடைந்தெழுதல், நெரிதல், குளிதல், வெட்டுச் செருக்கு பற்று மேல் குத்தமும், குத்தமின்றி யொற்றி, சந்திராதித்த சந்தனில் பிரவேசமாக..." என்று ஆறு, ஏழாவது வரிகள் தொடர்ந்துள்ளன.

இங்கனம் அழகு தமிழில் அருமையாக வரையப் பெற்றுள்ள இந்த அறுதி விலைச் சாசனம் சேர நாட்டில் ஆங்கில ஆட்சி நிலைத்த பிறகும், குடிமக்களது வழக்கில் கோலோச்சிய தமிழ் வழக்கு, தொடர்ந்தமை நமக்குக் கிடைத்துள்ள பல சுவடிகளில் இருந்து அறிய முடிகிறது. கி.பி.19-வது நூற்றாண்டின் முற்பகுதியில் சேதுபதி சீமையில் இந்தமாதிரி பல ஓலை நறுக்குகள் பொதுமக்களுக்கு கிடைப் பதற்கும் ஆங்கிலக் கிழக்கு இந்திய கம்பெனியார் ஏற்பாடு செய்து இருந்தனர் என்பதை இந்த அறுதி விலை சாசனத்தின் பின்புறத்தில் "இந்த ஓலையை விந்தேன் இராமநாதபுரம் பிர்க்காவா முத்திரைக் காகிதம் விற்பனை உறட் தாசில்தார்" என்று 17.12.1818ல் வழங்கி, கையெழுத்து இட்டிருப்பதில் இருந்து தெரிகிறது. பத்திரப்பதிவு அலுவலகங்களும் அரசினரின் முத்திரைக் காகிதங்களும் நடைமுறையில்

Koviloor Digital Library

ரூல்லாத நிலையில் ஒரு ரூபாய் பெற்றுக் கொண்டு இந்த ஓலையை வழங்குவதன் மூலம் இந்த அறுதி விலைச்சாதனம் உரிய ஆவணமாக அரசினரால் அப்பொழுது கொள்ளப்பட்டது என்பதும் புலனாகிறது.

51½ செ.மீ. நீ 4 செ.மீ. அகல அளவிலான இந்த ஓலையில் முன்புறம் 14 வரிகளும் பின்புறம் இரண்டு வரிகளும் உள்ளன. இந்த ஓலையின் முன்புறம் இடது ஓரத்திலும் பின்புறம் வலது புறத்திலும் நான்கு செ.மீ.விட்ட வட்ட அழுத்த முத்திரைகள் உள்ளன. முன்புற முத்திரையில் உள்புறம் "ஒரு ரூபாய் எனத் தமிழிலும், அடுத்த ஆங்கிலத்தில்" ONE RUPEE" என்றும் உள்வட்டத்தில் "ஏக் ரூப்பி" என உருது மொழியிலும் கீழ்ப்பகுதியில் தெலுங்கு மொழியிலும் பொறிக்கப்பட்டுள்ளன. பின்புற இடதுபுற முத்திரையில் உள்வட்டமாக" "பொக்கூஷ்" என்று தமிழிலும் கீழே தெலுங்கிலும் உள்வட்டத்தில்" TREASURY என்ற ஆங்கிலச் சொல்லும்" "உருதுச் சொல்லும் பொறிக்கப்பட்டுள்ளன. மற்றொரு செய்தியையும் இந்த ஆவணம் வழங்குகிறது. இன்றைய மாவட்ட(ஜில்லா) அமைப்பில் தாலுகா(வட்ட உட்பகுதி பிர்க்கா என வழங்கப்படுவது போல இராமநாதபுரம் ஜில்லாவில் பிர்க்காவா என்ற உட்பகுதி இருந்தது தெரிய வருகிறது. பிர்க்காவா என்ற சொல் பாரசீக மொழி வழக்கு வங்க நாட்டில் உஷர்உஷா ஆட்சியில் நிர்வாகப் பிரிவில் பிர்க்காவா" பிரிவு இருந்தது.[5] முகலாயர் ஆட்சியிலும் இந்த முறை தொடர்ந்தது. இன்றும் மேற்கு வங்கத்தில் "24 பர்கா-னக்கள்" என்ற பகுதி இருந்து வருகிறது. இந்த முறையை இங்கும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியார் பின்பற்றி வந்துள்ளனர்: மற்றும் அறுதிவிலை, தடையிடை, சொத்துக்களைக், அப்பலம், குத்தகை, பூவிராகன் என்பன இந்த வட்டாரச் சொற்கள்.

சேதுபதி சீமையில் ஆட்சி மொழியாகத் தமிழ் மொழி அமைந்து, மக்களது பயன்பாட்டில் இருந்து வந்ததைக் குறிக்கும், சிறப்பான ஆவணமாக விளங்கும் இந்த ஓலைச்சாதனம் இராமேசுவரம், முத்துச்சாவடி தெரு, டி.எஸ்.எம்.ஹம்பி மரைக்காயரது கைவசம் உள்ளது. அதில் உள்ள நகல் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. Rajaram Rao-Manual of Ramanad Samasthanam(1891)Page 202
2. Inam Fair Registers-Ramanathapuram Collectors office இராமநாதபுரம் சமஸ்தானம் நிலமானியஓலைக்களஞ்சியம்
3. கல்வெட்டு இதழ் எண். 18 பக்கங்கள் 1 முதல் 9 வரை கட்டுரையாளர் திரு வெ.வேதாசலம்
4. இராமநாதபுரம் மாவட்டம்-மீட்புக்கரை ஏ.ஆர்.எண்கள் 306,307/1907
5. Eswari Prashah-A short history of Muslim Rule in India (1939) page 242

Koviloor Digital Library

பேரூர் அரிய தமிழ்ச்சுவடிகள்

– டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

பல்லாண்டுகளாகத் தமிழுக்கும் சமயத்திற்கும் அருந் தொண்டாற்றி வரும் திருப்பேரூர் சாந்தலிங்கர் திருமடத்தில் தமிழ்க் கல்லூரியில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் அரிய முயற்சியாலும் பிற அறிஞர்களின் ஒத்துழைப்பாலும் ஏறத்தாழ 350–க்கும் மேற்பட்ட தமிழ்ச் சுவடிகளைத் தொகுத்து வைத்துள்ளனர். இச்சுவடிகள் அனைத்தும் எழுமாத்தூர் வேலம்–பாளையம் புலவர் இரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்கள் தொகுத்து வைத்தவையாகும். அவர்கள் தொகுத்துவைத்த இச்சுவடித் தொகுப்பிலிருந்தான் 'பஞ்சமரபு' என்னும் நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளமையும் நினைவு கூறத்தக்கது.

இலக்கணம், இலக்கியம், சோதிடம், மருத்துவம் முதலான பல்வேறு சுவடிகளும் இத்தொகுப்பில் உள்ளன. மகாபாரதம் கண்டச் சுவடியும், பெயர் தெரியாத வேறொரு கண்டச் சுவடியும் (170, 171) இத்தொகுப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. சாலங்கராம பாஷ்கரந்தமு சாலிங்கிராமப் பாஷை நூல் (169) என்று எழுதப்பெற்ற தெலுங்குச் சுவடியும் இத்தொகுப்பில் உள்ளது. தக்காரைக்கொண்டு இச்சுவடிகளை ஆராய்ந்தால் பல புதிய உண்மைகள் தெரியலாம். விவாக காண்டம் எனும் (195) சுவடியையும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இது இஸ்லாமியச் சட்ட நூலா? எனக் குறிப்புரை எழுதி வைத்துள்ளனர். எனவே மேலும் ஆராயத்தக்கதாம். தொண்டை நாட்டுச் செய்திகள் (237) எனும் பெயர்க் குறிப்புக் கொண்ட சுவடி தொண்டைநாடு பற்றிய பல்வேறு செய்திகளைக் கொண்டதாக இருக்கலாம். வரலாற்றுக் குறிப்புகளும் இச்சுவடி வழி அறிய வாய்ப்புண்டு.

புராணங்கள்:

இலிங்கபுராணம் (2) கூர்மபுராணம் (2) கந்த புராணம் (3) திருவிளையாடற் புராணம் (5) முதலாய புராண இலக்கியங்களும் இத்தொகுப்பினுள் உண்டு. செண்பகத் தலபுராணம் (18) எனும் சுவடியும் உண்டு. இந்நூல் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது. நந்திவனப்புராணம், அருணாசலப் புராணம் (21) என்னும் இரண்டும் ஒரே சுவடியில் உள்ளன. திருப்பரங்கிரிப்புராணம் (31) திருவாப்புடையார் புராணம் (75) வள்ளியம்பள்புராணம் (78) சிவமகாபுராணம் (98) பதிவனப்புராணம் (பவானி 121) முதலாய சுவடிகளும் ஆராயத்தக்கன. இவற்றுள் சில அச்சாகியிருக்கக் கூடும். மதுரைத் தலபுராண வசனம் என்னும் சுவடி நூலும் இத்தொகுப்பினுள் அடங்கும். திருவிளையாடல் நாட்டுப் பாடல், திருவிளையாடல் பயகரமாலை, திருவிளையாடற்புராண வெண்பா (உரையுடன்) முதலாய சுவடிகள் இன்னும் ஆராயத்தக்கன. இத்தொகுப்பினுள் கொங்கு நாட்டைச் சார்ந்த தலபுராணச் சுவடிகள் பிரதியாக உள. திருச்செங்கோட்டுப் புராணம், திருச்செங்கோட்டுக் கோவை, திருச்செங்கோட்டுத் திருப்பள்ளியெழுச்சி, திருச்செங்கோட்டுப் பிள்ளைத்தமிழ், திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் தண்டாயுதம் எனத் திருச்செங்கோட்டுத் தலத்தையொட்டி பல்வகையான சுவடிகள் இருப்பது குறிக்கத்தருந்தது. அவ்வாறே பழனிக்காதல், பழனிக்காவடி, பழனிச் சந்தப்புகழ் வண்ணம், பழனித்தல புராண உரை, பழனிப்பிள்ளைத்தமிழ் முதலாய சுவடிகள் புகழ் பெற்ற பழனித்தலத்தைப் பற்றிய சுவடிகளாகும். சிற்றிலக்கிய வகைகளில் பல்வேறு வடிவங்களும் இச்சுவடி இலக்கியங்களாகக் காணக் கிடக்கின்றன. இவ்வகையில் பேரூர் பச்சைநாயகி சதகம், பேரூர் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ், பேரூர் சிவகாமியம்மை அகவல் முதலாயன குறிப்பிடத்தக்கன.

Koviloor Digital Library

கொங்கு நாட்டு இலக்கியங்கள்:

இத்தொகுப்பிலுள் அக்காலத்தே கொங்கு நாட்டுப் பெருப்புகழ் பெற்ற விளங்கிய பல்வேறு நிலக்கிழார்கள், ஜமீன்தார்கள், ஊர்த்தலைவர்கள் ஆகியோரைப் பற்றிய புகழ் பாடும் பல சுவடிகள் உள. கொங்கு நாட்டு வரலாற்றைக் கணிப்பதற்கு இத்தகைய சுவடிகள் பெருந்துணை செய்யும். சுவடி எண் 30 கொண்ட ஒரு சுவடியில் ஈத்து ஏட்டில் 'தன்னீர்ப்பந்தல் பாளையம் உருமாண்டக் கவுண்டர் சரிதம்' என்னும் குறிப்புக் காணப் பெறுகின்றது. வேளாளப் பட்டயம் செப்பேடு (76), அப்பிச்சியார் காவியம் எனும் ஒரு காவியம் (118), வேலுக்குறிச்சிக் கவுண்டர் சதகம் (128) பூந்துறை, ராமன் கவுண்டர் தாய் மகள் ஏசல் (133) வேளாளர் கீர்த்தி 96 குலத்துப் பாடல் (163) பெருந்துறை பிர்க்கா நத்தப்பாளையம் மருக்குளத்துப்பாளையம் மணியும் குமாரசாமி கவுண்டர் மகள் சங்கரப்பன் எழுதிய மகாலி (ஈ) நம் நாடகம் (187) முதலிக்காபிண்டன் பள்ளு (191) வேளாளர் வரலாறு (208), மணியனூர் ராசாக்கவுண்டர் மோகனக் குறவஞ்சி (214) சீரங்கராயன்பள்ளு (267) முதலாய சுவடிகள் கொங்குநாட்டுச் சமூகப் பின்னணி வரலாற்றைக் காட்டும் வகையில் அமைந்திருக்கலாம்.

முதலிக்காபிண்டன் என்பவன் கொங்குப் படையைச் சேர்ந்தவன்; கோவைத்தலைவன். பருத்திப்பள்ளியைச் சார்ந்தவன். இந்த ஊரைச் சித்திர மேழி விளைகரம் என்பர். இவன் தாராபுரத்தில் பகைவர்களை விரட்டியடித்து வெற்றி பெற்றான். அப்போரில் இவன் வலிமையைப் பாராட்டி 'முதலிக் காபிண்டன்' என்னும் பட்டம் விஜயநகரம் கிருஷ்ணராயரர்களால் கொடுக்கப் பட்டதும் என்பர். இதனைக் கொங்கு மண்ட சதகம்

புறமைப் படைவேட் டுவர் குழுத் தாரா புரத்டனே
சதுர பிருபடை யாற்சம்பராற்றிச் சுபப்பெறவே
முதலிக்கா பிண்ட னெனக்கிருஷ்ண ராயர் மொழிருதை
மதிகொள் பருத்திப் பளிச்செல்ல ஓங்கொங்கு மண்டலமே

என்று கொங்கு மண்டலச் சதக பாடலால் விளக்கும். இதனை இருப்புலிப்பள்ளு என்னும் நூலும் பின்வருமாறு காட்டும்.

வெற்றியுடனே கிருஷ்ணராயரிடத்தில் வர
மேன்மைப் பட்டாபிஷேக முடிசூட்டி
முத்தின் சிவிகையில் வைத்து வலஞ்செய்துதான்
முதலிக்காபிண்ட னென்றும் விருதுங்கொடுத்து
நத்தார் பருத்திப்பள்ளி நாடும் பூந்துறைநாடு
நாலாறு நாடுதாரு மேலுமையாப் பெற்றோன்
(இருப்புலிப்பள்ளு)

'இருப்புலிப்பள்ளு' என்னும் நூலும் 'இத்தொகுப்பில் காணும் 'முதலிகாபிண்டன் பள்ளு' என்னும் நூலும் ஒன்றா என்பது ஆராயத்தக்கது.

இலக்கண நூல்கள், நிகண்டுகள்:

யாப்பருங்கலக்காரிகை (10) மட்டும் இத்தொகுப்பில் எட்டுச் சுவடிகளில் உள. சில மூலம் மட்டும் பெற்றுள்ளன. சில சுவடிகளில் சிற்றுரை, பேருரை என ஒரு பிரிவுகள் காணப்படுகின்றன. ஆராய்ச்சிக்குத் துணைபுரியும்

Koviloor Digital Library

டாக்டர் இ. சந்திரமூர்த்தி

சுவடியாகும். அகத்திய சூத்திரம் (16) என்னும் சுவடியில் எழுத்திலக்கணச் சூத்திரமும், நிகண்டு நூற்பாக்களும் காணப்படுகின்றன. நன்னூல் விருத்தியுரையும் இத்தொகுப்பில் உண்டு (25) நேமிநாதம் மூலம், நன்னூல் மூலம், காரிகை உரை, நம்பியகப்பொருள் மூலம் ஆகியன ஒரே சுவடியில் எழுதித் தொகுத்து வைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலக்கண விளக்கம் (46) சிவப்பிரகாசப்பாட்டியல் (47) நீதிபாட்டியல் உரை (48) வெண்பாட்டியல் (59) குவலாயனந்தம் (60) இலக்கணக்கொத்து (146) முதலாய பல்வகை இலக்கண நூல்களும் இத்தொகுப்பினுள் காணப்பெறுகின்றன. சேந்தன் திவாகரத்தில் (79, 140, 226) மூன்று சுவடிகளும் ஆசிரிய நிகண்டு (79) உரிச்சொல் நிகண்டு (210) அகராதிநிகண்டு (221) முதலாய சுவடிகளும் இத்தொகுப்பில் உள. இவையன்றி, பெயர் தெரியாத நிகண்டுகள் (174) என்னும் குறிப்பின்கீழ் இரு சுவடிகளும் உள. பேரகராதி (209) என்னும் சுவடியும், பழமொழி மாலை (126) என்னும் சுவடியும் இதுவரைக்கும் அச்சாகியுள்ளதா என்பது தெரியவில்லை. பழமொழிமாலை என்பது பழமொழித் தொகுப்புகளாக இருக்கலாம்.

கீதை மொழியாக்கம், இராமாயணம்

பகவத் கீதை, உத்திர கீதை, பிரமகீதை, சிவகீதை, சதானந்த கீதை, அவதூத கீதை என்னும் குறிப்பமைந்த (48) சுவடியில் அனைத்தும் தமிழ்க் கவிகளாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சுவடி குறித்து மேலும் ஆய்தல் வேண்டும். தமிழ் பகவத் கீதை உரையுடன் (35) வேறொரு சுவடியும் உள்ளது. இத்தொகுப்பினுள் குறிப்பிடத்தகுந்த கம்ப இராமாயணம் எனும் சுவடியைத் தமிழறிஞர் திரு கு. அருணாசலக்கவுண்டர் அவர்கள் பதிப்பித்துள்ளார்கள். வேறு எங்கும் இச்சுவடி கிடைத்ததாகத் தெரியவில்லை.

நாட்டுப் பாடல்கள்:

இத்தொகுப்பில் வட்டார இலக்கியங்களான நாட்டுப்புறக் கதைகளும் பாடல்களும் உள்ளன. அல்லி அரசாணி மாலை போன்ற நாட்டுப்புறப் பாடல்கள் (145) ஒரு சுவடிகளில் அமைந்துள்ளன. ஐமைந்தரைப் பாடல் (135) என்னும் சுவடியும் இன்று வெளிவந்துள்ள அச்சான நூல்களோடு ஒப்பு நோக்கத்தக்கதாகும். திருவிளையாடல் நாட்டுப்பாடல் (166) என்னும் ஒரு சுவடியும் ஆராயத்தக்கது. இராமாயண ஓடம் (215), திங்களூர் நொண்டி நாடகம் (217) ஆகியன இத்தொகுப்பினுள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. எண் 253 கொண்ட சுவடியில் 'ஏதேதோ கதைகள்-வசனம்' என்னும் குறிப்புக் காணப்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. எண்.259 ஆம் சுவடி 'ஒரு பாடல்-நாட்டுப்பாடல் கதை' என்னும் குறிப்புடன் காணப்பெறுகின்றது. இச்சுவடிகளைப் பார்க்கும் வாய்ப்புப் பெற்று ஆராய்ந்தால் இவ்வகை இலக்கியங்கள் இன்னும் பல இத்தொகுப்பினுள் இருப்பதை அறியலாம்.

சோதிட நூல்கள்

சாதகாலங்காரம் (74), சகதேவர் சாத்திரம் ஆருடம் (84) சித்தர் ஆருடம் (89) சோதிடம், மந்திரம் (102) வாய்பக சாத்திரம் (109) சோதிடநூல் (119-ஒரு சுவடி)-சூடாமணி உள்ளுடையான் (137), குமாரசாமியம் (149) முதலாய பல சுவடிகள் சோதிடக் கலையைப் பற்றியதாகும்.

Koviloor Digital Library

மந்திர சாத்திர நூல்கள் (20) 7 சுவடிகளில் உள்ளன. மந்திர சாத்திரம் (86) எனப்பிறிதொரு சுவடியும் காணப்பெறுகின்றது.

வைத்திய நூல்கள்:

வைத்திய நூல்களும் இச்சுவடித் தொகுப்பினுள் உண்டு. அகத்தியர் வைத்தியம் (33), நயனநூல் (37) போகர் எழுநூல் திரட்டு (58) அகத்தியர் செந்தூரம் (61) வைத்திய முறை (82) அகத்திய யோகாசன முலம் உரை (83) மருத்துவ நூல்கள் (114-8 சுவடிகள்), புலிப்பாணிசாலம், புலிப்பாணி வைத்தியம் (244) முதலாய பல சுவடிகள் மருத்துவத்தைப் பற்றியதாகும். ஏனைய மருத்துவச் சுவடிகளோடு இவற்றையும் ஒப்பு நோக்கி ஆராயின் பல புதிய செய்திகள் தெரிய வாய்ப்பு ஏற்படும்.

பெயர் தெரியாத சூத்ர நூல் (117) என ஒரு சுவடி உள்ளது. பஞ்சமகா சாரத லட்சணம் (94) பரத சங்கிரகம் (95) நாளமரவு (103) முதலாய சுவடிகள் ஆய்விற்குரியன. இசைத்தமிழ் இலக்கியங்களாகவும், சூத்த நூல் இலக்கியங்களாகவும் இவை இருக்கக் கூடும்.

முடிவுரை:

நாட்டுப்புற இலக்கியங்கள் தொடங்கி, இலக்கணம், நிகண்டும், பேரக ராதிகள் எனப் பல்வேறு துறைகள் குறித்த அரிய பல சுவடிகளைத் தொகுத்துப் பேரூர் ஆதீனத்திற்கு அளித்த பெருந்தகை புலவர் இரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களுக்குத் தமிழ்கூறு நல்லுலகம் பெரிதும் நன்றிக் கடன் பட்டதாகும்.

(* இச்சுவடிகள் பற்றிய பட்டியலைத் தட்டச்சு செய்து கல்லூரி நூலகத்தார் என்னிடம் வைத்துள்ளனர். அப்பட்டியலின் அடிப்படையில் இச்செய்திகள் தொகுக்கப் பெற்றுள்ளன.)

Koviloor Digital Library

மறைந்த மயிலாபுரிக் கோயில்களும் ஓவைச் சுவடிகளும்

முனைவர் கா. அரங்கசாமி, எம்.ஏ.,
எம்.ஃபில், பி.எச்.டி.,
கோபிசெட்டிபாளையம்

முன்னுரை:

"மாண்படு காடு தேண்படு வரை பீண்படு அளை பொன்படு குட்டம்" என்ற போற்றப்படும் கொங்கில் சங்க காலம் தொடங்கி உழவு-வணிகம்-கால்நடை வளர்ப்பு-முதலியன சிறந்து விளங்கின. அவ்வகையில் காவிரியாற்றின் வடக்கில் வடகரை நாட்டில் வளமாக விளங்கி மறைந்து போன நகரம் மயிலாபுரிப் பட்டணமாகும். கள ஆய்வும், தொல்லியல் ஆய்வும் மேற்கொண்டால் இங்கு மேலும் பல உண்மைகள் காணக் கிடக்கும். அத்தகு சிறப்புமிக்க மயிலாபுரிப் பட்டணத்தில் எச்சங்களாகவுள்ள கோயில்கள், கல்வெட்டுக்கள், நடுகல், ஓவைச்சுவடிப் பாடல்கள் முதலானவற்றின் துணைக்கொண்டு இக்கட்டுரை சுருங்கிய அளவில் சில செய்திகளைக் கூறுகின்றது.

பட்டணம் இருந்த இடமும் சுற்றியுள்ள கோயில்களும்:

"கோட்டைமேடு" என்று மக்களால் குறிக்கப்படும் இடத்தில் சில நூறு ஆண்டுகட்கு முன்னர் மயிலாபுரி சிறந்த நகரமாக இலங்கியது. சுற்றிலும் அமைந்துள்ள கோயில்கள், நிலவுச் சின்னங்கள், ஓவைச்சுவடிகள் இந்நகரின் பழம்புகழைப் பேசும். கோட்டை மேட்டுப் பகுதியில் இன்றும் உழும்போது செங்கற்கள், வண்ண ஓடுகள் கிடைக்கின்றன என்பர். இந்த இடம் பெரியார் மாவட்டம் பவானி வட்டம், பருவாச்சிக்குக் கிழக்கிலும், உலகடத்திற்கு மேற்கிலும், அந்தியூருக்கு வடகிழக்கிலும் அமைந்துள்ளது. இக்கோட்டை மேட்டுக்குத் தென் மேற்கில் கருமலையாண்டவர் கோயில், தெற்கில் பெருமாள் கோயில், கிழக்கில் பிள்ளையார் கோயில், தென்கிழக்கில் உள்ள ஆஞ்சனேயத்தில் பல கோயில்கள், வடக்கில் அம்மன் கோயில் முதலானவை அமைந்துள்ளன. பிள்ளையார் கோயில் எதிரில் வீரன் ஒருவனின் நடுகல்லும் உள்ளது.

கல்வெட்டுக்களும் நடுகல்லும்:

பிள்ளையார் கோயில் ஆதியில் சிவன் கோயிலாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் கருவறை மற்றும் முன்மண்டபத்துடன் கரடுகப்பலும் உள்ளதால் இது பிள்ளையார் கோயிலாக ஆதியில் இருந்திருக்க வாய்ப்பில்லை. இப்பிள்ளையார் கோயிலுக்கு எதிரில் வீரன் ஒருவனது உருவம் பொறிக்கப்பட்ட நடுகல் உள்ளது. எழுத்துக்கள் சிதைவாகியுள்ளன. கருமலையாண்டவர் கோயிலில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன.

1. முன் மண்டப நுழைவு வாயில் பக்கம் உள்ளது. 2. கருட கம்பத்தின் பீடத்தில் உள்ளது முதல் கல்வெட்டு.

"கலி வருடம் (வருடம் தெளிவாக இல்லை) விளம்பி வருடம் ஐப்பசி மாதம் மைலப்பா புறப்பாளையத்தில் கருமலையாண்டவர் கிழமையில் கோயில் பூசாரி கவுண்டய கவுண்டர் மகனார், பூசாரி சின்னப்பக் கவுண்டர், பொர்டி பாளையம் அத்தாக் கவுண்டர் மகனார், கவுண்டக் குறிச்சி முருகேசன் கவுண்டர்....கொரட்டு மண்டபம் (முன் மண்டபம் கருடகம்பம் வசந்தவாசல் எல்லாம் பூசாரி சின்னப்பகவுண்டர் குறிச்சி நத்தசய கவுண்டர் நடத்தி

Koviloor Digital Library

முனைவர் கா.அரங்கசாமி
வைத்தார்கள். கருமலையாண்டவரும், வாடனாவும், சித்தாதிகளும் வட்சிப் பார்னாகவும்" (திருத்தி எழுதப்பட்ட கையெழுத்துப்படி).

இரண்டாம் கல்வெட்டு:

"கலியுகாதி (வருகை) விகாரி வருடம் ஐப்பசி மாதம் கருமலையாண்டவர்க்கு எண்மங்கலம் அளத்தாக்கவுண்டர் செம்ர வைத்த கொட கம்பம் உபயம்" (திருத்தி எழுதப்பட்ட கல்வெட்டு)

கோயில் சிற்பங்கள், எழுத்தமைதி கொண்டு நோக்கின் 300 முதல் 400 ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தில் வெட்டப்பட்டவையாகும் எனக் கருதலாம்.

ஏட்டில் உள்ள பாடல்கள்:

பருவாச்சி அமரர் சண்முகம் அவர்கள் பத்திரத்தும் பெற்பட்ட ஓலைச் சுவடிகட்டு'களை தேடிக் கொண்டு தந்தார்கள். அவை அனைத்துமே கருமலையாண்டவர், பொன்மலையாண்டவர், அழகு நாச்சியம்மன், ஐந்து கை முனி, சித்தர்கள், வாடனா, சந்நியாசிகள் மற்றும் முனிகள் போன்ற தெய்வங்கள் மீது பாடப்பட்ட பாடல்களைக் கொண்டவையாகும். அப்பாடல்களை இன்றும் ஆண்டுதோறும் பக்தியுணர்வுடன் பக்கள் விழாக் காலங்களில் இசையுடன் பாடுகின்றனர். சாமி அழைத்தல், தீர்த்தம் எடுத்தல், காவடியாட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் தக்க சைக்கருவியோடு பாடுவர். சுவடியில், கருமலையாண்டவர் விருத்தம், பொன்மலை யாண்டவர் பாடல், அழகு நாச்சியம்மன் பாடல் என்றும் குறிப்புக்கள் உள்ளன. சாமி அழைக்கும் பாடல் பகுதி சுவைபட அமைந்துள்ளது குறிக்கத்தக்கதாம்.

பாடல்களால் அறியப்படும் செய்திகள்:

விசயநகர அரசின் ஆதிக்கம், முகமதியர் ஆதிக்கம், பட்டாணியர் வருகை ஆரியர் மராட்டியர் தொடர்பு மற்றும் கள்ளியர் பற்றிய செய்திகள் பல இப்பாடல்களால் அறியப்படுகின்றன. கொங்கு நாட்டுக்கே உரிய கிராம தேவதை வழிபாட்டு முறைகள் முதல் குலவழிபாடு, சித்தர் வழிபாடு போன்றவற்றுடன் மெய்யியல் வழிபாட்டு முறைகளும் இப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒருசிலவற்றைக் கீழே காண்போம்.

1. "உசிதலும், பிள்ளையும் சாக்கனனபதி
உதவச்சபூபன் ஓறப்பொழி தவளத்தகவுண்டன்
மதுரையில் உற்ற சாக்கனன் பள்ளன்
உமைகிழ் சேனாபதி" எனவும்

தொடர் அக்கால வரலாற்றில் சில புதிய செய்திகளைக் கூறுகிறது. உசிதலும் (உதியர்லும்) என்றும் லும் சேரர்லும் போல கொங்கில் இருந்திருக்க வேண்டும் என்பதும் இக்லத்தான் பிள்ளுலத்துடன் கொண்ட தொடர்பும், மதுரையில் சேனாபதியாக விளங்கிய சிறப்பும் அறியப்படுகின்றன.

2. "விசய வருடத்தண்டில் உயர் ஆடி மாதம்
மங்கள வாரத்தண்டில் இனிய வடகரை நாட்டில்
பெண்ண பெருமிலை நகரில் பிக்க உச்ச
வளத்தில் மருவும் பொன்மலையாண்டவர் தீபம்
எற்றவும், 18 வாத்தியம் முழங்க, 7 தேசத்தில்
இருந்த வந்த சனங்கள் பட்டி ஒரு கோடி பிடிக்க" -

அக்காட்சி கல்கொள்ளாக் காட்சியாக இருந்தமையும் அறியப்படும் செய்தியாகும்.

Koviloor Digital Library

54

முனைவர் கா.அரங்கசாமி

3. "செம்பருதி அத்தியூர் வளமருவும் பட்டூர்
திவ்வருளும் திருப்பூர் (வெள்ளி திருப்பூர்) செல்வமிடும் பருவாச்சி
உடல் சிறந்த விளங்கிய எண்மங்கலம் அளிபிழி
குறிச்சி மலைப்பாடி அந்தம் பிருந்த சம்பை
அழகிய உடல் (திருக்கூவுகூடல்-ஆப்பக்கூடல்) பவானி
அலங்கிருத வெள்ளபாளையம் அமருமுபந்தியூர்
ஞாய நகரூர் போற்றும் அடியேனை ரட்சிப்பாயே"

என்ற சுற்றுவட்டாரத்தின் ஊர்களைக் குறித்துக் கூறுவதும் உரைத்தக்கது.

4. "உத்தண்ட ராயனும் பொன்மலை ராயனும் கருணை தரும்
கருமலை ராயனும் காளியுடனே வரமருளும் ஈ சுவாமியே
வல்லூரு சந்தியாசியே"

"ஐந்து சடையப்பனும் ஆறுமுகச்சகோதரா ஐங்கரக் கணபதியே"

என்று அருளிதருக என வேண்ட;

5. "பச்சைமலை ஆரிய புரோகிதர், புராணிகர்,
பழனிமலை வேலாயுதர், பரிவுபெறும் அப்பிச்சியார்,
நல்லராக்கண்ணார், தொழவரும் குமாரநார்,
குச்சியர், உத்தண்ட வீரர், பாண்டிய ராசர்,
கூரிய வீரராசர், குருசாமி யாளவர்கள்,
சத்திரிய ராசர்; அச்சபில்லா வேடர்,
பட்டாளி ராவுத்தர், அதிபச்சைமலை யாளர்,
அகோர வீரேசுவரர், உச்சிமதகவுண்டர்,
சிமலைப் பண்டிதர், உசந்த கண்டியராசர்,
உயர் தேவகன்னியர்" அனைவரும் சூழ்ந்து வரும் காட்சியும் காணத் தக்கதாகும்.

6. "சக்கரம், வளைதடி, பொன்னுவேல், வெள்ளிவேல்,
சமுதாயம், ஈட்டி, சுக்குமாந்தடி, பிரம்பு, சூலம்,
கட்டாரி, வீச்சறுவாள், சிங்காடி அம்பு" -

என்று வந்த பக்கங்கள் பகையுணர்ச்சி சுவாமிகள் படையேந்தி வருவதாகப் பாடுவதும் குறித்து உரைத்தக்கதாகும்.

7. பாடலில் பல்வேறு இடங்களில்
"பைந்தமிழ் தழைக்கும் பயிராபுரி யுகந்து" - என்றும்;
"திருமாது மேவிவரும் பயிலை நகர்" என்றும்;

அப்பட்டமாய் பாராட்டப்பட்டுள்ள பாங்கினைக் காணலாம். இவ்வாறு இப்பாடல்கள் யாவும் நாட்டுப்புற நாடகப் பாங்குடன், காவடிச் சிந்து, வாயி அழைக்கும் பாணி, இசையுடன் பாடியாடும் போக்கு, பல்வகைப்பட்ட சிராயிய இனக் கருவிகளுடன் இவைந்து பாடும் திறன் கொண்டவையாக இலங்குகின்றன.

ஊர்ச்சுவடி:

ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் நடுகற் கோயில் காட்சியை நேரில் காட்டும் வண்ணம் இன்றுள்ள கோயில்கள் அமைந்துள்ளன.

..4

Koviloor Digital Library

முனைவர் கா.அரங்கசாமி

நான்கு பக்கம் கற்களை அடுக்கிய சுவர், கிழக்கில் வாயில்: மேற்கூரையாக 100 அடி நீளத்திற்கும் மேற்பட்ட நீண்ட வேங்கை (வேர உறை நில்லை) ஆயிரத்திற்கும் மேற்பட்ட "பத்தி பலகைகளை" என்றும் நடுகற்கள், பல்லிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை காய்க்கும் பழமையான புளியமரத்தின் அடியில் முன்று உருவங்கள்; நடுவில் கரியகாளி, வலப்பக்கம் கரிய பெருமாள், இடப்பக்கம் கருமலையாண்டவர் (முருகன்) உண்மையில் இம்முன்று முகங்களைச் சிறப்புப் பெற்ற நடுகல் வழிபாட்டிற்குரியனவையே.

கிழக்கு, தெற்கு, மேற்குப் பக்கங்களில் பல்வேறு கோயில்கள் நிறைந்துள்ளன. பத்தி பலகைகளில் ,

"ஒருக்கள் ஒருகோடி ஒளிபடை முக்கோடி
பலுக்கள் ஒருகோடி பராட்டியர் முக்கோடி"

மற்றும் அனைத்து இனத்தவர், மொழியினர், சாதியினர் உள்ளதாகப் பாடல் பாடுகிறது.

இதர் கிழக்கில் பருக்காரை பரந்தடியில் அழகிய அழகுநாச்சியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலுக்கு முன்பாக "ஐந்து சடைமுனி" முன்று நாகங்களிப்பு ஆர்ப்பாட்டமாக அமர்ந்துள்ளார். கிழக்கு நோக்கியும் தெற்கு பேருருவில் முனிகள் பல அமர்ந்துள்ளன.

2. கருமலையாண்டவர் திருக்கோயில்:

இன்றும் நச்சுக்கடி, பைத்தியம், மருளிகொண்டவர் இம்மலையில் கிடத்தப் பட்டால் நலம் பெறும் காட்சி காணலாம். இதனாலேயே இக்கோயில் இவ்வட்டாரத்தில் புகழ் மேம்பட்டு வளங்குகின்றது. இக்கோயில் அதிசயமான திருமேனிகளையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டுள்ளது.

கருவறையில் உள்ள மூவர் கருமலையாண்டவர் பச்சை மண்ணில் உருவமைக்கப் பட்ட வள்ளி தெய்வானையுடன் உள்ளார். வேங்கை மரத்தால் உருவாக்கப்பட்ட பொன்மலையாண்டவர் உள்ளார். இவர்கள் இன்றும் நித்திய வழிபாட்டில் உள்ளனர். மரத்தில் இறை உருவம்-கந்தடை நிலையாக அமைப்பது சங்கலால் பழக்கம் என்பதை நாம் இங்கு கருத்தில் கொள்ளலாம். அடுத்து வடக்கு நோக்கிய பேருருவம் கொண்ட பாம்புப் பிடாரர்கள் 16 பேர் உள்ளனர். அனைவரும் மரபுயுத, ஒருவர் விளையுடனும், மற்றொருவர் கஞ்சாவுடனும் உள்ளனர். கிழக்கு நோக்கி உத்தண்டராயர் பிருமேருருவத்தில் மூவர் உள்ள மற்றும் கரியகாளி, வள்ளி தெய்வானை முருகன், யோக சிற்பம் வளையல் போடும் சிற்பம், செண்டுடன் இந்திரன், பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமன், யானை குதிரை மேல் உருக்கள் உள. தெற்கு நோக்கி, புலித்தோல் கஞ்சாமுனி, பாம்புப்பிடாரர் இருவர், தள்ளாடியார், புலித்தோல் யோகமுனி கோபம் கொண்ட துச்சதேயர் உருக்கள் உள. மேற்கு நோக்கி, ஆறுமுகன் வள்ளி தெய்வானையுடன் மயில் சிறப், வேங்கை, பசு மற்றும் வாடகு, சித்தர்கள் (பேருருவமாக) அமர்ந்துள்ளனர். இங்குள்ள கிணற்றில் சில ரத்துக் கல்வெட்டுக்கள் உள்ளன. கோட்டைபேட்டை தெற்கில் பெருமாள் கோயிலும் வடக்கில் கரியகாளியம்மன் கோயிலும் உள்ளன.

Koviloor Digital Library

முடிவுரை:

இப்பட்டணம் அழிந்ததற்குரிய காரணங்களாகப் பல முரண்பட்ட கதைகளைக் கூறுகின்றார். மகமதியர் படையெடுப்பே முக்காரணமாக இருக்கலாம் எனத் தெரிவதற்குரிய சான்றுகள் பலவுள. ஊர்ச்சுவர்க் கோயில்கள் பழமையின் பெருமையை அப்படியே போற்றி வருகின்றன. கருமலையாண்டவர் பொன்மலை-யாண்டவர் திருக்கோயில் தமிழகத்துக்குரிய, பிராமண வழிபாட்டுடன், சித்தர் வழிபாடு, நாக வழிபாடு மற்றும் மெய்யியல் கோட்பாட்டின்படி வந்த சைவ வழிபாடு முதலான அனைத்து வழிபாட்டு முறைகளையும் உள்ளடக்கியதாக உள்ளது. இக்கோயில்கள் யாவும் இன்றும் "பிராமண (ஆகம) வழிபாட்டுமுறை குழையாத பழம்பயுடன் விளங்குவதும் குறிக்கத்தக்கதாகும். பக்தர்களும் மேற்பட்ட எட்டுச் சுவடிகள் இம்மறைந்த மாதகளின் புகழை மறையாமல் போற்றிப் பாடுகின்றன.

....

குறிப்புக்கள்: கல்வெட்டுக்கள், சுவடிகள் யாவும் கள ஆய்வில் பெற்றவை. கட்டுரையாசிரியரிடம் உள்ளன.

Koviloor Digital Library

தமிழ் எண்கள்

ம. வெண்ணிலா,
சுவடியியல் பட்டய மாணவர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-113.

இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம் முதலான துறைகளில் பதிப்பாய்வுகள் பல நடைபெற்ற இருந்தாலும் கணிதத் துறையைப் பொறுத்த வரையில் நடைபெற்றுள்ள ஆய்வுகள் மிகக் குறைவு அளவிலேயே உள்ளன.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள் 392)

என்ற அடிகளால் எண்கள் மனிதர்களின் வாழ்வியல் செயல்பாடுகளோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்குவதைக் காண முடிகிறது. பண்டங்களை எண்ணிக் கணக்கிடவும் எடுத்தலளவைக்கும், முகத்தல் அளவைக்கும், நிலத்தை அளந்தறியும் நீட்டல் அளவைக்கும், நாழிகை, நாள், வாரம், மாதம் ஆண்டு ஆகியவற்றைக் கணக்கிடவும் எண்கள் அடிப்படையாக விளங்குகின்றன.

தொகுப்பும் பெயரிடுதலும்:

எட்டுத் தொகையில் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு என்றும் தொகை நூல்கள் எண்களின் அடிப்படையில் பெயரிடப்பட்டுள்ளன. பத்துப் பாட்டில் பத்துப் பாடல்கள் தொகுக்கப்பட்டு அதன் அடிப்படையில் பெயரிடப் பட்டுள்ளது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணை மொழி ஐம்பது, கார் நாற்பது, களவழி நாற்பது என்று நூல்களுக்கு எண்களின் அடிப் படையில் பெயரிடப்பட்டுள்ளன. இங்ஙனம் நூல்கள் எண்களின் அடிப்படையில் பெயரிடப்பட்டுள்ளதும், தொகுக்கப்பட்டுள்ளதும் சிந்தித்தற்குரியன.

தமிழ் எண் முறை அறிமுகம்

பத்தாயிரம், ஆயிரம், கோடி என்று கணக்கிடும் முறை தமிழ் மொழியில் பின்பற்றப்படுகிறது.

கல்வெட்டுகளிலும் சுவடிகளிலும் பயன்படுத்தப்பட்டு வந்த தமிழ் எண்கள்

௧	௨	௩	௪	௫	௬	௭	௮	௯	௰	௱	௲
1	2	3	4	5	6	7	8	9	10	100	1000

என்பவையாகும். இவ்வெண்கள் இக்காலத்தில் பயன்பாட்டில் இருந்தாலும், பயன்படுத்தப்படும் எண்களின் தன்மைகளுக்கு ஏற்ப சில மாற்றங்களைப் பெற்று விளங்குகின்றன. இன்று நாம் பயன்படுத்தும் எண்களில் 9 என்ற எண்ணிற்கு மேல் உள்ள எண்களுக்குக் குறியீடு இல்லை. ஆதலால் தமிழ் மொழியில் உள்ள பத்து, நூறு, ஆயிரம் ஆகிய குறியீடுகளும் பயன்படுத்தப்படுவதில்லை. 9 வரை தமிழ் எண்கள் எழுதப்பட்டு அதற்குப் பின் வரும் எழுத்துக்கள் அவ்வெண்களின் அடிப்படையிலேயே எழுதப்பட்டு வருகின்றன. 10 எண்டாலும் என்றும், நூறு என்பதற்கு என்றும், நூற்றி ஒன்று என்பது என்றும் எழுதப்பட்டு வருகின்றன. எண்களின் மதிப்புகள் அது அமைந்திருக்கும் இலக்கங்களின் இடத்தைப் பொறுத்து அமைந்துள்ளன. வலப்புறத்திலிருந்து இடப்புறம் நோக்கிச் செல்லச் செல்ல அதன் மதிப்புக் கூடிக் கொண்டே செல்கிறது.

345 என்ற எண் தமிழ் மொழியில் என்று குறிப்பிடப்படுகிறது: இவ்விலக்கமுறை இன்று பயன்படுத்தப்படுவதில்லை. சுவடிகள் கூட பிற்காலச் சுவடிகளில் இவை பயன்படுத்தப்படவில்லை. ஆதலால் விலக்கமுறையில் எண்கள் எழுதப்பட்டுள்ள சுவடிகள் காலத்தால் முந்தியது என்றும், புதிய முறையில் எண்கள்

Koviloor Digital Library

எழுதப்பட்டுள்ள சுவடிகள் காலத்தால் பிந்தியது என்றும் கலப்பு முறையில் எழுதப்பட்டு உள்ள சுவடிகள் மூலமானது காலத்தால் முந்தியது, படியானது காலத்தால் பிந்தியது என்றும் அறியும் வகையில் அமைந்த கால ஆய்வுச் சிந்தனைக்குத் தனை புரிகின்றன.

எண்ணியல் ஆய்வு

அக்காலத்தில் கணித அறிவு அறிஞர்களிடையே மட்டுமன்றி மக்களிடையேயும் பரவி இருந்தது. வாய்மொழி வாயிலாகவே பொருள் கணிதவியல் வழங்கி வந்துள்ளது. அக்காலக் கட்டத்தில் விளங்கிய பல பாடல்களுக்கு இன்று பொருள் அறிய முடியவில்லை. எடுத்துக்காட்டாக

காவெழுதி மேல்சிறி காலுக்குங் கீழ்க்குத்தி
நாவெழுதி ரெண்டெழுதி நவ்விளாள் சிலமுடன்
குத்தி யிழுத்துக் கொம்பெழுதி நாவெழுதிக்
குத்தி மறைத்த குறி

([illegible] நவ்விளாள் – சிலமுடன்
[illegible] குறி) புலவர் பா. கண்ணையன்)

என்ற பாடலின் பொருளை அறிந்து கொள்ள இயலவில்லை.

பழங்கைக்குகளில் உள்ள சிக்கல்களுக்கு விடை தருவதும், அளவுப் பெயர்களுக்கு விளக்கம் அளிப்பதும், தற்போது வயதில் முதிர்ந்தவர்களாலேயே இயலும் என்ற நிலை நிலவுகிறது. அக்காலத்தில் கணித சிக்கல்களை விடுவிக்கின்ற உத்தி முறைகளைப் பலகாலும் பயன்படுத்தியவர்களாகவும், இருந்ததால் இது அவர்களுக்கு எளிதாகிறது. வாய்மொழி நிலையிலும் கல்வி முறையிலும் செல்வாக்குக் குறைந்ததால் இளையோருக்கு இது இயலவில்லை. இன்றைய நிலையில் கணித அறிவும் ஆற்றலும் பெற்றவர்கள் குறைவாக இருக்கும் இக்குழலில் அவர்களும் மறைந்து போவார்களேயானால் இக்கணிதவியல் சிக்கல்களுக்கு விடையளிக்கும் ஆற்றல் பெற்றவர்களைக் கண்டறிதல் இயலாத ஒன்றாகி விடும். ஆசியவியல் நிறுவனத்தைச் சேர்ந்த புலவர் பா. கண்ணையன் என்பவர் தமிழ்க் கணித அறிவு நிறைந்தவராக, என் தொடர்பான சிக்கல்களை நீக்குவதில் வல்லவராகத் திகழ்கிறார். அவரையும் அவர் போன்று தமிழ் எண்களையும், அளவைகளையும் அறிவு நிரம்பியவர்களைக் கண்டறிந்து அவர்தம் உதவியுடன் என் கணித ஆய்வுகள் விரைவாக நடத்தப்பட வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டு தொடக்கம் வரை கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் சுவடிகளிலும், தமிழ் எண்களையே எழுதி வந்தனர். காலத்தில் எழுதுவது வழக்கத்திற்கு வந்த பின்னரே தமிழ் எண்கள் பயன்படுத்தப்பட்டதை சில ஆவணங்களில் குறியாக சில ஆவணங்களில் காணி, ஒரூபா, இருபா முதலிய அளவுகளும் முந்தி முதலாவது பின்னர் அளவு எண்களைக் காண முடிகிறது. தமிழ்க் கணித முறையில் முழு எண்களான ஒன்று முதல் அதற்கு மேற்பட்ட பதிப்புள்ள எண்களை மேல்வாயிலக்கம் என்றும் ஒன்றிற்குக் கீழுள்ள பின்ன எண்களைக் கீழ்வாயிலக்கம் என்றும் குறிப்பிட்டனர். [illegible], [illegible], கீழ்வாய் போயிலக்கம், கீழ்வாய் சிற்றிலக்கம் [illegible] நெல்லிலக்கம், குழிமாற்று என்றும் அடுத்தடுத்த சில பதிப்பெண்களும் இருந்தன. கீழ்முந்தி, கீழ்அரைக்காணி என்ற முறையே குறிப்பிட்டு அவற்றைக் கீழ்வாய்ச் சிற்றிலக்கம் என்றும் வழங்கினர். இவையாவும் தமிழ்க் கணிதத்தில் மேல்வாயிலக்கம், கீழ்வாய்ப் போயிலக்கம், கீழ்வாய்ச் சிற்றிலக்கம் என்றும் நெல்லிலக்கம், குழிமாற்று என்ற முறைகளிலும் அமைந்துள்ளன.

Koviloor Digital Library

57

கீழ்வாய்ப் பேரிலக்கம்

முந்திரி	1/320
அரைக்காணி	1/160
காணி	1/80
அரைமா	1/40
முக்காணி	3/80
ஒருமா	1/20
இரண்டுமா	1/10
முன்றுமா	3/20
நான்குமா	1/5
கால்	1/4
அரை	1/2
முக்கால்	3/4
ஒன்று	1

கீழ்வாய்ச் சிற்றிலக்கம்

1/320	
2 முந்திரி	
2 அரைக்காணி	
2 காணி	
3 காணி	
2 அரைமா	
2 ஒருமா	
3 ஒருமா	
2 இரண்டு மா	
5 ஒருமா	
10 ஒரு மா	
15 ஒரு மா	
20 ஒரு மா	

கீழ்முந்திரி	1/320
கீழ்அரைக்காணி	1/160
கீழ்க்காணி	1/80
கீழ் அரைமா	1/40
கீழ் முக்காணி	3/80
கீழ் மா	1/20
கீழ் இரண்டுமா	1/10
கீழ் முணுமா	3/20
கீழ் நாலுமா	1/50
கீழ் கால்	1/4
கீழ் அரை	1/2
கீழ் முக்கால்	3/4
கீழ் ஒன்று	1

நாலயப்பகுதி

கால் வீசம்	
அரை வீசம்	
முக்கால் வீசம்	
வீசம்	
அரைக்கால்	
முன்று வீசம்	
கால்	
அரை	
முக்கால்	
ஒன்று	

5 முந்திரி	1/64
2 கால் வீசம்	1/32
3 கால் வீசம்	3/64
2 அரை வீசம்	1/16
2 வீசம்	1/8
3 வீசம்	3/16
2 அரைக்கால்	1/4
2 கால்	1/2
3 கால்	3/4
4 கால் அல்லது 2 அரை	1

நெல் நிலக்கம்

செவிடு, ஏழுக்கு (5 செவிடு) உழக்கு, உரி (½ படி) மு உழக்கு, நாழி (1 படி) மரை (பரக்கால்), பதக்கு, முக்குறுணி, நாலி (நான்கு பரக்கால்) இருநாலி (எட்டு பரக்கால்), கலம்

கால அளவு

60 விநாடி	1 நாழிகை
2½ நாழிகை	1 ஓரை

..4

Koviloor Digital Library

$3\frac{3}{4}$	நாழிகை	1	முகூர்த்தம்
$7\frac{1}{2}$	நாழிகை	1	சாமம்
8	சாமம்	1	நாள்
7	நாள்	1	கிழமை (அ) வாரம்
15	நாள்	1	பக்கம்
30	நாள்	1	திங்கள்
6	திங்கள்	1	அயனம்
2	அயனம்	1	ஆண்டு

தமிழ் நிட்டளவை

8	அணு	1	கதிரெழு முகள்	8	நெல்	1	விரற்கிடை
8	கதிரெழுமுகள்	1	பஞ்சு முகள்	12	விரற்கிடை	1	சாண்
8	பஞ்சு முகள்	1	பயிர் முனை	2	சாண்	1	முழம்
8	பயிர் முனை	1	நுண்மணல்	12	முழம்	1	சிறுகோல்
8	நுண்மணல்	1	சிறு கடுகு	500	சிறுகோல்	1	கூப்பிடு தூரம்
8	சிறு கடுகு	1	எள்	4	கூப்பிடுதூரம்	1	காதம்
8	எள்	1	நெல்	4	காதம்	1	யோசனை

இக்கட்டுரையில் பல அளவைப் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழாரும், ஆய்வு நிறுவனங்களும் தமிழ் கணிதம் குறித்த ஆய்வுப் பணிகளில் ஈடுபடுவது கணிதத் துறைக்கும் அதைச் சார்ந்த பிற துறைகளுக்கும் நன்மை அளிப்பதுடன், இவை தமிழர்களின் நுண்ணிய அறிவு திறத்தினை உலகிற்கு வெளிப்படுத்துபவையாகும்.

துணை நூற்பட்டியல்

1. திருக்குறள் தெளிவுரை
திருக்குறளார் வீ.முனிசாமி
முதற்பதிப்பு 1992-நவம்பர் 9
திருக்குறளார் பதிப்பகம்
சென்னை-35.

2. மொழி நூல்,
டாக்டர் மு.வரதராசனார்,
முதல் பதிப்பு 1947
திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடட்,
சென்னை-1

நேவலாளிகள்

1. முனைவர் பாலசுப்ரமணியன்
கணியவியல் ஆய்வு நிறுவனம்
சென்னை

2. திரு.விஜயலட்சுமி,
தஞ்சாவூர்

Koviloor Digital Library

காலிங்கர்

முத்து.எத்திராசன்,
சென்னை

திருக்குறள் நூலுக்குக் காலத்தோறும் உரைகள் பல தோன்றியுள்ளன. அவற்றுள் முதியபாவ பழைய உரையாசிரியர்கள் மணக்குடவர், தருமர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பருதியார், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் போன்றவர்களாவர். இதனை

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி – திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர் நூற்கு
எல்லையுரை செய்தார் இவர்"

என்றும் வெண்பாப் பாடல் நமக்கு விளக்கும்.

காலிங்கரின் காலம்:

பரிமேலழகரின் காலம் கி.பி.13ஆம் நூற்றாண்டு என 'பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன்' என்னும் நூலை எழுதிய ஆசிரியர் ஏ.சுந்தரமூர்த்தி அவர்கள் கூறியுள்ளார். 1313, 1324 முதலிய குறள்களுக்குக் காலிங்கர் எழுதிய உரை பரிப்பெருமாள் உரையாகவே காணப்படுவதால் இவர் பரிப்பெருமாளுக்குப் பிற்பட்டவராதல் கூடும். பரிப்பெருமாள் காலத்தை 4.பி. பழனியப்பப் பிள்ளையவர்கள் தக்கவாறு ஆராய்ந்து அவர் காலம் பதினொன்றாம் நூற்றாண்டு எனக் கூறியுள்ளார். ஆகவே காலிங்கரின் காலம் கி.பி.12 ஆம் நூற்றாண்டு என்று கொள்வது சரியாகும்.

இவர் 'காலிங்கர்' என்றும் குறிப்பிடப்படுகிறார். வெண்பாப் பாடல் 'காலிங்கர்' என்று குறிப்பிடுவதால் 'காலிங்கர்' என்றே நாமும் அழைப்போம்.

குறிப்பு

"வருத்தாமல் வருத்த வகையல்லால் கோடி
பொருத்தார்க்கும் பொய்த்தல் அரிது" – (377)

என்ற குறளுக்குப் 'பழவினை தன்னைச் செய்தானைத் தானே சென்றடையும்' என்ற சமணக் கொள்கையைக் காட்டி உரை எழுதலாம், என் 580 குறளரையில் 'உத்தரரு – போகப் பொய்க்கும் பூமி' என்றும் சமண் கொள்கை குறிப்பிடப்படுதலாம் (உத்தரரு–போகத்தொய்க்கும் பூமி என்பது சமண நூற் கொள்கை) என்.1002 குறளுக்கு நரக யோனியும் திருக்கும் பிறவும் ஆகிய கடையான பிறப்பு உளதாம் என்ன சமண் சார்பான விளக்கம் தருதலாம் இவர் சமணச் சமயச் சார்புடையவர் என்று தெரிகிறது. என் 253 குறளுக்கு காலிங்கர் "அந்தணராயினும் ஆயுதத்தைக் கைப்பற்றினால் அதனைச் சுற்றுதல், எறிதல், நீட்டுதல், நிமிர்த்தல், வெட்டுதல் செய்வர். மற்றதுபோல நற்றிக் கள் செல்லாது யாது என்னில் ஓர் உயிர்வாழ் சாதியின் ஊனின் சுவை கருதி உண்பாரது நெஞ்சம் என்றவாறு" என்று கூறியுள்ளார். இவ்வுரையின் மூலம் [illegible] என்று கூறப்படுவதிலிருந்து காலிங்கர் அந்தணர் (பார்ப்பனர்) அல்லர் என்பது தெளியப்படும். ஏனெனில் அந்தணர்கள் ஊன்உணவை விரும்பாதவர் அல்லவா!

நாடு: ஊரினை மற்றவர்கள் ஊர் (பரிமேலழகர்) கோ(மணக்குடவர்), வாணாடு (பரிதியார்) என்று உரை கூற, 'ஊரியாதி பெருநாடு பெருநாடு' என்று காலிங்கர் பொருள் கூறியுள்ளார். எனி என்ற வழக்குச் சொல்லை பண்டைத்தமிழ் வழக்கும் பெருநாடு என்னாமல் சொல்லாகும். ஆகவே காலிங்கர் சொல்லை நாட்டுப் பண்பு விளங்கிற்று.

Koviloor Digital Library

ஊர்: தற்போது அறிந்த செய்தியொன்று காவிங்கர் வாழ்ந்த ஊரை நமக்கு அடையாளங் காட்டுகிறது. கொல்லட பட்டணத்தில் உள்ள காஞ்சிமாநகரத்திற்குத் தெற்கே உத்திரமேரூர் (சிஞ்ரோடு) போகும் வழியில் 13 கி.மீட்டர் தூரத்தில் ஓரப்பாக்கம் என்னும் ஊர் உள்ளது. அவ்வூரில் உள்ள ஏரி 'காவிங்கர் ஏரி' என்றும், ஒரட்டை வரி என்றும் அழைக்கப்படுகிறது. திருக்குறளுக்கு உரை எழுதிய காவிங்கர் அவ்வூரில் உள்ள ஏரியை வெட்டுவித்ததால் காவிங்கர் ஏரி என்றும், ஒரவு ஏரிகளை ஒன்றாக இணைத்துக் கட்டப்பட்டதால் ஒரட்டை ஏரி என்றும் வழங்கப்படுகின்றன. மேலும் இவ்வூரில் உள்ள பயிர் நிலம் ஒன்றுக்கு 'வாத்தியார் மானியம்' என்ற பெயரும் காவிங்கர் பெயரை நினைவூட்டுகிறது. இவ்வூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்று. ஒரு சமயம் காவிங்கர் காலத்தில் அவ்வூர்ப் பள்ளியில் படிக்கும் மாணவன் ஆசிரியருக்குக் கொடுத்த வேண்டிய ஒரு காணிக்கையைக் கொடுக்க முடியாமற் போய் விட்டது. அப்போது ஆசிரியர் மாணவனைப் பார்த்துக் காணிக்கையைக் கேட்க, மாணவன் "அப்பா இன்னும் அறுக்கவில்லை. அறுத்தால் கொடுக்கின்றேன்" என்று கூறினான். அவன் அறுக்கவில்லை என்று குறிப்பிட்டது நெல் அறுவடையை. ஆசிரியர் இதை அறிந்திருந்தும் அவருடைய வறுமையில் காணிக்கை கிடைப்பதில் உள்ள காலதாமதம் அவருக்கு வேதனையைத் தரவே, அவர் கோபத்தில் "நாவி அறுக்கவில்லையா? அறுத்தால்தான் கொடுப்பார்களா? என்று கிண்டல் செய்ய ஆரம்பித்து விட்டார். இச்சொல் மாணவருக்கு வேல் பாய்ந்தது போல் இருந்தது. அப்பொழுது காவிங்கர் இவ்வுரையாடலைக் கேட்டு, மனம் பதைபதைத்து இருவருக்கும் நன்மை செய்யும் பொருட்டு ஒரவு நிலத்தை ஆசிரியருக்கு மானியமாக அளித்து விட்டார். அதுவே 'வாத்தியார் மானியம்' என்னும் பெயரில் இன்றும் வழங்கி வருகிறது. இச்செய்தி செவிவழியாக இன்றும் பேசப்படுகிறது. காவிங்கர் சமணர் என்பதால் அவர் வாழ்ந்த ஓர்ப்பாக்கம் ஊரும் இன்றும் சமணரும் வாழ்கின்றனர். சமணர்க்கோயில் நல்ல நிலையில் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

காவிங்கர் உரை மூலம் காணப்படும் சமுதாயப் பழக்க வழக்கங்கள்:

ஓர்மனின் அறிவைகள்:

"நெடுநீர் மறவி மடியுள் நான்கும்
கொடுநீரார் காமக் கலன்" - 605 என்னும் குறளுக்கு உரை எழுதுகின்ற போது, அரசர்க்கு உரிய நல்லவும் ஆகிய கடலும், கள்ள மாலையும், ஆறும், கடுக்கும் அறிதல் இவர் என்று குறிப்பிடும்போது அவர் காலத்தில் அரசர் அறிந்த அறிவைகளாக இவை இருந்தன என்பது தெளிவாகிறது.

வீரக்கழல்:

"கழலாய் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல் யாப்புக் காரிகை நீர்த்து" - 777. இக்குறளுக்குக் காவிங்கர் உரை பின்வருமாறு. "இன்னார் இன்ன போர்க்களத்து இன்னவிறல் கொண்டு செய்தார் என்று பற்று எல்லையும் பரந்து நின்றனையே விருப்பு பற்று ஒரு காரணத்தால் சிறிதும் விருப்பா உயிரை உடையராயவர் தம்காலில் பூண்ட வீரக்கழல் யாப்பாக பொருந்து ஏர்மைக் கட்டளைப்பாடு உடைத்து; மற்றையார் காலில் கட்டிய கழல் யாதுக்கோ என்று அறியேம் யாம்" என்றவாறு இதில் குறிக்கப்படும் வீரக்கழல் வீரனொருவன் போர்க் களத்தில் காலில் கட்டிக் கொண்டு போர் செய்யும்போது அறியும் அறியாரும்.

Koviloor Digital Library

இவ்வழக்கம் சங்ககாலம் முதல் காலிங்கர் காலம் வரை இருந்துள்ளது. பிறகு இவ்வழக்கம் காலப் போக்கில் மறைந்து போய் விட்டது.

"விரிவோர் காலை கழலே தொடியோர்
மெல்லடி மேலவும் சிலம்பே." - (ஐங்.7)

என்பது சங்ககால வழக்கு. ஆண்களின் கால்களில் கழலும், பெண்களின் (மணமானவர்) கால்களில் சிலம்பும் அணிவது வழக்கம் என்பதைக் குறுந்தொகைக் கூறுவதைக் காணலாம். இவ்வீரக்கழலை ஆண்கள் அணிவதன் நோக்கத்தை இன்றுவரை யாரும் நமக்குத் தெளிவாகக் கூறவில்லை. இதைக் காலிங்கர் மிகத் தெளிவாகக் கூறுகிறார். "இன்னார் இன்ன போர்க்களத்து இன்னவிறல் தொழில் செய்தார்" என்று அதில் குறிக்கப்பட்டு இருக்கும் என்பதை நமக்குத் தெரியப்படுத்துகிறார் காலிங்கர். அதாவது வீரக்கழலில் வீரக் கழலைக் கட்டிய வீரனின் பெயர், செய்கின்ற போர்க்களத்தின் பெயர், அவருடைய வெற்றி செயல்கள் யாவும் அதில் குறிக்கப் பெற்றிருக்கும் என்பதை நாம் அறிகின்றோம். ஆகவே வீரக்கழல் அணிவதன் நோக்கம் இப்போது புரிகிறது.

அரசு: அரசு என்பது அரசன் இருக்கும் கோட்டையைக் குறிப்பதாகும். அக்கோட்டையில் என்னென்ன இருக்கும் என்பதைக் காலிங்கர் மிக விரிவாக எடுத்துக் கூறுகிறார். இதன்மூலம் அவர் காலத்தில் கையாண்ட பாதுகாப்பு வகைகளான போர் முறைகளை நாம் தெளிவாக அறிகின்றோம்.

"கொளற்கரிதாய்க் கொண்ட கூழ்த்தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீர நாடு" - 745

என்ற குறளுக்கு காலிங்கர் உரையைக் காண்போம். "பகைவேந்தர் முற்றி இருந்து கொளற்கு அரிதாய், அகத்தோர் நெடிது ஆண்டு இருப்பிடம் உற்கு எளிதாகப் பொருள் ஈட்டிக் கொண்ட நெல், அரிசி, கொள்ளுப்பயிர் முதலிய உணவுப் பொருள்களையும் உடைத்தாய், நாற்பெருஞ் சேனையும் விட்டு உலாவுதற்கு வேண்டும் வீதியும், பூவும், சாந்தும், நீரும் நிழலும், பொது வியர்க்கு உரிய மனையும் பிறவும் உடையது நாடு; பற்று அறவே அரசு ஆவது என்றவாறு". இவ்வுரையின் மூலம் நாம் அறிவது, அவர் காலத்தில் கோட்டைகளில் நெல், அரிசி, கொள்ளுப்பயிர் போன்ற உணவுப்பொருள்கள் சேமித்து வைக்கும் கிடங்குகளும், வீரர்களுக்கு வேண்டிய பூ, சந்தனம், நீர், தங்குவதற்கு நிழல், பொதுமனிதர் குடியமரவுமும் இருக்கும் என்பது தெரிகிறது. 749-ஆம் குறளுக்குக் கூறிய உரையில் பகை அரசரை எதிர்த்துப் போரிடுவதற்காகக் கல்பொறியும், பாம்பும், [illegible], விற்பொறியும், வேலும், [illegible] பலவும், கவண் இருப்பு உலக்கையும், விச்சுறு [illegible], விசைத்தெறிகவணும் முதலிய இயந்திரங்கள் இருந்ததாகக் கூறியுள்ளார். இதைக் காணும்போது சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்ற பொறிகள் நம் நினைவிற்கு வருகின்றன.

குதிரை: 814ஆம் குறளுக்கு உரை கூறுகின்ற போது குதிரைப் பயிற்சியைப் பற்றி நாம் அறிகின்றோம். குதிரையை இடது சாரி, வலது சாரியாகச் செலுத்தவும், குறுக்காக ஓடவும், நெடுகப் பாய்தலும் ஆகிய முறைகளைக் குதிரைக்குக் கற்றுத் தரப்படுவது வழக்கம் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

Koviloor Digital Library

சந்தாப்புச்சி_ஸ்ட்டிப்: 1050ஆம் குறளுக்கு உரை கூறுகின்ற போது "ஒப்புரவிற்கால் வரைத் தறவாமை
உப்பிற்குப் காடிக்குங் கூற்று" என்னும் குறளில் உள்ள 'உப்பு' என்பதற்கு 'விலை' என்றும் 'காடி' என்பது 'நடுநிலைமை' என்றும் பொருள் கூறியுள்ளதோடு 'சிறுமக்கள் பலர் கண்புதைத்து நகையாடும் இடத்து அவருள் ஒருவனை 'இவன் காடிச்சால்' என்று நடுநிலையாளர்: நடுநிலை ஆக வழக்கு என்பது அறிக", என்று கருதுகின்றார்.

சொல்வழக்கு: இரந்தும் உயிர் வாழ்தல் (1062) என்னும் குறளில் வரும் உலகியற்றியான் என்பதற்குப் பொருள் கூறுகின்றபோது 'விதாதா' என்று குறிப்பிடுகின்றார். படைக்கும் கடவுளை 'விதாதா' என்ற சொல்லாட்சி அவர் காலத்தில் வழங்கி வரலாம். 1245ஆம் குறளுக்கு உரை கூறுகின்ற போது கற்புடைய பெண்டிரைக் 'கற்புடையாட்டியார்' என்று வழங்குகின்றார். 1239ஆம் குறளுக்கு உரை கூறும்போது இளந்தென்றலை — 'தென்றற் கொழுந்து' என்று கூறுகின்றார்.

உரை நயம்: "மலரிடைப் மொய்க்கு காமம் சிறந்தக்
செவ்வி தலைப்படு வார்" — 1289ஆம் குறளுக்கு எழுதிய உரை மிகவும் நயமுடையது. அவ்வாசகம் பின்வருமாறு. "கோய் தோழீ! உலகத்து வண்டானது மலர் சிதையாமல் மதுவை அருந்துவது போல மற்று அதன் செவ்வி அறிந்து கைக்கொள்ளும்பக்கலும் உலகத்துப் பலர் உளர் எனிப் மற்று அக்காமமாகின்ற அதன் செவ்வி சிதையாமல் சென்று தலைப்படுவார். அதனைப் சிலர் காண்; நீ என்னை முனிய வேண்டா என்றவாறு" என்பது.

பரிமேலழகர் உரையைவிட வள்ளுவர் கூறிய சொல்லுக்குப் பொருளும் மிக அழகிய முறையில் எழுதிச் சென்றுள்ள காலிங்கர் உரை அவரது சமகாலத்தியச் சமுதாயச் செய்திகளைக் காட்டுகிறது.

....

Koviloor Digital Library

தமிழ்ச் சுவடியில் மாந்திரிகமும் - மந்திரமும்

இ.பூமிநாத நாதன்.

பனை ஓலைச்சுவடிகளும் தாழிப்பனைச் சுவடிகளும் மலிந்த காணும் தமிழகத்தில் மருத்துவம், சோதிடம் மாந்திரிகம், இலக்கியம், இலக்கணம், ஆவணம் ஆகியவை தொடர்பான செய்திகள் நிறைந்த காணப் படுகின்றன.

சுவடி ஆய்வாளர்கள் சுவடியில் காணப்படும் கருத்துக் கருவூலங்-களை விழுக்காடு இட்டுக் கூறும் போது மருத்துவம் 40%, சோதிடம் 20% மாந்திக மந்திரச் சுவடிகள் 20% இலக்கண இலக்கியங்கள் 20% என பொதுவாகக் கூறுவர். இவற்றில் இன்றைய அச்சுவடியில் நூலாக வெளி வந்தவை 30% விழுக்காட்டைக் கூட எட்டவில்லை என்பது அறிஞர்தம் கருத்து.

மாந்திரிகம், மந்திரம் என்ற இரண்டும் ஒன்றை ஒன்று தழுவி நிற்பனவே. மந்திரம் என்பது " இன்றைய நடைமுறை வாழ்க்கையில் கண்கட்டு அல்லது மாயா ஜால வித்தை, இறைவனைப் போற்றியும் வேண்டியும் வடமொழியில் கூறும் சுலோகங்கள், நச்சுக்கடிகளுக்காளானவர்களின் உடலிலி-ருந்து நஞ்சினை முறிக்க மந்திரவாதிகள் கூறும் சுலோகங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுவதாக உள்ளது" என்பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியம் கூறு-கிறார்.

மானிடவியலாரின் நோக்கின்படி இயற்கையின் இயக்க விதிகளைப் புரிந்து கொள்ள இயலாத ஆதி மனிதன், இயற்கையைக் கட்டுப்படுத்தவும் அதனிடமிருந்து சில பயன்களைப் பெற்றுக் கொள்ளவும் உருவாக்கிய ஒன்றே மந்திரமாகும். இயற்கையின்பால் இருந்த அச்சவுணர்வே நாளடைவில் இறைவழிபாடு உருவாக வழி வகுத்தது. பிற்காலத்தில் உருவ வழிபாடாகவும் மாறிட காரணமாயிற்று.

தன்னோடு வாழ்ந்த தன் மூதாதைகள் இறந்தபட அப்படி இறந்தபட்ட பிரேதங்களைப் பார்த்தல் இவனுக்கு ஒரு விதமான அச்சவுணர்வு ஏற்படுத்தலாயிற்று. இதனே கவி வழிபாட்டிற்கும், சமாதி வழிபாட்டிற்கும் வித்திட்டன. கடவுளுக்கும் மூதாதையர்க்கும் பிடித்தமான பொருட்கள் படைப்புப் பொருள் ஆயின. படையல் செய்தால் கடவுளோ அல்லது மூதாதையரோ உடன் வருவர் என்ற நம்பிக்கை உருவானது. இதனே பிற்காலத்தில் சமயத்துடன் இணைந்த சடங்குகளாக உருவெடுத்தன எனலாம்.

தொடக்க காலத்தில் மந்திரமானது தீமை பாவனையை மட்டுமே கொண்டிருந்தது என்பார் தாம்சன். உலகில் பல பகுதிகளிலும் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் மந்திரம் பின்வரும் இரண்டு கோட்பாடுகளைக் கொண்டுள்ளது என்று பிரேசர் கருதுகிறார். (13)

Koviloor Digital Library

4. பூம்நாக நாதன்.

ஒத்தன ஒத்ததை உருவாக்குகிறன. ஒரு தடவை தொடர்பு கொண்டிருந்தன எப்பொழுதும் தொடர்பு கொண்டிருக்கும். இவ்விரு கோட்பாடுகளின் அடிப்படையில் அவர் இரண்டு விதிகளை உருவாக்கினார். முதல் கோட்பாடு ஒத்தவிதி (Law of Smilarity) எனப்படும். இதனடன் தொடர்பு கொண்ட மந்திரமானன ஒத்த மந்திரம் (Homoeopathytic magic) அல்லன பாவனை மந்திரம் (Imitative on mimetic magic) என்று கூறுவர்.

இரண்டாவன கோட்பாட்டைத் தொடர்பு அல்லன தொத்த விதி (Law of contact or contagion) என்றார்.

கிராம தெய்வங்களின் கோயில் திருவிழாக்களில் 'உருவம் நேர்ந்து விடுதல் என்பன மரபு. இஃன ஒத்த விதியில் அடங்கும். அஃதாவன தனக்கு ஏற்பட்ட நோய் அகல மண்பொம்மைகள் அளித்தல், தொட்டில் கட்டுதல் முதலியன முதல்வகையைச் சாரும்.

இதனையே நாயமந்திரம் தீயமந்திரம் என வகைப்படுத்துவோரும் உண்டு. செழிப்பை வேண்டிச் செய்யப்படும் சடங்குகள் (white magic என்றும் அழிவை வேண்டி செய்வன என்றும் கூறுவர்.

மந்திரத்தின் நோக்கம்:

இயற்கையுடன் மனிதன் நிகழ்த்திய பரஸ்பரச் செயல்களில் முக்கிய நோக்கம் பொருளாதார பயனை அடைவதாகும். இத்தகைய பொருளாதார பயனை யதார்த்த வாழ்வில் அடையவேண்டுமென்பனதான் தொடக்க கால மந்திரங்களின் நோக்கமாக அமைந்தன. வேட்டையில் விலங்கு கிடைக்க, போரில் வெற்றிபெற, பயிர்களின் செழிப்பை அதிகரிக்க, நல்ல மீன்பாடு கிடைக்க, கால் நடைகள் பெருக காற்று மழை ஆகியவற்றைக் கட்டுப் படுத்த என பல நோக்குகளில் மந்திரங்கள் எழலாயின.

தமிழகத்தைப் பொருந்த மட்டில் மந்திரம் என்பன ஓதுதல், செபித்தல் என்ற பொருளில் அமையும். தமிழ்ப் பேரகராதி 'மந்திரம் பண்ணுதல்' என்ற சொல்லுக்கு மந்திரம் செபி எனப் பொருள் கூறுகிறன. ஆகவே தாம் இறைவனைத் துதித்தல் என்ற பொருள்மையை ஒட்டி நாமாவளிகள், கீர்த்தனைகள், ஸ்தோத்திர நூல்கள் போன்றன தோன்றின. தேவாரம், திவ்யம் பிரபந்தம், திருப்புகழ், அருட்பா என எந்த பக்தி நூலை எடுத்துக் கொண்டாலும் இறைவனைப் போற்றுவதே அதன் தலையாய கொள்கையாக அமைந்திருப்பதைக் காணலாம்.

Koviloor Digital Library

டி.பூமிநாதநாதன்.

சதியும், படையலும் இறைவனை மனிதனோடு தொடர்பு செய்ய வைக்கக் கூடிய ஆற்றல் உள்ளனவாகக் கருதப்பட்டன. மந்திரத்தைக் கொண்டுசெபித்தால் இறைவன் எழுந்தருள்வான் என்ற நம்பிக்கைதான் "மாந்திரிகம்" என்ற கலை உருவாக அடிப்படைக் காரணம் ஆகும்.

தமிழகத்தில் மாந்திரிக மந்திரம் மிகப் பழங்காலத்திலேயே உண்டு என்பன இலக்கியங்கள் வாயிலாக உணரமுடிகிறன. குன்றக்குறவன் என்ற மந்திரவாதி ஆறவாரமான பாவனைச் செயலை செய்ய இயற்கையைத் தூண்டி மழை பெய்வித்தான் என்ற செய்தி ஐங்குறு நூறு - 251 ஆம் பாடல் தெரிவிக்கிறன. சங்கு நண்டு, இறவு, வாளை போன்றவற்றை வையையில் இட்டு 'விளைக' 'பொலிக' என்னக் கட்டளையிட்டார் என்று பரிபாடல் 10:85-86 நமக்குப் புலப்படுத்துகிறன. பலியிடுதல் பற்றிய செய்தி பலியைத் தூவி மழை பெய்வித்ததாகப் புறநானூறு 143 பாடல் விவரிக்கிறன. ஆநிறை கவரச் சென்ற போரு யலாமற்போக, மொழுத்த எருமை இன்றினை வேப்பமரத்துக் கண் உரையும் கடவுளுக்குப் பலி கொடுக்க அதன் பின்னர் ஆநிறை கவர்வன எளிதாயிற்று என்ற செய்தியை அகம் 309:3-6 பாடல் கூறுகிறன.

நறுமகள் ஒருத்தி கொழிக் கொடிநாட்டு, வெண் சிறுகடுகு அப்பி மந்திரம் ஓதி மலர்தூவி இரண்டு ஆடை உடுத்திக் காப்புக்கட்டி, பொரி தூவி, ஆட்டுக்கெடாவின் சிரச்சம் கலந்த அரிசியைத் தாவியங்களுடன் படைத்து மஞ்சள் கலந்த புகையிட்டு செந்நிறப் பூக்களைத் தூவி இசை ஒலிக்க முருகக் கடவுளை வழிபட்டாள் என திரு.முரு (227 -246) என்ற வரிகள் விவரிக்கின்றன.

இலக்கண நூலான தொல்காப்பியம்

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப' தொல்.செய். 490

என்று மந்திரத்தின் ஆற்றலை தொல்காப்பியம் கூறும். மேலும் 'புறத்தாற்றுப் புலனாகாமல் மறைத்துச் சொல்லுஞ் சொற்றொடரெல்லாம் மந்திரம் எனப்படும்" என்று மந்திரத்தினைச் சான்று தருமிபிற்கு' வாய்திறவாத பட்டிமண்டபத்தார் பொன்னு நக்கீரன் ஒருவனைச் சாவவும் வாழவும் பாடு" மந்திரத்தைச் சுட்டியுள்ளார். அம்மந்திரங்கள் இரண்டும் வருமாறு:-

"ஆரிய நன்று தமிழ் தீ தென்றுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பாட்டானைச் சீரிய
அந்தம் பொதியி லகத்தியனா ரானையாற்
செந்தமிழே தீர்க்க சுவா கா" இதன் பொருள், ஆரியம் நன்று தமிழ்தீது என்று சொன்ன ஒருவனைச் 'செத்துப்போ' என்று

Kovilpur Digital Library

4. புலிநாக நாதர்.

சபித்த நக்கீரர் பாடிய மந்திரப்பாட்டு.
அடுத்தது அவர்பாற் கொண்ட இரக்கம் காரணமாக, நக்கீரர் அவனைப் 'பிழைத்தெழப்போ' என உயிர்ப்பிக்கப் பாடிய மந்திரப்பாட்டு

"முரனில் பொதியன் முதற்புத்தேள் வாழி
பரனகிலரும் வாழி – யரனியல்
ஆந்த வேட்கையாக் வேட்கோக் குயக்கோடன்
ஆந்தத் சேர்க்க சுவாகா. இக்கருத்தின் அடிப்படையிலே மந்திரத்தை 'மறைமொழி' என்று திருக்குறள் குறிப்பிடுகிறது.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்". – குறள் – 28 என்பதும் இதனை வலியுறுத்தும்.

இவ்வாறாகத் தொன்மை வரலாற்றைப் பெற்ற மாந்திரிகம் வேதகாலத்திலிருந்தே மக்களின் செல்வாக்கைப் பெற்றுள்ளது. ரிக், யஜுர், சாம, அதர்வணம் என்ற நான்கு வேதத்தில் அதர்வண வேத சூக்தங்கள் மந்திர மாந்திரிகத்தோடு நெருக்கிய தொடர்புடையனவாகக் காணமுடிகிறது. 'அஷ்டகரும் கல்லியம் முதலியன இவ்வேதத்தின் அடிப்படையில் மிருந்த தொடர்பு உடையனவாகும். அஷ்ட கர்மம் என்பது அஷ்ட கர்மம் என்றபொருள் படியும். அஷ்டம் என்பது எட்டு எனவும் கர்மம் என்பது செயல் என்ற வகையில் பொருள் அடையும், அபிதான சிந்தாமணி கீழ்க்கண்டவாறு விளக்கு-கிறது:-

இது வசியம், மோகனம், உச்சாடனம், தம்பனம், பேதனம் ஆகர்ஷணம், விந்வேஷணம் மாரணம் என எட்டு விதமாம். அவற்றுள் வசியம் பல வித மூலிகைகள், கருக்கள் சேர்த்தமையினால் வசமாக்கல். அது லோகவசியம், ராஜவசியம், ஸ்திரீ வசியம், புருஷ வசியம், மிருக வசியம் பூதப்பிரேத வேதாள வசியம் என்பன. இவை மந்திரங்களால் வேறுபடும். மோகனம் மனத்தைக் கவர்தல். இவ்வாறே கருக்கள் மூலிகைகள் சேர்த்தமையினால் தேவர்களையும் பூத-[illegible] மனுஷரையும் மோகிக்கச் செய்தல். உச்சாடனம் – [illegible] [illegible] தேவதைகளைப் பகைவர் [illegible] ஓப்பப்படுத்த ஏவுதல், தம்பனம் பகைவனையும் தான் எண்ணிய பொருளையும் இருந்த நிலை பெயராது தம்பிக்கச் செய்தல், அது ஜலஸ்தம்பம், அக்கினிஸ்தம்பம் வாயுஸ்தம்பம், வர்க்குஸ்தம்பம் முதலிய பலவற்றைச் செய்யும் பேதனம் நம்புக்கொண்ட இருவரைப்பிரித்தல். ஆகர்ஷணம் தான் நினைத்த பொருள் எவ்விடத்து இருக்கினும் காலிபோர் முன் வரச் செய்வது. விந்வேஷணம் இரு ஒருவர்க்கொருவரை விரோதி-களாக்குங்கலும். மாரணம் தான் எண்ணியவாறு மரணத்தை உண்டாக்கல்" (8)

Koviloor Digital Library

டி.பூமிநாதநாதன்.

கல்லியம் என்பது மாந்திரிகம் தொடர்புடைய நூல் ஆகும். "தலைமயிரை, எலும்பு, செங்கல், ஓடு, விறகு, விரகம், சாம்பல் கரி, விஷம், தானியம், பொன், கல், தேரை, விலங்கின் கொம்பு, செத்தநாய் சாடி இவைமனையில் புதைந்திருப்பன. இவற்றை அறிந்து கூறவே கல்லியம் என்பர். (9) தவம், யோகம், ஞானம் என்பவற்றின் மூலமே அஷ்ட கருமம் செய்வதற்கான தகுதியைப் பெறமுடியும் என்பது சித்தர் பெருமக்கள் கருத்து. தவம் என்பது சித்தி கைவரப்பெறும்வரை மனதை ஒருநிலைப்படுத்தியிருப்பது.

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அனாகதம் விசுத்தி, ஆக்கினை என ஆறு ஆதார நிலைகளாகவும் அவை முறையே பிங்கலையாம் சூரிய கலையில் ஆறு ஆதார நிலைகளும் இடகலையாம் சந்திர கலையில் ஆறு ஆதார நிலைகளும் இட பிட தலைக்கு இடைப்பட்ட (நடு) சுழிமுனை கலையான கரிய சந்திர கலையில் ஆறு ஆதார நிலைகளும் ஆக மூன்றாறு பதினெட்டு நிலையில் பூரகம் என்ற மூச்சு உள் இருத்தல் நேசகம் என்ற மூச்சு வெளியேற்றல் என்ற பிராணாயமப் பயிற்சி மூலம் மனம் ஒரு நிலைப் படுத்தி அதன் வாயிலாக உடற்சுத்தம் ஏற்பட்டு 'குண்டலி' என்று சொல்லப்படுகின்ற அறிவு நிலை விழிப்புற அதன் பயனாகவே மேற்கண்ட அஷ்டகரும வித்தையை முழுதாக அறிய முடியும் என்பர். இம்மன ஒரு நிலைப் படுத்துதலைத்தான் ஔவையார், தனது விநாயகரகவலில் விரித்துரைக்கிறார்.

மனது ஒருநிலைப்படுத்தி குண்டலி சக்தி அறிந்துவிட்டால் மந்திரங்கள் அத்தனையும் சித்தியாகும் என்பது சித்தர் பெருமக்கள் வாக்கு பஞ்சாட்சர மந்திரம், சடாட்சரமந்திரம், அஷ்டாட்ட மந்திரம் இவை மூன்றுமே பொது நிலையில் சிறப்பு என்றாலும் மாந்திரிகத் தொழிலுக்கும் சிறப்புக்-குரியதாகவும் அடிப்படையானதாகவும் கருதப்படுகின்றன.

பஞ்சாட்சர மந்திரத்துடன், பிரணவம் எனப்பட்ட 'ஓம்(/' என்ற மந்திரத்தையும் சேர்த்துக் குண்டலியுடன் பூட்ட அல்லது ஒன்றினைக்க அஷ்ட கருமம் முற்றிலும் சித்தியாகும் என்பர். பஞ்சாட்சர மந்திரம் பற்றிக் காகபுசுண்டர் விரிவாகக் குறிக்கிறார்.

இத்தனை சிறப்பினைப் பெற்ற மாந்திரிகம் என்பது தற்-காலத்தில் மந்திரித்தல், காப்புக்கட்டல் திருநீறுபோடல், கயிறு போடல், தாயத்து போடல், கும்பம் வைத்தல், ஆடு வெட்டல், சேவல் அறுத்தல், இரத்தம் தெளித்தல், பொங்கல் வைத்தல், மை வைத்தல், திருஷ்டி கழித்தல், சாபம் போடல், வாய்கட்டல், மெட்டுப்போடல், நேர்த்திக்கடன் செய்தல், ஈட்டு வெட்டிப்போடுதல் மடிவாரி இறைத்தல், வசியம் செய்தல் போன்ற பலவேறு விதமான செயல்பாடுகளுக்கும் பயன்பட்டு வருவதைக் காணலாம்.

Koviloor Digital Library

டி. பூமிநாதநாதன்.

பெரிய கடவுளர் முதல் சிற தெய்வங்கள் வரை மாந்திரிகத்தில் இடம் பெறுவதைக் காணமுடிகிறது. அறிவியல் கருத்துக்களும் மரபோக்குச் சிந்தனைகளும் சிறப்புற்றுக் காணப்படும் இக்கால கட்டத்தில் மாந்திரிகம் எப்படி போலியானதாகவும் உண்மைக்கு மாறுபட்டதாகவும் கூட இன்று தோன்றலாம்.

மாந்திரிகத்தைத் பூசாரிகள், சோதிடர்களில் சிலர் தங்கள் தொழிலாக வைத்துள்ளனர். கோடங்கிக்காரர், குடுகுடுப்பைக்காரர் சிவாலயத்துக் குருக்கள், சக்தி ஆலயத்து பூசாரிகள் இத்தொழிலை மிகவும் புனிதமாகக் கருதி செய்து வருகின்றனர்.

மாந்திரிகம் எப்படி இறைவனருளாலே எண்ணியதை எண்ணியபடி செய்தல் என்பொது கருத்தாக நாம் கொள்ளலாம். இன்றும் ஏவல் செய்தல், பில்லி சூனியம் செய்தல், கழிப்புக் கழித்தல் போன்றவைகள் நடைமுறையில் காணும்படியாகவே உள்ளன. ஆகவே,

> சுவடிகளில் பதிந்து கிடக்கும் மாந்திரிகம் பற்றிய கருத்துகள் மொத்தமாக வெளிக் கொணரின் பல அற்புத சக்திகளை நாம் அறிந்து கொள்ள முடியும். பதிப்பிக்கப்படாமல் ஒதுக்கப்பட்டுள்ள இக்கலை புத்துயிர் பெற்றால் சமூகத்தில் அதன் அன்றைய சிறப்புகள் அன்றைய மக்கள் அதற்குத் தந்த சிறப்பிடம் போன்றவற்றை உய்த்துணர ஏதுவாகும்.

குறிப்புகள்:

1. 'மந்திரம்' ஆ. சிவசுப்பிரமணியன், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகழக இதழ் தொகுதி-1 எண்.192 ப-1 - 1987
2. ,, ,, ,, ப-11 ,,
3. ,, ,, ,, ப-11 ,,
4. ,, ,, ,, ப-11 ,,
5. ,, ,, ,, ப-11 ,,
6. ,, ,, ,, ப-11 ,,
7. ,, ,, ,, ப-17 ,,
8. அபிதானசிந்தாமணி

...

கா.வீ.

Koviloor Digital Library

சிலப்பதிகாரப் பதிப்புகள்

டாக்டர் டி. மகாலட்சுமி,
சுவடித்துறை,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 113.

ஓலைச்சுவடிகளில் நிறைந்திருந்த ஸ்ரீகோரிக் கருத்துவளங்களை அச்சுச் சாதனங்களில் கொணர்தலே சுவடிப்பதிப்பாகும். சுவடிப்பதிப்பு வரலாற்றினை தொடக்ககாலம் முதல் இன்றுவரை தோன்றிய நூல்களின் அடிப்படையில் கால வரிசை, பொருள் அடிப்படையில் காலவரிசை, குறிப்பிட்ட ஓர் இலக்கியப் பதிப்பின் அடிப்படையில் காலவரிசை என்ற பல நிலைகளில் அணுகுதல் இயலும். அந்நிலையில் ஓர் இலக்கியப் படைப்பின் அடிப்படையில் சிலப்பதிகாரப் பதிப்புகள் எழுந்த வரலாறு இவண் காட்டப் பெறுகின்றன.

சிலப்பதிகாரத்திற்கு எழுந்துள்ள மூலநூல், உரைநூல் பதிப்புகளின் பதிப்பு வரலாற்றை, சுவடி ஆக்கத்திற்கு மேற்கொண்ட பதிப்பு முறையை, பதிப்பு வேறுபாடுகளை அடியொற்றி சிலப்பதிகாரப் பதிப்புகள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. இந்நூலிற்கு பழைய உரைகளுடன் கூடிய பதிப்புகளையும் சேர்த்து எட்டு மூலநூல் பதிப்புகள் கிடைத்துள்ளன. தொடக்க நிலையில் கல்லூரி மாணவர்களுக்குப் பாடமாகச் சிலப்பதிகாரத்தின் நூற்பகுதிகள் அச்சில் வெளிவரலாயின.

1 தி.ஈ.ஸ்ரீனிவாசாச்சாரியார் பதிப்பு:

1872 இல் தமிழ்ப் பண்டிதர் தி.ஈ.ஸ்ரீநிவாஸராகவாசாரியார் சிலப்பதிகார புகார்க் கண்டத்தில் பதிகம் தொடங்கி வேனிற்காதை முடிய எட்டுக் காதைகளின் மூலபாடத்தைப் பதிப்பித்து வெளியிட்டார். இவர் 1876 ஆம் ஆண்டு காலன்வரி முதலாக நான்கு காதைகளை சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய சிலப்பதிகாரம்' என்ற பெயரில் அச்சிட்டு புகார்க் காண்டப்பகுதியை முற்றுவித்தார். பதிப்பாசிரியரின் முகவுரை-யிலிருந்து தெரிய வருவன.

சிலப்பதிகார மூலமும் உரையும் கொண்ட சுவடிகள் கிடைத்திருப்பினும் தருதியான சுவடிகள் கிடைக்கவில்லை. ஒருவாறு திருத்தியச்சிட்டதாகவும் [illegible] யருதல் கூடும். நூல் விரிவுகருதியும் பாடப்பகுதி எப்பதாலும் உரை அச்சிடப்படவில்லை. இதிலுள்ள அரும்பதங்களுக்கு அரும்பத விளக்கமென ஒருரை எழுதி அச்சிடத் தொடங்கியிருப்பினும் இவ்வுரைக் கருவூலம் இன்று கிட்டவில்லை. 'சிலப்பதிகாரம் செய்தவர் சேரமான். இவர் இயற்பெயர் முதலாகிய சரித்திரம் தெரியவில்லை. இவரது தமையன் செங்குட்டுவன் என்ற கூற்றிலிருந்து நூலாசிரியர் இளங்கோவடிகள் என்பதை இவர் அறிந்திருக்கவில்லை என்பது தெரிகின்றது. சிலப்பதிகாரத்தின் சிறப்பு, நூலாசிரியர் சமயம் பற்றிய இவரது கருத்து சிலப்பதிகார ஆய்வு வரலாற்றில் குறிப்பிடத்தக்கது.

Koviloor Digital Library

டாக்டர்.டி.மகாலட்சுமி.

2. சோடாசாவதானம் தி.க.சுப்பராயச்செட்டியார் பதிப்பு:

இவர் முதலில் புகார்க் காண்டத்தை அடியார்க்கு நல்லார் உரையுடன் 1880 ஆம் ஆண்டு வெளியிட்டார். அறிவிக்கை (முகவுரை), அரங்கேற்றுக் காதையில் குறிப்பிடப்பட்டவை, உரைப்பாயிரம், பதிகம், சிலப்பதிகாரம் என்றவாறு இப்பதிப்பின் அமைப்பு அமைந்துள்ளது.

இப்பதிப்பில் அடியார்க்கு நல்லார் உரையும் காவல்வரிக்குப் புத்துரையும் இடம் பெறுகின்றமையால், சிலப்பதிகாரப் பதிப்புகள் வரலாற்றில் முதன் முதலில் உரையோடு அச்சியற்றப் பெற்றப் பதிப்பு என்ற வகையில் இப்பதிப்பு சிறப்பிடம் பெறுகின்றது.

1892 இல் சிலப்பதிகார நூல் முழுமையும் அடியார்க்கு நல்லார் உரையும், அரும்பதவுரையும் உ.வே.சாமிநாதையரால் எட்டு மூலச் சுவடிகள் பதினாறு உரைச் சுவடிகள் ஆக 22 சுவடிகளை ஒப்பிட்டாராய்ந்து செப்பமுடன் பதிப்பிக்கப்பட்டது. சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களும் உரையும் அடங்கிய முழுநூல் அச்சியற்றப் பெறாமல் இருந்த குறை, இவரது தளரா முயற்சியினால் நீங்கியது. அடியார்க்கு நல்லார் உரையில்லாத காவல்வரி, வழக்குரை காதை தொடங்கி அமைந்த பிற பகுதிகளுக்கு, முழுமையாகக் கிடைத்த அரும்பதவுரையின் பேருதவியைக் கொண்டு இவர் உரையெழுதியிருக்கிறார்.

1920 இல் இரண்டாம் பதிப்பின் ஆய்வுக்கு மேலும் மூன்று கையெழுத்துப்படிகள் கிடைத்தமையால் இப்பதிப்பு சில திருத்தங்களை அடைந்தது. 1927 இல் மூலம் உரை முதலியன சில திருத்தங்களைப் பெற்று பதிப்பு மாற்றங்கள் எதுவுமின்றி இரண்டாம் பதிப்பையே ஒத்து மூன்றாம் பதிப்பு வெளி வந்தது. தொடர்ந்து பின்னர் எவ்வித மாற்றங்களுமின்றி உ.வே.சாமிநாதையரின் வாரிசுகள் 1944, 1950, 1955, 1960, 1968 முதலிய ஆண்டுகளில் பதிப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றனர். உ.வே.சா. பதிப்பின் சிறப்புகளை - வரலாற்று நோக்கோடும், ஆய்வு நோக்கோடும், பாடவேறுபாடு மற்றும் நயப்புக் குறிப்புகளோடும் அமைந்த பாங்கினை அறிந்துகொள்ள நன்கு அறியும்.

ஏடுதேடும் முயற்சி, பொருளுதவி பெற முயற்சி, பதிலைப் பட்டியில் கிடைத்த பிரதியில் பலபாடல்களுக்குத் தலைப்பிருந்தமை (693), 50 ஊர்களுக்கு மேல் சென்றமை (766) என்ற பல பதிப்புப் பணிகளை இவரது எட் சரித்திரத்தில் வழியும் அறியமுடிகிறது.

..3.

Koviloor Digital Library

டாக்டர்.டி.மகாலட்சுமி.

4. எஸ்.ராஜம் பதிப்பு:

1957 ஆம் ஆண்டு சிலப்பதிகார மூலப்பதிப்பை மர்ரே கம்பெனி எஸ்.ராஜம் வெளியிட்டார். கற்றவரறி மற்றவரும் புரிந்து கொள்ளும் வகையில் மக்கள் பதிப்பாக வெளியிடும் நோக்கில் இப்பதிப்பு வெளிவந்தது. நூலில் இடையிலுள்ள பொருள் விளக்கமும், சொற்பிரிப்புடன் உரிய நிறுத்தக் குறிகளுடன் கூடிய மூலமும், உரிய இடங்களிலுள்ள தலைப்புகளும் இக்காவியத்தை எளிதில் கற்றாரத் துணை புரிகின்றன. இப்பதிப்பு பின்னர் வந்த மக்கள் பதிப்புகளுக்கு வழிகாட்டி-யாகவும், மக்களிடையே சிலப்பதிகாரம் பரவவும் துணைபுரிந்தது.

வ.சுப.மாணிக்கம் பதிப்பு:

1958 இல் சிலப்பதிகாரத்தையும், மணி மேகலையும் 'இரட்டைக்காப்பியங்கள்' எனும் பெயரில் வ.சுப.மாணிக்கம் பதிப்பித்தார். இப்பதிப்பு இன்றையத் தமிழர் அறிவு பெறவும், நாளைத் தமிழர் ஆக்கம் பெறவும், நடுத்தரப் பதிப்புகள், அளவுப் பதிப்புகள் வேண்டுமென்ற நோக்கில் எழுந்தனவ.

இதன் இரண்டாம் பதிப்பில் (1960), சிலப்பதி-காரமாந்தர், சிலப்பதிகார இலக்கியக் குறிப்புகள் என்பவை சேர்க்கப் பட்டு இலக்கியத்திற்கு வேண்டிய ஆய்வு முறைகளைப் புலப்படுத்துவதால் இதனைச் சிலப்பதிகார மற்றும் மணிமேகலை ஆய்வுலகத் திறவுகோல் எனலாம்.

சிலப்பதிகாரப் பதிப்புகள் வரலாற்றில் இறுதியாகக் கிடைத்த சிலப்பதிகார மூலப்பதிப்பை 1964 ஆம் ஆண்டு லிப்கோ கம்பெனி வியாபார நோக்கில், மலிவு விலைப்பதிப்பாக வெளியிட்டன.

சிறுகச் சிறுக அச்சியற்றப்பெற்று, பகுதி, பகுதியாகத் தொடர்ந்து முழுவடிவம் பெற்று, மூலபாடம் புரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டு, தொடரெண் தரப்பட்டு, ஆய்வு, திறனாய்வு அமைக்கப் பெற்று என்ற பல நிலைகளில் சிலப்பதிகாரப் பதிப்புகளின் வரலாற்றில் வளர்ச்சி நிலையைக் காணமுடிகிறது.

உரை நூல்கள்:

உ.மு.வேங்கடசாமி நாட்டார் உரை:

கி.பி.1942 இல் நூல் முழுமைக்கும் தெளிவான உரை, தெளிந்த முறையில் ஒரே சீராக அமைக்க வேண்டுமென்ற நோக்கில் இவரது உரை எழுந்தது. இப்பதிப்பில் பதிப்புரை, முகவுரை, பதிகம், உரைபெறு கட்டுரை முதலியன இடம் பெறுகின்றன. முகவுரையில் நூல் சிறப்பு, பழைய உரைகளின் சிறப்பு, நூலால் தெரிய வரும் செய்திகள்,

Koviloor Digital Library

டாக்டர்.டி.மகாலட்சுமி

இலக்கியக் கூறுகள், இசைக் குறிப்புகள், தமிழிசை பற்றிய விளக்கங்கள், மூலமும் உரையும் திருத்தம் பெற்ற இடங்கள் முதலியன தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. இளங்கோவடிகளின் சமயமும், காலமும் ஆராயப்பட்டு, பாடவேறுபாடும், இலக்கண மேற்கோள் விளக்கமும் தரப்பட்டிருக்கின்றன. பழைய உரைகளுடன் ஒப்பிட்டு மேலும் பொருள் விளக்கம் காண்பதற்கு நல்விளக்காக அமையும் இப்புத்தகம் சிலப்பதிகாரத்திற்கு முற்றிலொரு பங்கிற்கு மேல் உரை விளக்கமில்லாதிருந்த குறையை அகற்றியது.

ஆர்.கே.சண்முகம் செட்டியார் உரை:

வசந்தம் எனும் இதழில் மாதந்தோறும் எழுதி வந்த உரையைப் பதிப்பித்தால் பலருக்கும் பயன்படுமென இவரது புத்தகம் சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்திற்கு (1946) மட்டும் வெளி வந்தது. இதன் ஒவ்வொரு காதையும் பல கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கட்டத்திற்கும் தலைப்பும், முகவுரையும் தரப்பட்டிருக்கின்றன. நூலின் பொருளைத் தெளிவாகக் காட்டும் இவ்வுரையில் இலக்கணக்குறிப்பு, மேற்கோள் விளக்கம், ஆராய்ச்சிக் குறிப்பு முதலியன இல்லை. ஆயின் இப்பதிப்பில் எஸ்.வையாபுரிப் பிள்ளையின் முன்னுரையும், வி.ஆர்.இராமச்சந்திர தீட்சதரின் மதிப்புரையும் சிலப்பதிகார ஆராய்ச்சிக் கட்டுரைகளாக இடம் பெற்றுள்ளன.

புலியூர்க் கேசிகன் உரை:

மேற்கூறிய உரையின் தன்மையிலேயே அமைந்த சிலப்பதிகாரம் முழுமைக்கும் புலியூர் கேசிகன் உரை எளிமையாக அமைந்த, மக்கள் பதிப்பாக, மலிவு விலையில் வெளிவந்தது. இது மக்களிடை, மாணவரிடை செல்வாக்குப் பெற்றதால் குறிய காலத்தில் பலமுறை பதிப்பிக்கப்பட்டது.

பொ.வே.சோமசுந்தரனார் உரை:

ஆசிரியரும், மாணவரும் முன்னைய உரைகளைக் காட்டிலும் மிகவும் விளக்கமான உரையை அறிய வேண்டுமென்ற நோக்கில் 1969 -ஆல் பொ.வே.சோமசுந்தரனாரின் விளக்கவுரை தோன்றியது. அவ்வுரையில் பதிகம் இளங்கோவடிகள் பாடிய தென்ற பழைய புதிய உரையாசிரியர் கருத்து மறுக்கப்படுகிறது. நூலாசிரியர் மாண்பும் காலமும் ஆராயப் படுகிறது. பழைய, புதிய உரைகளை நன்கிதின் ஊன்றி, நுணுகி, சீர்தூக்கி ஆராய்ந்து, பழையவுரை வழுவிய விடங்களில் புத்துரைவகுத்து புதிய இலக்கியச் சுவைகள் பல காட்டி எழுந்துள்ள அவ்வுரையை சிலப்பதிகாரத்திற்கமைந்த பேருரை எனலாம்.

Koviloor Digital Library

டாக்டர். டி. மகாலட்சுமி.

நூல் முழுமைக்கும் ஒரே புத்தரைகள், புகார்க்காண்டத்திற்குத் தனியே ஒரு புத்தரை ஆக நான்கு உரை நூல்கள் கிடைத்துள்ளன. 'சிலப்பதிகார உரையாசிரியர்களின் பாராட்டுமுறை உரைத்திறனை ஆராய்ச்சி என்று கூற இயலாதெனினும், ஆராய்ச்சி இல்லையென்று சொல்லமுடியாது. -ஒரு இலக்கியத்தின் பதிப்பு பற்றி அறியமுற்படும்போது முதலில் வந்த பதிப்பு பிறந்த பதிப்பு, இறதிப்பதிப்பு, மொத்தப்பதிப்புகள் என்ற விவரங்களை அறிய முடிகிறது.

பதிப்பாசிரியர் முகவுரை, நூலாராய்ச்சி, நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, நூலின் கதைச்சுருக்கம், நூலைப் பற்றிய ஆய்வு முதலியனவற்றை விரிவான ஆய்வுக்குட்படுத்தும்போது பதிப்பாசிரியர்களின் ஆராய்ச்சித்திறன், அதில் அவர்களுக்கு இருந்த ஆழ்ந்த ஈடுபாடு, பன்னூற்புலமை, நூல்கருத்துகளை அறிமுகம் செய்யும்முறை முதலான கருத்துரைகளைத் தெளிவாக எடுத்துக் காட்ட இயலும்.

முதற்பதிப்பிற்கும் பிற பதிப்பிற்குமுள்ள மூலபாட ஆய்வும், பாட வேறுபாடுகளும் முழுநிலையில் தொகுக்கப் பெற வேண்டும். 'மூலபாட ஆய்வியல் தமிழில் வர வேண்டும். இதில் ஈடுபாடும், புலமையும் மிக்க அறிஞர் இத்துறையில் ஈடுபட்டு அனைத்துப் பண்டை இலக்கியங்களுக்கும் முறையான மூலபாடம் காணும் முயற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும். இம்முயற்சி தமிழிலக்கிய வரலாற்றின் காலக் கணிப்பிற்கும், வரலாற்று மொழியியல் ( ) ஆய்விற்கும் துணையாக அமையும்'. (டாக்டர் உ.வே.சா. காப்பியப் பதிப்பு.)

1872 இல் சிலப்பதிகார புகார்க் காண்ட முதற்பதிப்பில் எட்டு காதைகளும் 1876 இல் இரண்டாம் பதிப்பில் அடுத்த நான்கு காதைகளும் வெளிவந்தன. ஆயின் முதற்பதிப்பே 1876 இல் வந்ததாக 'டாக்டர் உ.வே.சா.காப்பியப்பதிப்புகள்' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப.13). 'உ.வே.சா. தாம் [illegible] அதற்கு [illegible] யார் யார் பதிப்பித்துள்ளனர் [illegible]பதைக் குறிப்பிடுவதில்லை என்று வையாபுரிப்பிள்ளையார் குறிப்பிடுவர் . (தமிழ்ச் சுடர் மணிகள், ப. 280). ஆயின் உ.வே.சா. அவற்றை எனது சரித்திரத்தில் சுட்டியிருக்கிறார். எனவே பதிப்பிக்கும்போது இதற்கு முன்பாக பதிப்புகள் வந்திருப்பின் அவற்றை முகவுரையில் கட்டுதல் பதிப்பு வரலாறு அறிதற்கும், பதிப்புகள் பற்றிக் குறிப்பிடும்போது சில பதிப்புகள் விடுபடுவது தவிர்க்கப்படுதற்கும் உதவிபுரியும்.

சிலப்பதிகாரப் பதிப்புகள் அனைத்திற்கும் பதிப்பு வரலாறு பதிப்பு முறை, பதிப்பு வேறுபாடு முதலியன முழுமையாக ஆய்வுக்குட்படுத்தப் படும் போது இத்தலைப்பு ஒரு தனித்த நூலாக அமையும் ஆற்றலையுடையதாகிறது. தொடக்கக்காலம் முதல் இன்று வரை எழுந்துள்ள சுவடிப்

Koviloor Digital Library

டாக்டர்.டி.மகாலட்சுமி:

பதிப்பு நூல்கள் அனைத்தையும் இத்தகைய ஆய்வுக்குட்படுத்தும் போது சுவடிப் பதிப்பு வரலாற்றின் முழுமையினைப் பெறமுடியும். இதன்வழி பதிப்புகளின் வளர்ச்சி தேக்க நிலைகள், பதிப்புகள் பெருகாமைக்கான காரணங்கள், பெருகுதற்குரிய வழிமுறைகள், பதிப்புகள் ஒழுங்குபட மேற்கொள்ளப்பட வேண்டிய உத்தி முறைகள் முதலானவை பற்றிய வரையறையினை அறிதல் இயலும்.

உதவி பிற நூல்கள்:

1. காசிராசன், இரா.டாக்டர், டாக்டர் உ.வே.சா. காப்பியப் பதிப்புகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.
2. மகாலட்சுமி, டி. டாக்டர். சிலப்பதிகார ஆய்வுகள் ஓர் ஒப்பாய்வு, நர்மதா பதிப்பகம், சென்னை- 1989.
3. வையாபுரிப்பிள்ளை, எஸ். தமிழ்ச் சுடர் மணிகள், பாரி நிலையம், சென்னை - 1952.

Koviloor Digital Library

தஞ்சையில் தொண்டைமானார் [illegible]

செல்வராஜ், எம்.ஏ., எம்.எட்.,
அய்யம்பேட்டை தஞ்சாவூர் மாவட்டம்.

இன்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுச் சிறப்பினை உடைய ஊர்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்பட்டாலும் கால வெள்ளத்தில் அவை கரைந்து சிதைந்த பெயர்களுடன் உள்ளன. இன்னும் சில ஊர்கள் இருந்த இடம் தெரியாது சுவடு அழிந்து போயின. சில ஊர்கள் பெயர் ஒற்றுமையைக் கொண்டு இதுவாயிருக்கலாம் அதுவாயிருக்கலாம் என ஆய்வாளர்களிடையே பெரும் குழப்பமே உள்ளது. தஞ்சாவூர் பெரியகோயில் என்றப்படும் ராஜராஜேஸ்வரத்தில் உள்ள கல்வெட்டுகளில் பல ஊர்ப் பெயர்கள் உள்ளன. அவற்றில் 14-ஆம் நூற்றாண்டு பாண்டியர் கல்வெட்டுக் குறிப்பிடும் ஒரு ஊர் பற்றியும் அதன் இருப்பிடம் பற்றியும் இன்றைய நிலைபற்றியும் இங்கு ஆய்வு செய்யப்படுகிறது. இக்கல்வெட்டு (1) தஞ்சையை ஆண்ட திருபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான் என்ற ஸ்ரீவல்லபதேவ பாண்டிய மன்னனின் 35-வது ஆட்சி ஆண்டை சேர்ந்தது ஆகும். இப்பாண்டிய மன்னனின் அதிகாரியான சாமந்தன் நாராயணன் தொண்டைமானார் என்பவன், தஞ்சாவூரில் கிராமம் ஒன்றை புதிதாக நிறுவி, அதற்கு அகரம் சாமந்தநாராயண சதுர்வேதி-மங்கலம் என்ப் பெயரிட்டு 106 பட்டர்களை குடியமர்த்தி அவ்வூரில் சாமந்த நாராயண விண்ணகரம் என்ற விஷ்ணு கோயிலையும் எழுப்பிக்கிறான். இக்கோயில்களுக்கும், பட்டர்களுக்கும் மொத்தம் 95 வேலி நிலத்தை இருபெரும் நிலக்கிழார்களிடம் இருந்து விலைகொண்டு வாங்கி நிவந்தமாக அளித்திருக்கிறான்., அதனை குறிக்கும் கல்வெட்டு வரிகள் பின்வருமாறு:

"தஞ்சாவூரில் தொண்டைமானார் தம் பேரால் வைத்த அகரம் சாமந்த நாராயண சதுர்வேதிமங்கலத்து வேதசாஸ்திரராய் இருக்கும், சதுர்வேதி பட்டர்கள் பேர் நூற்றாறுக்கு பங்கு நூற்றாறும், இவ்வகரத்து இவர் [illegible] எழுந்தருளிக்க சாமந்த நாராயண விண்ணகர் எம்பெருமானுக்குப் [illegible]ங்கு இரண்டு ஆக பங்கு நூற்றெட்டுக்கும் "

இவ்வூர் அன்றைய தஞ்சாவூர்ப் பற்றில்இருந்தது என்பதை 'பாண்டியனுலபதி வளநாட்டு தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர் பற்றில்' விளைகொள்ளப்பட்டது என்ற கல்வெட்டுச் செய்தியின் மூலம் நன்கறிகிறோம். அன்றைய தஞ்சாவூர் இன்றைய [illegible] பகுதியை மட்டும் உள்ளடக்கிய-தன்று. உள்ளாலை என்றும் புறம்படி என்றும் விரிந்திருந்தது.

இன்றைய தஞ்சை கோட்டைக்கு மேற்கிலுள்ள சீனிவாசபுரம், மேலவெளி, களிமேடு, ராஜேந்திரபுரம் என்ற பகுதிகளும் கரந்தையும் அன்றைய தஞ்சையில் அடங்கியிருந்தன. தொண்டைமானார் இப்பகுதிக்கு இன்னும் சற்று மேற்கிலுள்ள பகுதியில் தான் புதிய கிராமத்தினை உருவாக்கி இருக்கிறார். அகரம் சாமந்த நாராயண சதுர்வேதி மங்கலம் என்ற

Koviloor Digital Library

செல்வராஜ், எம்.ஏ., எம்.எட்.,

காலப்போக்கில் மருவி அகர சாமந்தம் என்று குறைந்து இன்றும் திரிந்து சகர சாமந்தம் என்று வழங்கப்பட்டு இன்று, களிமேட்டிற்கு மேற்கிலுள்ள ஊராக சக்கர சாமந்தம் என்று வழங்கப்படுகிறது. வழக்கில் கொச்சை-யாக சக்கர சாமம் என்றும் அழைக்கின்றனர். இவ்வூர் தஞ்சை நகர எல்லையிலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது. தஞ்சைக் கோட்டை-யிலேயே ஒரு பகுதி புதிய கிராமமாக நிர்மாணிக்கப்பட்டு தொண்டை-மானார் தம் பேரால் அழைக்கப்பட்டது என்ற சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக்கருத்து ஏற்புடையதாகத் தெரியவில்லை. தொண்டை-மானார் எடுப்பித்த திருமால் கோயில் என்று குறிப்பிட சக்கர சாமந்தம் கிராமத்தில் விஷ்ணு ஆலயம் இன்று ஏதுமில்லை. ஆனால் அவ்வூரின் மத்தியில் குளக்கரையில் ஆழிக்கல் (2) ஒன்று இருந்து தற்பொழுது மராட்டா அரண்-மனை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது. உச்சியில் சக்கரம் பொறிக்கப்பட்ட இக்கல் ஞான சிங்கபெருமாள் என்ற வைணவ ஆலயத்திற்கு அளிக்கப் பட்ட நில தானம் பற்றிய சாசனக் குறிப்பாகும். தஞ்சையை ஆண்ட சேவப்ப நாயக்கனின் குமாரன் அச்சுதப்ப நாயக்கன் தமக்குப் புண்ணியமாக சிங்கபெருமாள் திருப்பணிக்கு நிலதானம் அளித்து அதன் எல்லைகளையும் அவ்வாழிக்கல்லில் குறிப்பிடுகிறான். 14-ஆம் நூற்றாண்டின் தொடக்-கத்தில் பாண்டியர் அதிகாரி எடுப்பித்த விண்ணகரில் இருந்த எம்பெருமானார் சிங்க பெருமாள் என்று 16-ஆம் நூற்றாண்டில் குறிக்கப்படுகிறார். இந்த ஆலயம் இருந்ததற்கான சுவடுகள் உள்ளன. வடவாற்றை ஒட்டிய ஊரானாலும் பெரும் குளமொன்று ஊரின் மேல்புறம் உள்ளது. இக்குளத்திற்கு மேற்புறம் பெரும் மேடாகவும் காட்டுக் கருவை காடாகவும் உள்ளது. இதற்கு அருகிலான் ஆழிக்கல் இருந்தது. எனவே இங்குதான் விண்ணகரம் இருந்திருக்க வேண்டும்.

தஞ்சை கோட்டை கீழவாசலில் யோக நரசிங்க பெருமாள் என்று அழைக்கப்படும் லட்சுமி நரசிம்ம பெருமாள் ஆலயம் உள்ளது. கி.பி. 1819-ல் தஞ்சை மராட்டிய மன்னன் இரண்டாம் சரபோஜி இவ்வாலயத்தை 3050½ சக்கரம் செலவில் புதிதாகக் கட்டி குடமுழுக்கும் செய்வித்ததாக சரசுவதிமகால் போடி ஓலைக் (3) குறிப்பு தெரிவிக்கிறது. இத்தகவல் மேற்படி கோயிலில் தமிழிலும், மராட்டியிலும் கல்வெட்டாகவும் உள்ளது. 'புரசாயிசுட்டி' (4) என்று குறிக்கப்படுவதால், ஜீர்ணமாகி இருந்த ஒரு ஆலயத்தின்று கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து இவ்வாலயத்தையும் புதிதாகக் கட்டினார் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது. பெருமாளுக்கு இக்கோயிலுக்கும், களிமேடு சக்கர சாமந்தம் பகுதிகளுக்கும் உள்ள செவிவழிச் செய்திகளையும் கூறுவதால் இம்மூலவர் சாமந்த நாராயண விண்ணகரத்து எம்பெருமானார் தான் என உறுதியாகக்

Koviloor Digital Library

றலாம். இக்கோயிலுக்கு எதிரிலுள்ள தந்தோஜியப்பா சந்திக் தெற்புறமுள்ள மிகப்பெரிய குளம் கூட இக்கால கட்டத்தில் சாமந்த நாராயணக் குளம் எனப் பெயரிடப்பட்டு பின் மருவி சாமந்தக் குளம் என்றாயிற்றோ என எண்ண வேண்டியுள்ளது.

இரண்டாம் சரபோஜி தன் காலத்தில், தஞ்சையை சுற்றிலுமுள்ள பகுதிகளில் இடிபாடுகளுக்கு உள்ளான கோயில்களின் சிவலிங்கத் திருமேனிகளையும், சிலைகளையும் பெரிய கோயில் ராஜகோபாலசுவாமி கோயில் ஆகியவற்றில் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்துள்ளதையும் அறிந்த மோடி ஆவணக் குறிப்புகளையும் காணலாம். தஞ்சைக்கு மேற்கிலுள்ள சீனிவாசபுரம், [illegible] பெருமாள் குளம் மற்றும் வடக்கிலுள்ள வடவாற்றங்கரை பகுதிகளில் இருந்த [illegible] மனிதர் மனிதனா சாசனம் பெற்ற மணிகண்டப் பெருமாள் நீலமேகப் [illegible], [illegible] பெருமாள் ஆலயங்கள் அடியோடு இடம் பெயர்ந்து [illegible] வெண்காற்றங்கரையில் கட்டப்பட்டு புது அக்ரகாரமும் கடைத்தெருவும் [illegible] கி.பி. 1777 மராட்டியர் கால மோடி ஆவணம் (5) [illegible] இவற்றைக் கொண்டு சாமந்த நாராயண விண்ணகர் எம்பெரு[illegible] சரபோஜி மன்னன் காலத்தில் இன்றுள்ள கீழவாசல் பகுதியில் கோயில் [illegible] பிரதிஷ்டை செய்யப்பட்டார் என்று முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

தொண்டைமானார்க்கு நிலம் விற்ற தென்னங் கங்க தேவன் வாழ்ந்த ஊராக தென்னங்கங்க தேவன்குடி இன்று சக்கரசாமந்தத்திற்கு மேற்கில் தென்னங்குடி என்று வழங்கப்படுகிறது. தென்னங்குடியை அடுத்துள்ள சீராளூர், தொண்டைமானார்க்கு நிலம் விற்ற மற்றொருவனாக சித்தரையனது ஊராகலாம். சித்தரையனார் என்பது மருவி சீராளூர் என்றும் பின்பு சீராளூர் என்றும் வழங்கப்படுகிறது. [illegible] முடிவிற்கு வருவது விழையன்று.

மேலும் இக்கிராமங்களில் பெரிதும் வாழும் கள்ளர் சமுதாயத்தினர் சோழ கங்க தேவர் (சோழ கங்க தேவர்) சீவத்தரையர் என்ற [illegible] அழைக்கப்படுகிறார். இது கொண்டும் தென்னங்கங்க தேவனும், சீவத்தரையனும் வாழ்ந்த பகுதி [illegible] என்றும், அவர் தம் வழித்தோன்றல்களே இப்பட்டப் பெயர்களைப் பூண்டுள்ளார் என்றும் யூகிக்கமுடிகிறது.

எனவே தஞ்சாவூர் பெரிய கோயில் [illegible] குறிப்பிடும் அகரம் சாமந்த நாராயண சதுர்வேதி மங்கலம் மருவி இன்று தஞ்சை- புதுவார் சாலையிலுள்ள சக்கர சாமந்தம் என்றும், அங்கு இருந்த [illegible] நாராயண விண்ணகரம் எம்பெருமானார் ஆலயம் சிதைவுற்றதால் [illegible] ஆலயம் கட்டி அவர் யோக நரசிம்மர் பிரதிஷ்டை செய்யப்பட்டார் என்று முடிவிற்கு வர முடிகிறது. அவ்வாலயத்தை

Koviloor Digital Library

செல்வராஜ், எம்.ஏ., எம்.எட்.,

பட்டர்களுக்கும் ஆலயத்திற்கும் தொண்டைமானாரிடம் நிலம் விற்ற தெண்டகங்க தேவன் வாழ்ந்த ஊர் தெண்கங்குடி என்றும், சீனந்தரையன் வாழ்ந்த ஊர் சீராஞ்சூர் என்றும் மருவி வழங்கப்படுகிறது என்பவை தமிழக ஊர்கள் பற்றிய ஆய்விற்கு வரம் சேர்க்கும் புதிய செய்திகளாகும்.

குறிப்புகள்:

1. SII Volume -2 No. 22

2. அமைக்கால கண்டுபிடிப்பு
   குடவாயில் பாலசுப்பிரமணியன். - தஞ்சாவூர் - பக்கம் - 88.
3. தஞ்சை சரசுவதி மகால் மோடி ஆவணம் தொகுதி.
4. செ.இராசு, தஞ்சை மராட்டியன் கல்வெட்டுகள், பக்கம் - 4.
5. தஞ்சை சரசுவதிமகால் - மோடி ஆவணம் தொகுதி . 5.

தா.வீ.

Koviloor Digital Library

TH CENTURY B.C. GREEK COIN - PAMPHYLIA-ASPENDOS

Found in Tamil Land

Prof. K.A. Thirugnanasambandam,
M.A., M.Phil

[illegible] to 5th Century B.C. to 3rd Century A.D. Tholkappian the 5th Century B.C. Tamil Grammar speaks about the existance of " Three Trinity (Chera, Chola and Pandya) in Tamilnadu. " Tirai kadal odiyum Tiraviyam Todu", (seek wealth even by crossing the foaming sea), is an old Tamil proverb. Sangam literature contains many significant references to the maritime trade and commerce and foreign contacts of Tamil land in Pre-Christian era.

In Sangam etc, Greeks and Romans were called as " Yavanas" in Tamil literature; Tamilakam had commercial contact with Yavanas. Barter system prevailed in inland trade, coins were used in maritime trade with Greece and Rome. Tamilnadu was much benefitted by the foreign trade.

Greece and Rome bought important commodities like pepper, pearl, Ivory, Muslin for gold and silver coins in Tamilnadu. That is why in Tamilnadu, we are able to get a few gold and silver coins such as Tetradrachm, Stater, Aureus, Denarious etc. Tamil inscription give evidence on the point (Medium of exchange) when they state that Roman Dinarii and Greek Drachma had been in use among Tamils. Diramnam is a Tamil form of Drachma (Tamil coins a study by Dr.R.Nagaswamy p-14)

We have literary references regarding currency terms called as Pon, Kasu, Pandil Kasu, Palingu Kasu, etc in Sangam Poems (Akam 149, 1 7 - 11, 2. Puram 343, 3. Inghu-runooru- 310, 4. Akam 315- 1.12).

The Tamil Classical poets Thayankannanar and Paranar in Agam 149, and Puram 343, had both praised our commercial contact with Yuvanas. The Chera sea port Muziri, as the thriving sea-port where the beautiful large ships, of the Yavanas bringing gold came splashing the white fom in the water of Periyar and returned lader with pepper (Akam No. 149) That is why " Pepper " was called

Koviloor Digital Library

Prof.K.A.Thirugnanasambandan,
M.A., M.Phil, Erode.

as " Yavana Priya" the most bought for a major item of export filling the west bound ships. Paran.r in his Puram verse No.343, had said sacks of pepper were brought from the houses to themarket. " Pon" received from ships as an exchange for articles sold, was brought on shore in barges at ' Muziri'. There is a reference to Yavana guards at the palac of the Pandyan Monarch Arya Ppadai Kadanda Nedunchezian (Silamb XIV . 66-67). The Padiruppattu mentions a conflict between the yavana and the Chera king, Imayavaramban Nedun Cheralaadan as a result of which the Yavanas were Vanguished and inprisoned, though the cause of the rupture is not known. " The Mullaippattu depicts the personal appearance of the yavanas, their distinctive habits as well as their amazing skill in certain arts and drafts. It adds that their spoken language was unintelligible to the Tamil and that consequently the yavanas were obliged to use gestures in order to make themselves understood (Mullaippattu L.59-66; A Social History of Tamils by K.K.Pillai. There were several sea-ports both on western and eastern coasts of Tamilagam. From the Sangam literature we learn that on the east coast the prominent ports were " Mavilangai "(Modern Mahabalipuram) 'Eayil Pattinam', the celebrated ancient Poompukar, Korkai etc.

PAMPHYLIA - ASPENDOS:

Recently the author was able to secu a rare Greek silver stater belonging to the 4th CenturyB.C. (Pamphylia-Aspendos Circa 370 - 330 B.C- AR Stater Aspendos, a Greek town in Asia Minor) The Greek AR-St ater description is given below:

Fina Place:	Mahabalipuram
Metal	Silver
Shape	Circular
Size	Diameter: 2.4 cm Thickness: 3.2 mm
Weight	9.0 grms.

Koviloor Digital Library

Prof.K.A.Thirugnanasambandam,
M.A., M.Phil, Erode.

1. Obverse:

Two wrestlers depicted grasping one another may be representation of a bronze statue in the city of Aspendos (Wrestling was an important Olympic sport activity in those days)

2. Reverse: A slinger in action with ethnic written beside. The legend " Estvediys" written in Greek is the Panphylian f form of the name Aspendos. The triskeles which was the civic badge and the symbol of the coinage.

This coin evidence proves that there was trade contact between Greek Ionians and Tamils during the middle of 4th Century B.C.

" The first Greek coins were made about 700 years before Christ by the people of Lydia and ancient kingdom of Asia Minor. They were oval pieces cut from bars of electron, a mixture of silver and gold. Each city or city state at about the same time made its own coins. No two coins were ever exactly alike since they were made by hand with hammer and a punch on an anvil. Greek coins were accepted in trade throughout the ancient world " (Coins by Richard L.Leisenring-Golden Press- New York)

Many of the large silver coins produced throughout the Greek world of the fourth to second Centuries B.C. are still considered to be the most beautiful coins ever created. (Let's Collect Coins by Ken Bressett-Whitman Publishing Company Racine Wisconsin)

A. No. 7847
ND

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 7847

தினமணி

செஞ்சி அருகே கற்கால கருவிகள் கண்டுபிடிப்பு

சென்னை, அக். 12—

செஞ்சி அருகே 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, விழுப்புரம் சாமி படையாட்சியார் மாவட்டம், செஞ்சி அருகே கோழந்தூர்குணம் என்றும் ஊரமத்தில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களைக் கண்டுபிடித்துள்ளது. இவ்வாம்விடங்களில் இதுவே முதல் முறையாகும்.

தமிழ்நாட்டில் வடபகுதிகளான சேலம், தர்மபுரி பகுதிகளில் மட்டுமே புதிய கற்கால மக்கள் வாழ்விடங்கள் இருந்துள்ளன என்ற கருத்தை மாற்றும் வகையில் இப்புதிய கண்டுபிடிப்பு அமைந்துள்ளது.

கி.மு. 3000 - 2000ம் ஆண்டுகளில் புதிய கற்கால மக்கள் சேலம், தர்மபுரி பகுதிகளிலிருந்து பெயர்ந்து செஞ்சிப் பா...

கப்பல் எப்படி இ...

பானை ஓடு ச...

சென்னை, பி...

தமிழ்நாடு அரசு தொ... ஆய்வுத்துறை இ... நாட்டில் வா... அழகன்... மாவ...

...கன்குளத்தில் ... நடை... ...அகழ்வாய்வி... ...டிக்கப்பட்டுள்ள தொல்பொ... ...ள் தமிழர் நாகரிகத்தில் சிறப்பானவும், அவர்களின் வரலாற்றிற்கு மேலும் சான்றுகளாக நிலவும் வகையிலும் அமைந்துள்ளன.

அழகன்குளம் அகழாய்வில் பண்டைத் தமிழ் எழுத்து பொறிக்...

...டன் ...ளுள் கொ... ...ல் பிராமி ...ரை ...ரில் இருந்து ...ற்... ...லம் முன்பே கண்டாக ...டிருக்கிறது. அழகன் வந்த ...கிடைத்துள்ள இப்பி... ...வை ஓடு ரௌலெட்டட் எனப்படுகிறதும் பானை ஓட்டின் வகையை ...ச்சேர்ந்தது இவை கி.மு முதல் நூற்றாண்டு முதல் கி.பி முதல் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்துள்ளன. இதன் மூலம் பண்டைத் தமிழர்களின் கடல்வழி பயணமும், பிறநாடுகளுக்கு கப்பல் மூலம் அவர்கள் சென்று வாணிகத் தொடர்புப் கொண்டிருந்ததும் உறுதிப்படுத்தப்படுகின்றன. தற்போது நடைபெற்று வரும் அகழாய்வில் மேலும் பல அரிய தொல் பொருட்கள் கிடைக்கக்கூடும் என்பது நிச்சயம்.

...வெங்கண் கடல்...

...கிடைத்த தொல்பொருள் கப்பல் உருவம் பொறிக்கப்பட்ட பானை ...இடங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

...எப்பட்ட கற்கால ...பல், சட்டியை...

...லாம். முதல் முடிவு இரவு ...ளவில் அறிவிக்கப்படலாம் எதிர்பார்க்கப்படுகிறது. ஒட்டுவிக்கை நடைபெறும் ...ல் தேர்தல்கமிஷன் விதி...கள் கடுமையாக கடைபிடி...

...ப்பை தாண்டி பொறும... ...ன்னே செல்ல அனுமதிக்... ...டோம். இரண்டாவது போட்... ...கை...

தந்த தொல்லியல் செய்திகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

தினமலர்

தந்த

தொல்லியல் செய்திகள்

தொண்டை மண்டல வரலாற்றுக் கருத்தரங்கம்
மற்றும்
தமிழகத் தொல்லியல் கழக ஏழாம் ஆய்வரங்கம்
2.6.1996, 3.6.1996
சென்னை.

வெளியீடு :
தினமலர்
161, அண்ணாசாலை, சென்னை - 2.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பதிப்புரை

தமிழகத் தொல்லியல் கழகம், தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழக நாணய இயல் கழகம் ஆகியவை இணைந்து 2.6.96, 3.6.96 ஆகிய நாட்களில் தொல்லியல் கழகத்தின் ஏழாம் ஆய்வரங்கு மற்றும் தொண்டை மண்டலக் கருத்தரங்கு ஆகியவற்றைச் சென்னையில் நடத்துகின்றன. இக்கழகத்தின் இதழான 'ஆவணம்' இதழும் அது போழ்த்து வெளியிடப்படுகிறது. இக்கழகமும் அதன் இதழும் இதுவரை வெளிவராத மற்றும் புதிய வரலாற்றுச் சான்றுகளைத் தொல்லியலார் முன்வைத்து தமிழகத் தொல்லியல் ஆய்வை வளப்படுத்தும் முயற்சியில் முனைந்துள்ளன.

'தினமலர்' நாளிதழ் தொல்லியல் செய்திகளுக்கு என்றும் முன்னிடம் கொடுத்து வெளியிட்டு வருகிறது. அவ்வகையில் கடந்த சில ஆண்டுகளில் 'தினமலர்' வெளியிட்ட செய்திகளின் தொகுப்பு இக்கருத்தரங்கைச் சிறப்பிக்கும் வகையில் வெளியிடப்படுகிறது.

கல்வெட்டுக்கள், காசுகள், சிற்பங்கள், அகழாய்வுகள் மற்றும் விழாச் செய்திகள் என்ற வகையில் செய்திகள் சுருக்கித் தரப்பட்டுள்ளன. தினமலரில் பெரும்பாலும் தொல்லியல் செய்திகள் படங்களுடன் வெளியிடப் பட்டன. எனினும் இத் தொகுப்பில் அப்படங்களை விடுத்து செய்திகள் மட்டும் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

இத்தொகுப்பு தொல்லியலாருக்குப் பயன்படுவதோடு அவர்களுக்கு ஊக்கமூட்டி ஆக்கச் செயல்களில் ஈடுபடுத்தும் என்று 'தினமலர்' நம்புகிறது.

அன்பன்
இரா. கிருஷ்ணமூர்த்தி

சென்னை
2.6.1996

Koviloor Digital Library

தினமலர் தந்த தொல்லியல் செய்திகள்

ரோமானிய மதுஜாடியில் பண்டைத் தமிழ் எழுத்துக்கள்

எகிப்து நாட்டில் செங்கடல் கரையிலுள்ள 'பெரெனிகே' (Berenike) என்ற பண்டைய ரோமானியத் துறைமுகத்தில் அமெரிக்காவின் தெலாவேர் (Delaware) பல்கலைக்கழகப் பேராசிரியர் ஸ்டீவன் ஸைட்பாதம் (Steven Side Botham) அகழ்வாய்வு செய்தபோது ஒரு மதுஜாடியின் (Amphora) சிதைந்த பகுதி கிடைத்தது. அந்த மதுஜாடியின் அமைப்பு (Dressel Type 2-4) ஆகும். இது முதல் நூற்றாண்டில் உற்பத்தி செய்யப்பட்டது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த ஜாடித்துண்டு கி.பி. 60-70 என்ற கால அளவைச் சேர்ந்த தளத்தில் (Stratum) கிடைத்துள்ளது. அதனில் 'கொற்)* ற பூமான்' என்று பண்டைய தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. தமிழின் சிறப்பு எழுத்துக்களான 'ற'கரமும் 'ன'கரமும் இந்த வாசகத்தில் வருவதால் இது தமிழில்தான் எழுதப்பட்டுள்ளது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மேலும் இதில் வரும் 'ம' கரம் தமிழ் - பிராமி முறையிலேயே உள்ளது. இந்த செய்தியைத் திரு. ஐராவதம் மகாதேவன் வெளியிட்டுள்ளார்.

16.2.96

Koviloor Digital Library

தமிழகக் கல்வெட்டு கர்நாடகத்தில் கண்டுபிடிப்பு

கர்நாடக மாநிலம் சித்ரதுர்கா மாவட்டம் சித்ரதுர்கா நகருக்கு 7 கீ.மீ. தொலைவில் தமட்டுக்கல்லு என்ற கிராமத்தில் ஒரு வீரக்கல்லில் (நடுகல்) இக்கல்வெட்டு வட்டெழுத்தில் உள்ளது. "எழூர் மோநலஞ்சாத்தான்" என்பது கல்வெட்டு வாசகம். வீரக்கல்லில் மூன்று வீரர்களின் உருவமும், இரண்டு வரியில் அவர்களைப் பற்றிய செய்தி தரும் வடமொழிக் கல்வெட்டும் உள்ளன கல் விளிம்பில் இந்த தமிழ்கல்வெட்டுள்ளது. சிற்பத்தைச் செய்த சிற்பியின் பெயராக இது இருக்கலாம். கர்நாடக மாநிலத்தில் கண்டறியப்பட்ட முதல் தமிழ் - வட்டெழுத்துக் கல்வெட்டு இதுதான். கி.பி. 5 - 6 நூற்றாண்டுகளைச் சேர்ந்ததாக இருக்கலாம். கன்னட மொழி விரிவுரையாளர் திரு. இராஜசேகரப்பா இதனை முதலில் அறிந்தார். திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் தொல்லியல் பரப்பளவாய்வுத்துறைக் கல்வெட்டாய்வாளர் டாக்டர் எஸ். சுவாமிநாதன் உதவியுடன் படியெழுத்துப் படித்து இச்செய்திகளைத் தொல்லியல் உலகத்துக்குக் கொண்டுவந்துள்ளார். இக்கல்வெட்டில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

28.3.96

Koviloor Digital Library

நடுகல் கண்டுபிடிப்பு

திண்டிவனத்திற்கு அருகேயுள்ள செண்டியம் பாக்கத்தில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்து நடுகல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கரங்களில் கத்தியும், கேடயமும், இடையில் குறுவாளும் கொண்டு அருகில் இரு பெண்களுடன் வீரனது உருவம் செதுக்கப்பட்டுள்ளது. குத்துவிளக்கு ஒன்றும் காட்டப்பட்டுள்ளது. வீரனின் இடப்புறம் நடுகல்லின் மேற்பகுதியில் ஆறுவரிகளில் கல்வெட்டுள்ளது. ஒய்மாநாட்டு அருகர் ஊரைச் சேர்ந்த இவ்வீரன் பசுக் கூட்டத்தைக் கைப்பற்றிய போரில் இறந்துபட்டுள்ளான். விழுப்புரத்தைச் சேர்ந்த ஆசிரியர் திரு.வீரராகவன் தந்த தகவலின் பேரில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இக்கல்வெட்டைப் படியெடுத்துப் படித்ததாக இயக்குநர் நடன காசிநாதன் தெரிவித்துள்ளார்.

29.6.94.

தஞ்சையில் பல்லவர்காலக் கோயில் கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு

தஞ்சையில் இராசராசசோழன் கோயில் கட்டுவதற்கு முன்பாக பிரம்மகுட்டம் என்ற பெயரில் ஒரு கோயில் இருந்தது. இவன், தான் கட்டிய கோயிலில் இக் கோயிலில் பணிசெய்த நாட்டிய மகளிரை வரவழைத்துப் பணியில் அமர்த்தியிருக்கிறான். இக்கோயில்

Koviloor Digital Library

இப்பொழுது எங்குள்ளது என்று தெரியவில்லை. இக்கோயில் முற்றிலும் அழிந்திருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. ஏனெனில் அந்கோயில் கட்டடப் பகுதியில் இருந்த கற்கள் இன்று பெரிய கோயில் மகா மண்டபச்சுவரிலும், வெண்ணாற்றங்கரையில் உள்ள நீலமேகப் பெருமாள், சிங்கப்பெருமாள் கோயில்களிலும் காணப்படுகின்றன. நீலமேகப் பெருமாள் கோயிலில் பிரம்மகுட்டத்தைக் குறிப்பிடும் துண்டுக் கல்வெட்டுள்ளது. இத் தகவலைக் குடவாயில் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

21.7.94

வாணியம்பாடி அருகே சோழர் கால நடுகற்கள்

வாணியம்பாடி வட்டம் மாரப்பட்டு கிராமத்தில் சகவருடம் 828 (கி.பி.906)ஐச் சேர்ந்த நடுகற்கள் இரண்டு கண்டறியப்பட்டுள்ளன. பாணநாட்டில் உள்ள பாக்கம் என்ற இடத்தில் பசுக்கூட்டத்தை மீட்கும் பூசலில் புக்குட்டப் பரிசட்டன் என்பவன் இறந்தான். இவனுக்காக இவனது குடும்பத்தினர்களுக்கு ..நிருவேங்கை என்ற இடத்தில் நிலங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கல்வெட்டு எழுத்துக்கள் வரிக்கு வரி கோடிடப்பட்டு அதன் நடுவே எழுதப்பட்டுள்ளன. தமிழ்நாடு மற்றும் இந்திய அரசு தொல்லியல் துறைக் கல்வெட்டாய்வாளர்கள் திரு. பூங்குன்றன், திரு. ராசவேலு

Koviloor Digital Library

ஆகியோர் உதவியுடன் படித்து வேலூர் அரசு அருங்காட்சிய காப்பாட்சியர் திரு. ஜெயராஜ் இத்தகவல்களைத் தந்துள்ளார். வேலூர் அருங்காட்சியகத்தில் இவை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

15.2.92.

1000 ஆண்டுகளுக்கு முந்தைய மகாவீரர் சிற்பம் கண்டுபிடிப்பு

மதுரை மாவட்டம் வடுகப்பட்டி என்ற ஊரில் வட்டெழுத்துக் கல்வெட்டுக்களுடன் கூடிய மகாவீரர் சிற்பம் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. இதே இடத்தில் தனிகற் பலகையில் எழுதப்பட்ட மற்றொரு வட்டெழுத்துக் கல்வெட்டு இருப்பதும் அறியப் பட்டுள்ளது. சிற்பத்தில் உள்ள கல்வெட்டு மாலைக் குளம் என்ற ஊர் மீண்டும் வரிநீக்கம் செய்யப்பட்டது காரணமாக செய்யப்பட்ட வர்த்தமானர் (மகாவீரர்) சிற்பம் என்று குறிப்பிடுகிறது. மற்றொரு கல்வெட்டால் மானசித்தநல்லூரான மாலைக்குளம் சமணமதச் சிறப்புடைய இடம் என்பதும், இங்கு திசை ஆயிரத்து ஐநூற்றுவர் என்ற வணிகக் குழுவினர் வாழ்ந்தனர் என்பதும் அத்தாணிகள் என்ற வீரர்கள் பாதுகாப்பில் இவ்வூரும், குளமும், மடமும், வழிபாட்டிடமும் இருந்தன என்பதும் தெரிய வருகின்றன. தமிழ்நாடு அரசு

Koviloor Digital Library

தொல்பொருள் ஆய்வுத்துறை, திருச்சிப் பதிவு அலுவலர் திரு.கி.ஸ்ரீதரன், திரு.மனோகரன் தந்த தகவலின்படி இக்கல்வெட்டை அறிந்து வெளிப்படுத்தினார். தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் இக்கல்வெட்டுகளின் செய்திகளை வெளியிட்டார்.

7.9.95.

சோழர் கால நடுகல் கண்டுபிடிப்பு

தென் ஆர்க்காடு மாவட்டம் பண்ருட்டி வட்டம் அவியனூர் சந்தியாத்தா கோயிலில் சோழர்கால எழுத்தமையில் நடுகல் ஒன்று ஆசிரியர் திரு. வீரராகவனால் அறியப்பட்டு இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளது. அவிவியனூரைச் சேர்ந்த பெருமன் என்ற வீரனுக்காக எடுக்கப்பட்ட நடுகல் இது. மேலும் இவ்வூரில் முதலாம் இராசராசன் மற்றும் இராசேந்திர சோழன் காலக்கல்வெட்டுகளும் கண்டறியப்பட்டுள்ளன.

7.1.93

வடஆர்க்காட்டில் நடுகற்கள் கண்டுபிடிப்பு

வடஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டம் வெங்கட் டூரில் நான்கு அரிய நடுகற்கள் ஆசிரியர் தேவராஜுலு தந்த தகவலின் பேரில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் அறிந்து

Koviloor Digital Library

படியெடுக்கப்பட்டுள்ளன. இவை 'வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி' யான சோழமன்னன் காலத்தவை. இம்மன்னன் முதலாம் இராசராச சோழனின் அண்ணனான ஆதிக்க கரிகாலன் என்று கருதப்படுபவன். முதல் நடுகல் விக்கிரமாதித்தனாகிய தின்ம செட்டியின் மகன் சாத்தையன் ஆநிரை காக்கும் பூசலில் இறந்ததைக் குறிக்கிறது. இரண்டாம் நடுகல் முதலில் சொன்ன சாத்தையனின் மகன் திருவூறல் என்பவன் இறந்து பட்டதைக் குறிக்கிறது. தந்தையும் மகனும் அடுத்தடுத்த (பூசல்) போர்களில் இறந்துள்ளனர். இருவருக்கும் ஒரே இடத்தில் நடுகல் இருப்பதால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரே இடத்தில் நடுகல் எடுக்கும் மரபு தெரிகிறது. இத்தகவலை இயக்குநர் திரு. நடன. காசிநாதன் தெரிவித்தார்.

10.1.93

ஒழுகூரில் சோழர்காலக் கல்வெட்டு கண்டுபிடிப்பு

வடஆர்க்காடு மாவட்டம் வாலாஜாபேட்டை அருகில் உள்ள ஒழுகூர் கிராமத்தில் காளீஸ்வரர் கோயில் முகமண்டபத்தில் உள்ள ஒரு தூணில் சோழ மன்னன் பார்த்திவேதிராதிவர்மனின் கல்வெட்டொன்று கண்டறியப்பட்டுள்ளது. ஒழுகூர் என்ற இவ்வூரின் பெயர் ஒழுகையூர் என்று இக்கல்வெட்டில் சொல்லப் பட்டுள்ளது. இவ்வூரைச் சேர்ந்த முக்கடம்பன் நாகன் என்ற வணிகன் நந்தா விளக்கெரிக்க நிலம் கொடுத்த செய்தி இதனில் உள்ளது. வேலூர் அரசு சோழர்

Koviloor Digital Library

அருங்காட்சியாகக் காப்பாட்சியர் திரு. காந்தியும் பள்ளி ஆசிரியர் திரு. வெங்கடேசனும் ஆய்வு செய்தறிந்து இத்தகவலைத் தெரிவித்தனர்.

21.2.94

900 ஆண்டுகளுக்கு முந்திய குமிழி துவாக்குடியில் கண்டுபிடிப்பு

திருச்சி அருகேயுள்ள துவாக்குடி பெரிய ஏரியில் ஏரியிலிருந்து வயலுக்குத் தண்ணீரை முறைப்படுத்திப் பாய்ச்சுவதற்கு வாய்ப்பாக அமைக்கப்பட்ட பண்டைய 'குமிழி' என்ற அமைப்பில் 900 ஆண்டுகளுக்கு முன் குலோத்துங்க சோழன் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுள்ளது. இக்கல்வெட்டு பாண்டிய குலாசனி வளநாட்டு மீசங்கி நாட்டுத் தூழிகுடி, என்று இவ்வூரைக் குறிப்பிடுகிறது. இவ்வூரைச் சேர்ந்த உலகவிடங்கப் பேரரையர் இந்த குமிழியை அமைத்துக் கொடையாகக் கொடுத்துள்ளார். இக்குமிழியைக் கல்லூரி மாணவர் திரு. சகாயராஜ் தந்த தகவலின்படி திருச்சி தொல்பொருள் ஆய்வுத்துறை பதிவு அலுவலர் திரு. கி. ஸ்ரீதரன் மற்றும் திரு. செயராமன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

13.5.92

Koviloor Digital Library

கல்வெட்டு வெள்ளித்திருப்பூரில் கண்டுபிடிப்பு

பெரியார் மாவட்டம் பவானிவட்டம் வெள்ளித் திருப்பூர் என்ற ஊரில் உள்ள ஈஸ்வரன் கோயிலில் கொங்குச் சோழமன்னன் வீரராஜேந்திரன் 24வது ஆட்சி ஆண்டுக் (கி.பி.1232) கல்வெட்டு படியெடுக்கப் பட்டுள்ளது. 19 வரிகளில் உள்ள இக் கல்வெட்டின் கீழ்ப்பகுதி சிதைந்துவிட்டது. 'நன்மங்கலம் சிறக்க' என்று தொடங்கும் இக்கல்வெட்டில் வெள்ளித் திருப்பூர் பெரிய நாச்சியார் என்ற இறைவிக்குத் திருக்கல்யாணத் திருவிழா நடத்துவதற்காக வடகரை நாட்டுப் பையூரைச் சேர்ந்த வெள்ளாழன் சடையன் ஆளவந்தகாமிண்டனின் மகள் நங்காண்டியார் என்பவர் கொடை கொடுத்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. அந்தியூர்ப் பள்ளி ஆசிரியர் திரு. வெற்றிவேல் தந்த தகவல்படி தொல்லியல் பரப்பாய்வுத் துறைக் கல்வெட்டாய்வாளர் திரு.கு.இராசவேல் படியெடுத்துள்ளார்.

13.2.96

கோற்கை அருகே 14 ஆம் நூற்றாண்டு கல்வெட்டுத்தூண்

கொற்கை அருகே திருச்செந்தூர் - தூக்துக்குடி சாலையோரத்தில் குலசேகரபாண்டியன் காலத்தியத்தூண் கல்வெட்டு அறியப்பட்டுள்ளது. இவனது 20வது ஆட்சியாண்டில் சூரன்குடி நாட்டு பட்டின மருதூர்

Koviloor Digital Library

ஆளுடைய பிள்ளையார்க்கு வணிக நகாந்தார் கொடைகொடுத்த செய்தியை இது குறிப்பிடுகிறது. வலங்கை மீகாமன், வீரக்கொடியார், எறிவீரப்பட்டினத்தார் ஆகியோரும் இதனில் குறிப்பிடப்பட்டுள்ளனர். தொல்பொருள் ஆய்வுத்துறை கொற்கை அலுவலர் திரு.எஸ்.ராமச்சந்திரன் இத்தகவலை தெரிவித்தார்.

15.6.96

14 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு செஞ்சி அருகே கண்டுபிடிப்பு

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிவட்டம் செல்லபிறையில் அகத்தீஸ்வரர் கோயிலில் ஒரு கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது. மூன்றாம் இராசநாராயண சம்புவராயரின் 19வது ஆண்டில் (கி.பி. 1375) திருநாமத்துக்காணியாக நிலம் கொடுக்கப்பட்ட செய்தியும், சோணாடு கொண்டான் திருவீதியில் அஞ்சினான் புகலிடம் இருந்த செய்தியும் இக்கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ளன. வேலூர் அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியர் திரு. காந்தி, காவேரிப்பாக்கம் ஆசிரியர் திரு. வெங்கடேசன் ஆகியோர் இத்தகவலைத் தெரிவித்தனர்.

6.1.94

Koviloor Digital Library

சம்புவராயர் கல்வெட்டு கண்டுபிடிப்பு

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் படைவீட்டுப் பகுதியில் இராமநாதபுரம் என்ற ஊரில் டி.வி.எஸ் நிறுவனத்தின் தொல்லியல் ஆய்வாளர் திரு. ரா. சேகர் வென்று மண்கொண்ட சம்புவராயர் (கி.பி.1322-1339) கல்வெட்டொன்றைக் கண்டறிந்துள்ளார். பூண்டி என்ற ஊரில் இருந்த படைவீட்டில் 'வீரசம்ப விண்ணகர எம்பெருமான்' என்ற சிங்க பெருமாள் கோயிலுக்கு நிலங்களும் வரிவருவாய்களும் கொடையாகக் கொடுக்கப்பட்டதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கோயில் டி.வி.எஸ் நிறுவனத்தின் ஸ்ரீ வேணு கோபாலசாமி கைங்கரியம் டிரஸ்டினால் திருப்பணி செய்யப்பட்டு வருகிறது. இக்கல்வெட்டினைத் தொல்லியல் பரப்பாய்வுத் துறைக் கல்வெட்டாய்வாளர் திரு.கு.இராசவேல் படியெடுத்துள்ளார்.

3.7.95.

படைவீட்டில் புதிய கல்வெட்டு

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் போளூர் வட்டம் படைவீட்டில் உள்ள மலைக் கோட்டையில் 4வது வாயிலின் இடப்பக்கப் பாறையில் ராஜகம்பீர சம்புவராயரின் கல்வெட்டு இருப்பது சென்னைப் பல்கலைக்கழக தொல்லியல் துறையினரால் கூனம்

Koviloor Digital Library

அறியப்பட்டுள்ளது. கோட்டையின் கட்டுமானப்பணிக்கு உதவிய கருமான், தச்சன் ஆகியோருக்கு வரிச்சலுகை அளிக்கப்பட்டதை இக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. கல்வெட்டின் காலம் கி.பி. 1247 ஆகும். இன்று படைவீட்டில் உள்ள சம்புவராயர் கல்வெட்டு இது மட்டுமே.

23.11.93

கல்வெட்டில் கூத்தாடி ஓவியம்

தென்னார்க்காடு மாவட்டம் திருஞ்சி வட்டம் வடவெட்டி கிராமத்தில் ஒரு பெரிய பாறையின் அடிப்பகுதியில் நடனமாடும் நங்கையின் கோட்டுருவத்துடன் கல்வெட்டொன்று ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தை சேர்ந்த டாக்டர் தசரதன் புலவர் கண்ணையன் ஆகியோரால் கண்டறியப்பட்டுள்ளது. திம்மராய உடையார் காலத்தில் தேவனூர் ஏக்கவாதேவி அம்மன் பூசையின் போது கூத்தாடும் மாணிக்கத்தாளுக்கு மானியமாக 200 குழி நிலம் கொடுக்கப்பட்டது என்பது இக்கல்வெட்டின் செய்தியாகும். இக் கூத்தாடும் நங்கை மூக்குத்தி, வரிச்சேலை மார்புக்கச்சை, குஞ்சங்கள் அணிந்து காணப்படுகிறாள். இக்கல்வெட்டும் கோட்டுருவமும் விஜயநகரர் காலத்தியவையாகும்.

10.11.92

Koviloor Digital Library

[illegible]ட்டியில் பழங்கால தமிழ்ச் செப்பேடு கண்டுபிடிப்பு

பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டம் கூனம்பட்டி மாணிக்கவாசகர் மடத்தில் மைசூர் சிக்க கிருஷ்ணராச உடையார் (1734-1766) காலத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ்ச் செப்பேடுகள் கண்டறியப்பட்டுள்ளன. இவை 5.8.1747 மற்றும் 23.9.1763 ஆகிய நாட்களில் முறையே 72 மற்றும் 95 வரிகளில் எழுதப்பட்ட வையாகும். முதல் செப்பேடு கோவைநகர் கிருஷ்ணராசப் பேட்டையில் நான்கு திசை ஐம்பத்தாறு தேசத்து எட்டுவகைப் பல பட்டக்காரர் என்ற வணிகர்கள் எடுத்த முடிவாகும். திருச்சி மாவட்டம் குளித்தலை அருகில் உள்ள வட்டோக்கி என்ற ரத்தினகிரிமலை இறைவனுக்கு வணிக வருவாயில் ஒரு பகுதி கொடையாக கொடுக்க முன்வந்துள்ளனர். சவுளி, நூல், புகையிலை, பாக்கு, மஞ்சள், அரக்கு, சந்தனம், வெல்லம், வெற்றிலை, கற்பூரம், உப்பு ஆகிய வணிகப் பொருட்கள் பொதி, மூலைப்பொதி, தலைச்சிமிடுமுடிச்சு என்ற மூவகையாக அளவிடப்பட்டு வரிவசூலிக்கப்பட்டு வீரராயன் பணமாகக் கொடை கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது செப்பேடு பெருந்துறை வட்டம் விசயமங்கலம் 5 பங்கு கவுண்டர்கள் கூனம்பட்டி மாணிக்க வாசகர் மடத்துக்கு 16 வள்ளக்காடு [illegible]ஸ்தீரனமுள்ள நிலமானியம் கொடுத்ததைச் சொல்கிறது. இச்செய்திகளைத் தஞ்சைத் [illegible]ப் பல்[illegible]லக்கழகக் கல்வெட்டில் துறைப் ஆய்வு

Koviloor Digital Library

பேராசிரியர் புலவர் செ. இராசு மற்றும் டாக்டர் கா. ராசன் ஆகியோர் தெரிவித்தனர்.

4.9.94

திருக்கோவிலூர்த் தங்கப் புதையல்

தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோயிலூர் அருகே மதுரா கோட்டகம் என்ற கிராமத்தில் விவசாயத்திற்கு நீர்க்குழாய்கள் போட மண்வெட்டியபோது 193 தங்கக் காசுகள் கிடைத்துள்ளன. எடுத்தவர்கள் பங்கிட்டுக் கொண்ட செய்தியறிந்து தாசில்தார் இவற்றைக் கைப்பற்றியுள்ளார். இவை முழுதும், 1 கிலோ 396 கிராம் எடையுள்ளவை. இவை ரோமானியக் காசுகளாகும். சில காசுகள் சரடுகளில் கோர்த்து அணியாக அணியப்பட்டவை. புழக்கத்தில் இல்லாத காசுகளை உளியால் சிறுவெட்டுவெட்டிக் கோடிட்டிருப்பர். இவற்றில் அக்கோடுகள் இல்லை. இவை 'அவுரியஸ்' எனப்படும் காசுகளாகும் கி.பி.முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவை. சிலவற்றில் நீரோவின் (கி.பி. 54-68) உருவம் உள்ளது. பேரரசன் டாமிட்டியன் உறவுப் பெண் இவிலியா அகஸ்டா வெளியிட்ட (கி.பி.92) தோகை விரித்தாடும் மயில் உருவமுடைய காசுகளும் இதனில் உள்ளன. அந்தோணியஸ் பயஸ் (கி.பி.138 - 161) வெளியிட்ட பெண் உருவமுள்ள காசுகளும் உள்ளன. நீரோ மற்றும் அக்ரிபானா, இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கும் உருவமுள்ள காசுகளும் (கி.பி.54) இதனில் உள்ளன. இக்காசுகளை

Koviloor Digital Library

செய்த திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி இத்தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

27.9.92, 5.10.92

பருந்து உருவம் பொறித்த அரியநாணயம்

பருந்து உருவம் பொறித்த காசு ஒன்றினைச் சங்ககாலச் சோழர் நாணயங்களில் ஒன்றாக திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டுள்ளார். இக்காசினைக் கரிகாலச் சோழன் காலத்தியது என்று வெளிப்படுத்தியுள்ளார். இது பற்றிக் குறிப்பிட்ட திரு.பி.எல். சாமி அவர்கள் இது அரியதொருகாசு என்றும் புறப்பாடலில் (224) பருந்துருவில் வேள்விச் சாலை அமைப்பு ஒன்று குறிப்பிடப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

18.8.93

தரங்கம்பாடியில் வெள்ளி நாணயம் கண்டுபிடிப்பு

பொறையாறு பேராயர் மாணிக்கம் லுத்தான் கல்லூரி முதல்வர் பேராசிரியர் அருள் மரியநாதன் உத்தமசோழன் கால வெள்ளிக்காசு ஒன்றைச் சேகரித்துள்ளார். இது கல்லூரி முதல்வர் நாணயத் தொகுப்பில் சேர்க்கப் பட்டுள்ளது.

26.5.94

Koviloor Digital Library

தேங்கனிக்கோட்டை அருகே முடி கொண்ட சோழன் நாணயங்கள்

தர்மபுரி மாவட்டம் தெங்கனிக் கோட்டை அருகே தொட்ட மஞ்சு என்ற கிராமத்தில் புதையலாக இரண்டு தங்கக்காசுகள் கிடைத்துள்ளன. இவற்றில் முடிகொண்ட சோழன் என்று இருபுறமும் விளிம்புப் பகுதியில் வட்டமாக தமிழ் மற்றும் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. நடுவில் அமர்ந்த புலி, செங்குத்தாக மீன் ஆகிய உருவங்கள் உள்ளன. 4.4 கிராம் எடையும் 1.7 செ.மீ விட்டமுள்ள இக்காசுகள் இராசேந்திர சோழன் காலத்தில் (கி.பி. 1012-44) வெளியிடப்பட்டவை என்று கருதப்படுகிறது. தற்பொழுது சென்னை அரசு அருங்காட்சியக நாணயப் பிரிவில் இவையுள்ளன.

3.10.92

சீனக் காசுகள்

நாகை மாவட்டம் தரங்கம் பாடியில் தொல்பொருள் ஆய்வுத்துறையின் பராமரிப்பில் உள்ள டேனிஷ் கோட்டை அருங்காட்சியகத்திற்கு நடுவில் சதுரத்துளையுடைய வட்டமான சீனக் காசுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை கி.பி. 13 முதல் 17 ஆம் நூற்றாண்டுவரை தமிழகத்துடன் சீன வாணிபம் நிகழ்ந்ததை வெளிப்படுத்துவனவாகும்.

22.9.94

Koviloor Digital Library

திருவள்ளுவர் உருவமுள்ள தங்க நாணயம்

கல்கத்தா மற்றும் இலண்டன் மியூசியங்களில் இரண்டிரண்டாக நான்கு தங்கக் காசுகள் உள்ளன. இவற்றில் ஒரு முனிவர் ஆசனமிட்டு அமர்ந்திருக்க அவரது தலைக்கு மேலாக ஒரு குடையும், எதிராக ஒரு சிக்குப் பலகையில் நூலும் உள்ளன. முனிவர் மேலாடையின்றி இடையில் வேட்டியைத் தட்டுச் சுற்றாகச் சுற்றி அமர்ந்துள்ளார். இந்த நாணயம் கிழக்கிந்திய கம்பெனியால் சென்னை புனித ஜார்ஜ் கோட்டை நாணய சாலையிலிருந்து வெளியிடப் பட்டிருக்கிறது. இங்கு, தங்கத்தில் நாணயம் வெளியிடுவது 1807 ல் தொடங்கி 1817ல் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்த காலகட்டத்தில் எல்லீஸ் துரை என்பவர் சென்னையில் பண்டாரகாரியம் கமப்பவராக (கருவூலப் பொருளாளர்) இருந்திருக்கிறார். இவர் திருவள்ளுவரிடம் மிக்க ஈடுபாடுடையவர். திருக்குறளின் ஒரு பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். 'இருபுனலும்' என்று தொடங்கும் திருக்குறளை மேற்கோள்காட்டி சென்னையில் குடிநீர் வசதிக்காக 27 கிணறுகள் அரசு செலவில் தோண்டியவர். இவரைப் பற்றிய [illegible] கல்வெட்டுகளிலும் திருவள்ளுவரிடம் இவர் கொண்டிருந்த ஈடுபாடு எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. எனவே இவர் கருவூலப் பொருளாளராக இருந்தபோது அச்சிடப்பட்ட மேற்சொன்ன தங்கக் காசுகளில் உள்ள உருவம் திருவள்ளுவர்

Koviloor Digital Library

உருவமாகவே இருக்க வேண்டும் என்ற தகவலை திரு ஐராவதம் மகாதேவன் திருப்பதியில் நிகழ்ந்த தென்னிந்திய நாணயவியல் கருத்தரங்கில் தெரிவித்தார்.

1.3.94

கப்பல் எப்படி இருந்தது? பானை ஓடு கண்டுபிடிப்பு

இராமநாதபுரம் மாவட்டம் அழகன் குளத்தில் அகழாய்வில் கிடைத்த பானை ஓட்டில் கப்பலின் படம் கீறலாக வரையப்பட்டுக் கிடைத்திருக்கிறது. இந்தப் பானை ஓடு ரௌலட்டட் வகையினது ஆகும். இவ்வகை ஓடு கி.பி. முதல் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்துள்ளது. இக் கப்பல் பாய்மரங்கள், துடுப்புகள் மற்றும் சுக்கானுடன் காணப்படுகிறது. ஏறுவதற்கு ஏணிகள் காணப்படுகின்றன. அழகன் குளம் அகழாய்வில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையினர் பண்டைத் தமிழ் எழுத்துப் பொறித்த பானை ஓடுகளையும் கண்டெடுத்துள்ளனர். இவ்வகழாய்வு இத்துறை இயக்குநர் நடனகாசிநாதன் வழிகாட்டலில் தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் திரு.அ.அப்துல் மஜீத் மேற்பார்வையில் நடந்து வருகிறது.

24.2.96

Koviloor Digital Library

13 ஆம் நூற்றாண்டுப் படகு

இங்கிலாந்தில் பர்மிங்காமில் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த படகு ஒற்றைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் ஒருவாரம் முன்பு பூமிக்கடியில் இருந்து வெற்றிகரமாக எடுத்தனர். பல சரித்திர தகவல்கள் இதன் மூலம் அறியவரும் என்று தொல்லியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

31.8.95

சாதவாகனர் காலத் துறைமுகம் கண்டுபிடிப்பு

நெல்லூர் மாவட்டம் சுவர்ணமுகி, பொன்னேரி ஆற்றுப் பள்ளத்தாக்கில் கொத்தபட்டினம் அருகே ஒரு துறைமுகம் இருந்ததற்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. வெளிநாட்டுப் பானை ஓடுகள் இங்கு கிடைக்கின்றன. கப்பல்கள் தங்குவதற்காகக் கடலிலிருந்து ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய் இந்நகரத்தில் அமைந்திருந்த தடயங்களும் அறியக் கிடைக்கின்றன. இத்தகவலை திருப்பதி வெங்கடேஸ்வரர் பல்கலைக்கழகக் துணைப்பேராசிரியர் திரு.கே.பி.ராவ் வெளியிட்டுள்ளார்.

10.6.93

Koviloor Digital Library

கடல் வளத் தொல்பொருள் ஆய்வுக்கு சென்னையில் மையம் துவக்கத் திட்டம்

இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் சார்பில் கடல்வளத் தொல்பொருள் ஆய்வுப் பயிற்சி முகாம் மற்றும் கருத்தரங்கு ஆகியவை நிகழ்ந்தன. கூடுதல் இயக்குநர் திருமதி அசலாமவுலிக் பயிற்சியைத் தொடங்கி வைத்தார். பேராசிரியர் டாக்டர் கே.வி.ராமன் கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார். திருமதி அசலாமவுலிக் சென்னையில் கடலாய்வுத் தொல்பொருள் ஆய்வுமையம் அமைக்கத் திட்டமிட்டப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார். புவியியல் துறை உதவி இயக்குநர் திரு பவுடிக் தலைமை தாங்கினார்.

25.4.95

பூம்புகார் கடலடியில் கட்டப்பட்ட பகுதிகள் ஆய்வில் கண்டுபிடிப்பு

தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையும் கோவா தேசிய கடலாய்வு நிறுவனமும் 1995 முதல் கடலினுள் மறைந்த சோழர்களின் பூம்புகார் நகரை அறிய ஆய்வு நடத்தி வருகின்றன. சைடு ஸ்கேன் சோனார், பாட்டம் புரொபைலர், எக்கோசவுண்டர், கடலுக்கடியில் செல்லும் ஸ்கூட்டர், சேட்டிலைட் உதவியுடன் இயக்கப்படும் குளோபல் பொசிஷன் பிக்சிங் கருவி முதலிய அதிநுட்பக்கருவிகள் ஆய்வுக்கு பயன்படுத்தப்

Koviloor Digital Library

பட்டுவருகின்றன. ஆழ்கடலில் 76 அடி ஆழத்தில் கரையிலிருந்து 6 கி.மீ. தொலைவில் செம்புறாங் கல்லால் ஆன கட்டடப் பகுதிகள் இருப்பது தற்பொழுது அறியப்பட்டுள்ளன. காவிரி ஆறு கடலில் முன் கலந்த இடத்தை அறிய கடலினுள் ஆற்றின் போக்கு குறித்த ஆய்வு நிகழ்த்தப்பட்டது. ஆற்றுப் போக்கின் இறுதியில் இக்கட்டடப் பகுதிகள் அறியப்பட்டிருக்கின்றன. மற்றொரு பகுதியில் வாணகிரியிலிருந்து 4 கி.மீ. தொலைவில் கடலினுள் மூழ்கிய கப்பலின் பகுதிகளும், துப்பாக்கி மருந்து நிறைந்த 4 பெட்டிகளும் பெரிய துப்பாக்கியும் 80 முதல் 90 வரையிலான ஈயக் கட்டிகளும் அறியப்பட்டுள்ளன. இத்தகவல்களைத் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. நடன. காசிநாதன் தெரிவித்தார்.

12.3.95

சென்னையில் பௌத்த சிற்பம் கண்டுபிடிப்பு

சென்னை திருவல்லிக்கேணி எல்லையம்மன் கோயிலில் கி.பி. முதல் அல்லது 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பௌத்தச் சிற்பத் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரண்டு வரிசையில் மூவர் மூவராக ஆறு அடியார்கள் கூப்பிய கரங்களுடன் நடந்து செல்வது போலச் சிற்பம் உள்ளது. மேலாடையின்றி இடைக்கச்சை அணிந்த நிலையில் காதுகளில் வட்டக்குழைகளும் கைகளில் கடகமும் அணிந்து இவர்கள் காணப்படுகின்றனர். தொல்பொருள்

Koviloor Digital Library

ஆய்வுத்துறை கல்வெட்டாய்வாளர் திருமதி. ஆர். வசந்தகல்யாணி இச் சிற்பத் தொகுதியைக் கள ஆய்வின்போது கண்டறிந்துள்ளார்.

6 ஆம் நூற்றாண்டுச் சிவலிங்கம் குஜராத்தில் கண்டுபிடிப்பு

குஜராத் மாநிலம் பரோடா அருகே தபோய் என்ற கிராமத்தில் மைத்ரிக மன்னர்கள் காலத்திய தாந்திரிக சிவலிங்கங்கள் 21 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு லிங்கம் சதுரவடிவில் நான்கு கால்கள் இணைக்கப்பட்டதாக உள்ளது. இவை கருப்புக் கல்லால் செய்யப்பட்டவை. இவற்றின் காலம் ஆறாம் நூற்றாண்டாகும். இத்தகவலை அம்மாநிலத் தொல்பொருள் ஆய்வாளர் திரு. சுந்தரவியாஸ் வெளியிட்டுள்ளார்.

7.1.93

துர்க்கை சிலைகண்டுபிடிப்பு

தென்னார்க்காடு மாவட்டம் செஞ்சி வட்டம் சிங்கபுரம் என்ற ஊரில் பல்லவர்காலத்துர்க்கை சிற்பம் ஒன்றினைத் தொல்லியல் துறை துணை இயக்குநர் திரு தாமோதரன் மற்றும் கல்வெட்டாய்வாளர் திரு ராமமூர்த்தி ஆகியோர் கண்டறிந்துள்ளனர். திரிபங்கநிலையில் சங்கு, சக்கரம், வாள், கேடயம், வில், அம்பு, குறுவாள் கொண்டு [illegible]

Koviloor Digital Library

மற்றும் சிங்கத்தின் உருவங்களும் காலடியில் அடியவர்களும் உள்ளனர். 4 அடி உயரமுள்ள இச் சிற்பம் பலகைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக உள்ளது. இந்தகவலை இயக்குநர் நடன காசிநாதன் தெரிவித்தார்.

18.12.92

அரிய தெய்வச் சிறபம் கண்டுபிடிப்பு

தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டம் ஆனாங்கூர் என்ற கிராமத்தில் பல்லவர் காலத்தைச் சேர்ந்த முருகன் (அல்லது) இந்திரனின் சிற்பம் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வூரில் தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனின் கல்வெட்டும் உள்ளது. மேலும் கஜலெட்சுமி, துர்க்கை, விஷ்ணு சிற்பங்களும் இங்கு கண்டறியப்பட்டுள்ளன.

19.8.92

தஞ்சையில் கற்சிலை கண்டுபிடிப்பு

தஞ்சையில் நிகழும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் தஞ்சை சிவகங்கை பூங்காவில் விரிவாக்கப்பணி நிகழந்தது. மண் அகற்றும் போது கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த "ஜேஷ்டா தேவியின் சிற்பம்" மண்ணுக்கடியிலிருந்து கிடைத்துள்ளது. ஜேஷ்டாவின் இருபுறமும் 'காந்தம்' மற்றும் சேடிப்பெண்

Koviloor Digital Library

உள்ளனர். மாநகராட்சித் தனி அலுவலர் இச்சிலையை மாநிலத் தொல்பொருள் ஆய்வுத்துறையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துவருகிறார்.

17.12.94

அரிய மகாவீரர் சிற்பங்கள் காவேரிப்பாக்கம் அருகே கண்டுபிடிப்பு

வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் காவேரிப்பாக்கம் அருகில் ஈராளச்சேரி, மற்றும் அமராபுரம் என்ற ஊர்களில் மகாவீரர் சிற்பங்கள் ஆர்க்காடு தொல்பொருள் ஆய்வுத் துறை அருங்காட்சியாகக் காப்பாட்சியர் திரு.து.துளசிராமன் மற்றும் பள்ளி ஆசிரியர் திரு. ப. வெங்கடேசன் ஆகியோரால் அறியப்பட்டு ஆர்க்காடு அருங் காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. ஈராளச்சேரி மகாவீரர் சிற்பம் 1.30 மீட்டர் உயரமுடையது. பலகைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக மகாவீரர் ஆடையேதுமின்றி கால்களை மடித்து அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளார். ஒளிவட்டமும், முக்குடையும் தலைப்பகுதியில் உள்ளன. இது கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அமராபுரம் சிற்பத்தின் முகம் சிதைந்துள்ளது. பொதுமக்கள் இதனைத் தலைவெட்டி சாமி என்று அழைக்கின்றனர். இது கி.பி. 9 ஆம் நூற்றாண்டை சேர்ந்தது. இப்பகுதியில் இசையனூர், அமணந்தாங்கல், பஞ்ச பாண்டவமலை

Koviloor Digital Library

ஆகிய இடங்களிலும் சமண சிற்பங்களும் கல்வெட்டுகளும் உள்ளன. இடைக்காலத்தில் சமணமதம் இப்பகுதியில் சிறந்து விளங்கியதை இவை காட்டுகின்றன.

12 ஆம் நூற்றாண்டுக் கற்சிலைகள் அமராவதி ஆற்றில் கண்டுபிடிப்பு

கரூரிலிருந்து 10 கி.மீ தொலைவில் உள்ள அச்சபுரம் கிராமம் அமராவதி ஆற்றங் கரையில் லாரிகளில் மணல் எடுக்கும் போது 4 அடி ஆழத்தில் விஷ்ணு, தட்சிணாமூர்த்தி, விநாயகர், முருகன், அன்னையர் எழுவர் ஆகிய 17 சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை கி.பி. 12 முதல் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு வரையிலானவை. அன்னையர் எழுவர் சிற்பத்தொகுதி ஒரே பலகைக் கல்லில் வடிக்கப்பட்டது. தற்பொழுது மூன்று துண்டுகளாக உடைந்துள்ளது. இச்சிற்பங்கள் இவ்வூரில் ஒரு கோயில் இருந்து அழிந்ததைக் காட்டுகின்றன. இவை தற்பொழுது திருச்சிராப்பள்ளி அரசு அருங்காட்சியகத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

7.12.95

Koviloor Digital Library

சோழர் காலச் சிலை பிடிபட்டது.

திருடப்பட்டு விற்பனைக்காக இருவர் வைத்திருந்த ஒரு சிலை புதுவையில் பிடிபட்டது. பஞ்சலோகத் தாலான இது கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் செய்யப்பட்ட உமாமகேஸ்வரியின் சிலையாகும். இச்சிலை ஒருவேளை பூமிக்கடியில் புதைக்கப்பட்டிருந்த சிலையாக இருக்கலாம். கோயில்களில் சிலைகள் திருடப்படுவது மட்டுமல்லாமல் தரைக்கடியிலிருந்தும் தற்செயலாகக் கிடைத்து அரசுக்கு தெரிவிக்கப்படாமல் விற்பனைக்கு வருவதுண்டு. இந்த குறிப்பிட்ட சிலையின் காலமும் தொன்மையும் சென்னைப் பதிவு அலுவலர் திரு. மா. சந்திரமூர்த்தியால் தெரிவிக்கப்பட்டன.

8.7.95

13 ஆம் நூற்றாண்டுச் சாமி சிலைகள் கண்டுபிடிப்பு

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் படவேடு, சம்புவராயச் சிற்றரசின் தலைநகரமாகும். இங்கு இருந்து அழிந்து போன அம்மையப்பர் கோயிலைப் புதுப்பிக்கும் போது 3 அழகிய கி.பி. 13 ஆம் நூற்றாண்டுச் செப்புத் திருமேனிகள் கிடைத்துள்ளன.

8.2.94

Koviloor Digital Library

பட்டுக்கோட்டை அருகே 8 சாமி சிலைகள் கண்டெடுப்பு

பட்டுக்கோட்டை அருகேயுள்ள கூத்தாடி வயல் கிராமத்தின் குளத்தில் மண்வெட்டும் போது 8 வெண்கலச்சிலைகள் கிடைத்தன. இவை அம்மன், விநாயகர் மகாலெட்சுமி உள்ளிட்ட சிலைகளாகும். பட்டுக்கோட்டை தாசில்தார் திரு நடராசன் இவற்றை அறிந்து பாதுகாக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளார்.

7.10.95

2500 ஆண்டு பழமையான பாறை ஓவியம் கண்டுபிடிப்பு

விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் திருக்கோயிலூருக்கு 7 கீ.மீ. தொலைவில் உள்ள நாயனூரில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பாறை ஓவியம் இருப்பதைக் கண்டறிந்துள்ளது. சுமார் கி.மு. 5 ஆம் நூற்றாண்டினதாகக் கருதத்தக்க இவ்வோவியம், செங்காவி வண்ணத்தால் பெரிய அளவில் வரையப்பட்ட ஒரு ஆட்டின் ஓவியமாகும். பண்டையத் தமிழகத்தில் குறும்பர்கள் ஒருவகை மலையாட்டை வளர்த்துள்ளனர். பண்டைய இலக்கியங்கள் 'வரையாடு' என்று இவற்றைக் குறிக்கின்றன. இவ்வோவியத்தில் உள்ள ஆடு இவ்வகை ஆடாக இருக்கலாம்.

9.5.94

Koviloor Digital Library

4 ஆம் நூற்றாண்டு ஜாடிகள் திருவேற்காட்டில் கண்டெடுப்பு

சென்னையை அடுத்துள்ள திருவேற்காட்டில் 25 ஏக்கர் பரப்பில் ஒரு மண்மேடு உள்ளது. இங்கு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மக்கள் வாழ்ந்த தடையங்கள் கிடைத்துள்ளன. அவை பானை ஓடுகள், செங்கற் கட்டடப் பகுதிகள், உறை கிணறுகள் ஆகியவையாகும். அவற்றில் குறிப்பிடத்தக்கவை கூர்முனை ஜாடிகளின் துண்டுப் பகுதிகளாகும். இத்தகைய ஜாடிகள் காஞ்சிபுரம், அரிக்க மேடு, வசவ சமுத்திரம் ஆகிய இடங்களில் ஏற்கனவே கிடைத்துள்ளன. இவை 'ஆம்போரா' என்னும் ரோமானிய ஜாடிகள் ஆகும். சென்னையருகே ஒரு பழமையான வணிக நகரமிருந்தது என்பதை இவை வெளிப்படுத்துகின்றன. தொல்லியல் பரப்பாய்வுத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் இச் செய்தியைத் தெரிவித்துள்ளனர்.

1.1.94

கம்போடியாவில் ஒரே கோயிலில் இருவழிபாடு

ஜப்பானிய தொல்லியல் அறிஞர் டாக்டர் நொபுரு கராஷிமா தலைமையில் இந்திய தொல்லியலார் டாக்டர் கே.வி. ராமன், டாக்டர் கே.வி.ரமேஷ், டாக்டர் ஒய். சுப்பராயலு, டாக்டர் பி. சண்முகம் ஆகியோர்

Koviloor Digital Library

அடங்கிய குழு பண்டைய இந்தியாவிற்கும் கம்போடியாவுக்கும் இடையே இருந்த கலாசார தொடர்புகள் குறித்து ஆய்வு செய்து வருகிறது. இந்து மற்றும் புத்தமதவழிபாட்டுச் சின்னங்களை ஒரே கோயிலில் கொண்ட ஒருங்கிணைப்புத் தலங்கள் கம்போடியாவில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. கம்போடியாவில் பல இடங்களில் கோயில்தோறும் சமஸ்கிருத கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

அங்கோர்வாட் நகர்க்கோயிலில் இந்திய தொல்லியல் துறையால் முழுமூச்சுடன் பாதுகாப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கம்போடியாவில் சிவபிரான் கோயில்கள் பெருமளவில் உள்ளன. இராமாயண, மகாபாரதக் காட்சிகள் பல இடங்களில் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. மேருமலையை மத்தாகவும் வாசுகியை கயிறாகவும் கொண்டு அமிர்தம் கடையும் காட்சி இங்கு பெரிய அளவில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்திய நாட்டில் கூட இந்த அளவு சித்தரிக்கப்படவில்லை.

23.4.95

Koviloor Digital Library

ராஜ ராஜ சோழன் வரலாற்றுச் சான்றுகள் தஞ்சை நகரில் கண்டுபிடிப்பு

மாமன்னன் இராசராச சோழனின் அரண்மனை எங்கிருந்தது என்பது இன்று தெரியாத ஒன்று. பாண்டிய மன்னனால் தஞ்சையும் உறந்தையும் தீக்கிறையான போது அது அழிந்திருக்கலாம். சோழர் காலத் தஞ்சை நகரம் இன்றைய களிமேட்டிற்கும், ரெட்டி பாளையத்திற்குமிடையே உள்ள மேல் வெளிக் கிராமம் முழுவதும் பரவியிருந்திருக்க வேண்டும். இப்பகுதியில் சோழர்கால வீட்டுக் கூரை ஓடுகள், பானை ஓடுகள், சுடுமண் பொம்மைகள் நிறையக் கிடைத்து வருகின்றன. இத்தகவலைத் தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமியும் குடவாயில் பாலசுப்பிரமணியமும் ஆய்வு செய்து வெளிப்படுத்தியுள்ளனர்.

6.5.94

அலங்காரப் பொருள் புதையல் செங்கம் அருகே கண்டுபிடிப்பு

விஜயநகரர் காலத்தைச் சேர்ந்த செம்பால் ஆன ஒரு தோரண அமைப்பும் சில கலன்களும் திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் ஒரு கால்வாய் தோண்டும்போது கிடைத்துள்ளன. வளையம் மற்றும் சங்கிலியால் சேர்க்கப்பட்ட இலை மற்றும் சதுர வடிவத்

Koviloor Digital Library

தகடுகளையுடையதாக இந் தோரண அமைப்புள்ளது. இவை வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

28.1.94

பழைய கவர்னர் மாளிகை ரூ. 75 லட்சம் செலவில் புதுப்பிப்பு

சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள பழைய எம்.எல்.ஏ. விடுதி 1948 ஆம் ஆண்டுவரை கவர்னர் மாளிகையாக இருந்தது. இம்மாளிகை 1750 ஆம் ஆண்டு வரை அன்டோனியா -டி- மேடிரோஸ் என்ற ஆங்கிலேயப் பெண்ணுக்கு உரிமையாக இருந்தது. அதன்பிறகு கிழக்கிந்திய கம்பெனி கவர்னர் வசிப்பதற்காக வாடகைக்குப் பெற்றுப் பிறகு ஆங்கிலேய அரசால் விலைக்கு வாங்கப்பட்டதாகும். இதே இடத்தில் உள்ள தற்போதைய ராஜாஜி மண்டபம், ராபர்ட் கிளைவின் மகன் எட்வர்ட் கிளைவ் பிளாசி போர், ஹைதர் அலி மீதான போர் வெற்றிகள் நினைவாக கட்டப்பட்டதாகும். 1802ல் கிரேக்க நாட்டு கட்டடக் கலைப்பாணியில் கோல்டிங் ஹாம் என்ற இன்ஜினியர் வடிவமைத்ததாகும். இங்கு காவல்துறை தலைமை இயக்குநர் (டி.ஜி.பி) அலுவலகம் செயல்பட இருப்பதின் பொருட்டு தமிழக அரசால் ரூ. 75 லட்சம் செலவில் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

அறிவியல் மாணவர்களும் வரலாற்றினை அறிந்து கொள்ள வேண்டும்

தமிழகத் தொல்லியல் கழகத்தின் ஆறாம் ஆய்வரங்கம் பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் நிகழ்ந்தது. அப்போது கும்பகோணத்தைச் சேர்ந்த திரு சேதுராமன் குறைந்த மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கே வரலாற்றுப் பாடம் கிடைக்கிறது. அதிக மதிப்பெண் பெறும் மாணவர்கள் எவரும் வரலாற்றுப் பாடத்தைப் படிப்பதில்லை. எனவே பல்கலைக்கழகங்கள் பொறியியல், மருத்துவ அறிவியல் பாடத்திட்டத்தில் வரலாற்றை ஒரு பாடமாகச் சேர்க்க வேண்டும் என்ற கருத்தினைத் தெரிவித்தார். பாரதியார் பல்கலைக் கழகப் பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம் பேசும் போது வரலாறு தற்பெருமை பேசிக்கொள்ளவே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் வரலாற்றுச் சின்னங்களைப் பேணும் தன்மை மிகக் குறைவாகவே உள்ளது என்றார்.

20.6.95

தஞ்சை அரண்மனை மணி மண்டபத்தில் பழங்கால கட்டடம் கண்டுபிடிப்பு

தஞ்சை அரண்மனை வளாக மணிமண்டபத்தின் அடிப்பகுதியில் மூடியிருந்த மணலைத் தூர் எடுத்த போது 10 அடி ஆழத்தில் பழங்காலக் கட்டடம்

Koviloor Digital Library

இருப்பது அறிய வந்தது. இக்கட்டடம் ஏறத்தாழ 22 அடி நீளமும் 12 அடி அகலமும் இருக்கலாம். மணிமண்டபத்தைப் பாதுகாக்கும் பணி தொல்பொருள் ஆய்வுத் துறையால் எட்டாவது உலகத் தமிழ்மாநாட்டையொட்டி நிகழ்ந்து வருகிறது.

22.9.94

தஞ்சை அரண்மனையைச் செப்பனிட ரூ 61 லட்சம்

தஞ்சையில் நிகழவுள்ள எட்டாவது உலகத் தமிழ்மாநாட்டையொட்டி தஞ்சை அரண்மனை வளாகத்தில் உள்ள மணிக்கோபுரம், ஆயுதக் கோபுரம், மராட்டியர் தர்பார் கூடம். ஷார்ஜா 7 மாடிக் கட்டடம் ஆகியவை புதுப்பிக்கப்படவுள்ளன. கட்டடங்களின் தொல்லியல் நுட்பம் குலையாமல் பாதுகாக்கும் பணி மத்திய அரசின் தொல்லியல் துறைக்கு விடப்பட்டுள்ளது. இதற்காகத் தமிழ்நாடு அரசு 61 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. இத்தகவலைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. நடன. காசிநாதன் கூறினார்.

17.8.94

Koviloor Digital Library

வேலூர் கோட்டையில் அருங்காட்சியகம்

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை சார்பில் ரூ 61 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு 10.6.94 அன்று திறக்கப்படவுள்ளது. வடார்க்காடு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களில் கிடைத்த சிற்பங்கள், சுடுமண் பொம்மைகள், நாணயங்கள், ஆயுதங்கள் முதலியவை இங்கு காட்சியில் இடம் பெறும். இங்குள்ள பாதுஷா மகால், பேகம் மகால், திப்புமகால், ஐதர்மகால், கண்டி மகால் ஆகிய ஐந்து மகால்களில் இவை தனித்தனிப் பிரிவுகளாக வைக்கப்படவுள்ளன. இத்தகவலை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை சென்னைக் கண்காணிப்பாளர் திரு நரசிம்மய்யா தெரிவித்தார்.

8.6.94

பூண்டி நீர்த்தேக்கம் அருகே தொல்மாந்தர் வாழ்வகம் திறப்பு

பூண்டி நீர்த்தேக்கம் அருகே தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் தொல்பழங்கால வரலாற்றுக் காட்சிக் கூடம் உள்ளது. இவ்வளாகத்தில் ஆதி மனிதனின் வாழ்விடத்தைச் சித்தரிக்கும் வகையில் தொல்மாந்தர் வாழ்வகத்தின் மாதிரி அமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. கற்கால மனிதர்களின் வடிவங்களும் இடம் பெற்றுள்ளன. குகை போன்ற இவ்வமைப்பில் பாறை ஓவியங்களும் மாதிரியாக

Koviloor Digital Library

வரைந்து காட்டப்பட்டுள்ளன. இக்காட்சியை எம்.எல்.ஏ சக்குபாய் திறந்து வைத்தார். தொல்பொருள் ஆய்வுத்துறை நிகழ்த்திய கோடைகாலக் கல்வெட்டுப் பயிற்சி நிறைவு விழாவும் இங்கு நிகழ்ந்தது. இயக்குநர் திரு. நடன. காசிநாதன் இத்தகவல்களை வெளியிட்டார்.

வரலாற்று ஞானம் வேண்டும்

டில்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தில் ஆபரண அரங்கைத் திறந்து வைத்த பாரதப் பிரதமர் நரசிம்மராவ் வரலாற்றிவை வளர்க்க வேண்டும், நாட்டின் உயர்ந்த கலாச்சார மரபுகளைப் பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார். இவ்வரங்கில் 27 கண்ணாடிப் பெட்டிகளில் கடந்த 5 ஆயிரம் ஆண்டுகளில் இந்தியத் துணைக்கண்டத்தில் விளங்கிய ஆபரணங்களின் வடிவமைப்புகள் காலவாரியாக அமைக்கப்பட்டிருந்தன.

27.4.94

தொல்லியல் ஆய்வாளர்களுக்கு உதவித் திட்டம்

சிந்துநதிக்கரை நாகரீகத்தில் கிடைத்த முத்திரை எழுத்துக்களைப் பற்றி ஆய்வு செய்யத் தமிழ்நாடு அரசு ஒரு புதியதிட்டத்தினை அறிவித்துள்ளது. தமிழக முதலமைச்சர் பெயரில் ஏற்பட்டுள்ள இவ்வூக்குவிப்புத் திட்டத்தின்படி ஆராய்ச்சியாளர் ஒருவருக்குத் திங்கள் தோறும் 2500 ரூபாய் உதவித் தொகையாகவும்

Koviloor Digital Library

சில்லறைச் செலவுகளுக்காக 200 ரூபாயும் வழங்கப்படும். ஆண்டுதோறும் ஒரு ஆராய்ச்சியாளர் தேர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு இத்தொகை வழங்கப்படும். இவ்வாய்வு உதவித் திட்டம் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மேற்பார்வையில் நிகழும்.

27.12.93

KOVILOOR ADHEENAM
A. No. 7847
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
தமிழகத் தொல்லியல் கழகம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தமிழக நாணய இயல் கழகம்

ஆகியன இணைந்து நடத்தும்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 7847

தொண்டைமண்டல வரலாற்றுக் கருத்தரங்கமும் தொல்லியல் கழக ஏழாம் ஆய்வரங்கமும்

2, 3 – 6 – 1996 ஞாயிறு, திங்கள்

இடம் :

தொல்காப்பியர் அரங்கம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-113

Koviloor Digital Library

அன்புடையீர்,

வணக்கம்.

தொண்டை மண்டல வரலாற்றுக் கருத்தரங்கமும், தமிழகத் தொல்லியல் கழகத்தின் ஏழாம் ஆய்வரங்கமும் 1996-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 2, 3 ஆகிய நாள்களில் சென்னை, தரமணியிலுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தொல்காப்பியர் அரங்கத்தில் நிகழவுள்ளது.

தாங்கள் கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

அன்புடன்,

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
தமிழகத் தொல்லியல் கழகம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தமிழக நாணயவியல் கழகம்

Koviloor Digital Library

தொடக்க விழா

2—6—1996 ஞாயிற்றுக்கிழமை — காலை 10-00 மணி

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை	:	டாக்டர் ஜி. விஜயவேணுகோபால் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
தலைமையுரை	:	திரு. நடன. காசிநாதன் இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை
தொல்லியல் கழக வளர்ச்சியுரை	:	டாக்டர் எ. சுப்பராயலு பேராசிரியர். தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
விருந்தினர்களுக்குச் சிறப்பு செய்தல்	:	டாக்டர் இராமர். இளங்கோ இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
தொடக்கவுரை	:	டாக்டர் முத்துக்குமரன் துணைவேந்தர் (ஓய்வு), பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.
ஆவணம் இதழ் வெளியீடு	:	திரு. ஐ. மகாதேவன் பண்டைக்கல்வெட்டியல் முதறிஞர்
தினமலர் தந்த தொல்லியல் செய்திகள்-தொகுப்பு வெளியீடு	:	டாக்டர் கே. வி. ராமன் பேராசிரியர் (ஓய்வு), சென்னைப் பல்கலைக்கழகம்.
கீழ்த்திசைச் சுவடி நூலக நூல்கள் வெளியீடு	:	டாக்டர் ச. மெய்யப்பன் பேராசிரியர் (ஓய்வு), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
கருத்தரங்கப் பொதுத் தலைமை மற்றும் காட்சித் திறப்புரை	:	டாக்டர் பி. ஆர். கோபால் பேராசிரியர் (ஓய்வு), கிருட்டினதேவராயர் பல்கலைக்கழகம், ஆந்திர மாநிலம்.
நன்றியுரை	:	திரு. என். சேதுராமன் இயக்குநர், இராமன் & இராமன் லிட். கும்பகோணம்.

Koviloor Digital Library

நினைவு விழா

3—6—1996 திங்கட்கிழமை — மாலை 4-00 மணி

தலைமையுரை	:	**திரு. என். சேதுராமன்** இயக்குநர், இராமன் & இராமன் லிட்.
வரவேற்புரை	:	**திரு. கு. தாமோதரன்** துணை இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை.
ஆய்வுக்கட்டுரைத் தொகுப்புரை	:	**புலவர் செ. இராசு** பேராசிரியர், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சை.
விருந்தினர் சிறப்புச்செய்தல்	:	**திரு. அ. அப்துல் மஜீத்** தொல்லியல் துணைக்கண்காணிப்பாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.
கல்வெட்டுப் பயிற்சி சான்றிதழ் வழங்குதல்	:	**திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி** ஆசிரியர், தினமலர்.
அமரர் **தி. நா. இராமச்சந்திரன்** நினைவுப் பரிசு வழங்குதல்	:	**டாக்டர் எஸ். குருமூர்த்தி** பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்.
வாழ்த்துரை	:	**டாக்டர் இராமர். இளங்கோ** இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. **டாக்டர் பி. சண்முகம்** பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்.
நன்றியுரை	:	**திரு. சு. இராசகோபால்** சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 7847